

**தலைதூக்கும் கசிப்பு உற்பத்தி**
உரும்பிராய் பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மற்றும்.....



பக்கம் 07
**எட்டப்பட்டது சமரசம்**
ஈரானுக்கும் மேற்கு நாடுக ளுக்கும் இடையே நடை பெற்றுவரும்...



பக்கம் 13
**வன்முறை இல்லாத உலகில் பெண்கள்**



பக்கம் 24
**அசத்தியது ஆஸி.**



# உதயன்

யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

■சுடர்: 28 ■கதிர்: 363 ■வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 09, திங்கள் 25.11.2013




மழையுடன் கூடிய காலநிலை நிலவும்

# மாவீரருக்கு அஞ்சலி செய்ய கூட்டமைப்பு முயற்சிக்கும்

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் தகவல்

யாழ்ப்பாணம், நவம்பர் 25
"ஒரு காலத்தில் நாடாளுமன்றத்தில் கூட தீபமேற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அப்படியிருக்கையில் போர் முடிந்த பின்னர் இறந்தவர்களை நினைவு கூரக் கூடாது என்பது எந்த வகையில் நியாயம்? எமது உரிமைக்காகப் போராடி மரணித்த உறவுகளுக்கு அமைதியான முறையில் அஞ்சலி செலுத்த இறுதி வரை நாம் முயல்வோம்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தாயக மண்ணின் விடுதலைக்காக வித்தாகிப்போனவர்களை நினைவு கூரும் மாவீரர் நாள் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை நினைவு கூரப்படவுள்ளது. இந்த நிலையில், அன்றைய நாள் பயங்கரவாதிகளை நினைவுகூரும் நாள் என்றும், அந்த நாளில் ஆலயங்களில் மற்றும் பொது இடங்களில் விளக்கேற்றி அவர்களை எவரும் நினைவு கூர முடியாது என்றும் இராணுவத்தினரும் பொலிஸாரும் அறிவித்துள்ளனர்.

இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் இந்தத் தடை உத்தரவு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நேற்று மாலை 'உதயன்' வினவியது. இதன்போது அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

**மாவீரர் அஞ்சலி மரபார்ந்த நிகழ்வு - மாவை சேனாதிராசா**

இந்த நாடு ஜனநாயக நாடு என்றால் மக்கள் தங்கள் எண்ணங்களை - உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும், ஒன்று கூடுவதற்கும், இறந்தவர்களை நினைவு கூருவதற்கும் சுதந்திரம் உள்ளது. தமிழர் பண்பாட்டில் இறந்தவர்களுக்கு ஈமக்கடன் நிறைவேற்றுவது




21 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் ரஷ்யக் கப்பல்கள்

கொழும்பு, நவ.25
ரஷ்யாவின் 5 கடற்படைக் கப்பல்கள் கொழும் புத் துறைமுகத்தை நேற்றுவந்தடைந்துள்ளன. இந்தக் கப்பல் களை இலங்கைக் கடற்படையினர் வரவேற்றனர்.
'அட்மிரல் பான்ரெலியவ்', 'பேரேஸ் வட்', 'அட்மிரல் நெவில்ஸ்கி', 'போட்ரி க்ரிலோப்', 'பெஷிங்க' ஆகிய ரஷ்ய கப்பல்களே கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. (ங-சி)

## யாழில் மழை

யாழ்ப்பாணம், நவ.25
யாழ். குடாநாட்டில் நேற்று அதிகாலை முதல் இரவு வரை விட்டு விட்டு மழை பரவலாகப் பெய்தது.
ஆயினும் 5.6 மில்லிமீற்றர் மழையேபதிவாகியுள்ளதுஎன்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் கடமை நேர அதிகாரி பி.பிரதீபன் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்த மாதம் முழுவதும் 142.6

21 ஆம் பக்கம் பார்க்க

## மாவீரர் நாளைநினைவு கூர ஜே.வி.பி.யும் முழு ஆதரவு

### இறந்தோரை நினைவு கூருவது எல்லோரதும் உரிமை என்கிறார் ஹந்துன்நெத்தி

கொழும்பு, நவ.25
"மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க தமிழ் மக்களுக்கு முழு உரிமை உண்டு. அதேபோன்று சிங்கள மக்களும் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு முன்வர வேண்டும். இந்த நாட்டின் அரச மைப்பின்படி அனைவரும் தமக்குப் பிடித்தவற்றை செய்வதற்கு உரிமையுண்டு. மாவீரர் தினத்துக்கு பயங்கரவாதிகள்தினம் என முத்திரைக் குத்தியது இனவாத அரசியல்தான். இது பிழை யான செயல். இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் தமிழர்களின் இந்த உரிமையை அரசியல் சுயநலம் கொண்டு தடை செய்யக் கூடாது" - இவ்வாறு தெரிவித்தார் ஜே.வி.பி யின் நாடாளுமன்ற உறுப்பினரும், சகோதரத்துவத்துக்கான மக்கள் அரணின்




உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது,
"போர் முடிவடைந்து தமிழர்களும், சிங்கள

21 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்தின் கெடுபிடி முல்லையில் அதிகரிப்பு

### மக்களுக்கு பெரும் அசௌகரியம்

யாழ்ப்பாணம், நவ.25
முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகளும், கெடுபிடிகளும் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளன. முல்லைத் தீவு நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்கள் அனைத்தும் இராணுவப் பதிவின் பின்னரே அனுமதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
மாவீரர் வார நிகழ்வுகள் நவம்பர் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நினைவு கூரப்படுவதுண்டு.
இதன் காரணமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் கோட்டையாக இருந்த முல்லைத்தீவில் மாவீரர்கள் நினைவு கூரப்படலாம் என்ற அச்சத்திலேயே இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகப் பொதுமக்கள்

21 ஆம் பக்கம் பார்க்க

## இணைத்தலைமையை ஏற்றுச் செயற்படோம்

### வடக்கு முதல்வர் உறுதி

யாழ்ப்பாணம், நவ.25
மஹிந்த சிந்தனை என்ற அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இணைத் தலைமையை ஏற்றுச் செயற்பட முடியாது என்று வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பி.பி.ஸி.செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
வடக்கு மாகாண சபையை இயங்க விடாமல் செய்வதற்கு, சபை அலுவலகத்தில் பணியாற்றும் அதிகாரிகளே முட்டுக் கட்டை போடுகின்றனர்.
வடமாகாண ஆளுநராக உள்ள



ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான ஜி.ஏ. சந்திரசிறி நீக்கப்பட்டு சிவில் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்

21 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை விவகாரத்தை சிக்கலாக்க வேண்டாம்

### சர்வதேசத்திடம் கோருகிறது சீனா

யாழ்ப்பாணம், நவ.25
இலங்கை தொடர்பான சீனாவின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் இல்லை. அதே வேளை, இலங்கை விவகாரத்தில் சர்வதேசம் தலையிட்டு நிலை மையை சிக்கலாக்க வேண்டாம் என்று இலங்கைக்கான சீனத் தூதரகம் கோரியுள்ளது.
இலங்கையில் மனித உரிமைகளை உறுதிப்படுத்துமாறு சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்ததாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

21 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச ஊடகர்களை தடுத்தமை உண்மையே

### ஒத்துக் கொள்கின்றார் இராணுவப் பேச்சாளர்

யாழ்ப்பாணம், நவ.25
வட மாகாணத்தில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஏ.எவ்.பி. ஊடகவியலாளர்களை இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியது உண்மைதான் என்பதை இராணுவப் பேச்சாளர் ஒத்துக் கொண்டுள்ளார்.
இதுகுறித்து தாம் வருந்துவதாகவும், அது தொடர்பில் விசாரணை மேற் கொண்டு சம்பந்தப்பட்ட இராணுவத்தினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

21 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மனித உரிமையாளர் குழு மார்ச்சில் ஜெனிவாவுக்கு

## விக்கிரமபாகு தலைமையில்

கொழும்பு, நவ. 25
வடக்கு, தெற்கு மக்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றமை, ரத்து பஸ்வெல சம்பவம் உட்பட ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக அரசால் கட்டவிழ்த்துவிடப்படும் அடக்கு முறைகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடம் முறையிடுவதற்காக இலங்கையிலிருந்து மனித உரி மைகள் செயற்பாட்டாளர்கள் குழுவொன்று மார்ச்சில் ஜெனிவாவுக்கு பயணமாகவுள்ளது.
இந்தக்குழுவுக்கு நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும், மனித உரிமை செயற்பாட்டாளருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தலைமை வகிக்கவுள்ளார்.
இதனை நேற்று உறுதிப்படுத்திய விக்கிரமபாகு , காணாமற்போனோர்களின் உறவி னர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் அடக்கு முறைச் செயற்பாடுகள் தொடர்பிலும் உலக நாடுகளுக்கு தெளிவு படுத்தப்படும் என்றும் கூறினார்.
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் வருடாந்தக் கூட்டத் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது. இதனையொட்டி அங்கு நடைபெறும் உப குழுக் கூட்டங்களில் பங்கேற்று ,அரசின் ஜனநாயக விரோதச் செயல்கள் தொடர்பில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.
மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இலங்கைக்கு மார்ச் வரை கால அவகாசம் உள்ளது. இந்த காலக்கெடுவுக்குள் அரசு அதை செய்ய வேண்டும். இல்லையேல், மார்ச்சில் கடும் நெருக்கடிகள் ஏற்படும். அரச சார்பற்ற அமர்வுகளில் பங்கேற்று மனித குலத்துக்கு எதிராக இங்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் நாமும் விளக்குவோம் என்றும் விக்கிரமபாகு குறிப்பிட்டார்.
அதேவேளை, தனது இலங்கைப் பயணம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை, மார்ச் மாத அமர்வின்போது அறிக்கை சமர்ப்



பிக்கவுள்ளார். செப்ரெம்பரில் நடைபெற்ற பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத் தொடரின்போது அவர் இதனை உறுதிப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய – இலங்கை கடற்படைகள் காலியில் இன்று கூட்டுப்பயிற்சி

கொழும்பு, நவ. 25
காலியில் இன்று ஆரம்பமாகவுள்ள, கடல்சார் பாதுகாப்புக் கருத்தரங்கில், இந்தியக் கடற்படைத்தளபதி அட்மிரல் தேவேந்திரகுமார் ஜோஷி பங்கேற்கவுள்ளார்.
" காலி கலந்துரையாடல்" என்ற கடல்சார் பாதுகாப்புக் கருத்தரங்கை இலங்கை கடற்படை தொடர்ந்து நான்காவது ஆண்டாகவும் நடத்தவுள்ளது.
இன்று தொடக்கம் இரண்டு நாட்கள், காலியில் உள்ள வெளிச்சவீட்டு விடுதியில், நடக்கவுள்ள இந்தக் கருத்தரங்கில், இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ முக்கிய உரை நிகழ்த்தவுள்ளார்.
இந்தநிலையில், இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் தேவேந்திர குமார் ஜோஷியும் இதில் பங்கேற்கவுள்ளதாக, இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.
இந்தக் கருத்தரங்கில், இந்தியக் கடற்படைத் தளபதி, ஆசிய பசுபிக்கில் வளர்ந்து வரும் கடல்சார் ஆர்வங்கள்: ஒரு இந்திய நோக்கு' என்ற தலைப்பில், ஆய்வு ஒன்றையும் சமர்ப்பிக்கவுள்ளார்.
இவர் இந்தியக் கடற்படையின் 21வது தளபதியாக, கடந்த ஓகஸ்ட் 31 ஆம் திகதி பதவியேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
இதற்கிடையே, இந்தியக் கடற்படைத் தளபதியின் இலங்கைப் பயணம் தொடர்பாக, இந்தியா இன்னமும் அதிகாரபூர்வமாக தகவல் எதனையும் வெளியிடவில்லை.
அண்மையில், இலங்கைக் கடற்படையுடன் இணைந்து இந்தியக் கடற்படை கோவா மாநிலக் கடற்பரப்பில் நடத்திய கூட்டுப்பயிற்சி குறித்த தகவல்களையும் இந்திய பாதுகாப்பு அமைச்சு இருட்டடிப்பு செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ங-5)

# நாணயங்களை புழக்கத்தில் விடுக மத்திய வங்கி மீண்டும் கோரிக்கை

கொழும்பு, நவ. 25
பொது மக்களிடமுள்ள சில்லறை நாணயங்களை புழக்கத்துக்கு விடு மாறு மத்திய வங்கியினால் மீண்டும் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.
ஐம்பது சதம் , ஒரு ரூபா, இரண்டு ரூபா, ஐந்து ரூபா மற்றும் பத்து ரூபா என சில்லறை நாணயங்கள் மத்திய வங்கியால் புழக்கத்திற்கு விடப்பட்டுள்ள போதிலும் நாணயங்களுக்கு தற்போது தட்டுப்பாடு நிலவுவதைய டுத்தே மத்திய வங்கியினால் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
இலங்கை மத்திய வங்கியினால் இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலில் , இதுவரை புழக்கத்திற்கு விடப்பட்டுள்ள சில்லறை நாணயங்களின் எண்ணிக்கை விவரங்கள் குறிப்பிடப் பட்டு சில்லறை நாணயங்களை இழுப் பறைகளிலும் அலுமாரிகளிலும் உண்டி யல்களிலும் வைத்திருக்க வேண்டாம் எனக் கேட்கப்பட்டுள்ளது.
சில்லறை நாணயங்கள் ஆபரணங்கள் தயாரிப்பு உட்பட பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்படுவ தாகக் கூறப்பட்டாலும் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள அந்தளவு எண்ணிக்கையிலான நாணயங்களும் அப்படி பயன்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லை என்பதுதான் பலரது கருத்தாகும்.
சில்லறை நாணயங்களுக்கு நிலவும் தட்டுப்பாடு தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள பொது மக்கள், பொருள்கள் கொள்வனவு மற்றும் போக்குவரத்து உட்பட தமது அத்தியாவசிய தேவைகளின் போது தாங்கள் பாதிப்புகளையும் சிரமங்களையும் எதிர்நோக்குவதாக குறிப்பிடு கின்றனர்.
மதவழிபாட்டு தலங்களிலுள்ள உண்டியல்களிலே கணிசமான அளவு இந்தச் சில்லறை நாணயங்கள் இருப்பதால் மத வழிபாட்டு தலங்களின் நிர்வாகிகள் அவ்வப்போது உண்டியல்களிலுள்ள தொகைகளைக் கணக்கிட்டு வங்கிகளில் வைப்பிலிடுதல் அல்லது உள்ளூர் வர்த்தகர்களிடம் ஒப்படைத்து நாணயத் தாள்களாக மாற்றிக்கொள்வ தன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு ஓரளவாவது தீர்வை எட்ட முடியும் என்ற எதிர்பார்ப்பும் காணப்படுகின்றது.

# இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வழங்குக

## சுதர்சன நாச்சியப்பன் வலியுறுத்து

தமிழகத்தில் உள்ள இரண்டரை லட்சம் தமிழ் அகதிகளுக்கும் குடியுரிமையை மத்திய அரசிடமிருந்து பெற் றுத் தரும் வகையில் தமிழக கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று இந்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை இணை அமைச் சர் இ.எம்.சுதர்சன நாச்சி யப்பன் தெரிவித்துள்ளார்.
மதுரையில் நடைபெற்ற அகில இந்திய மனித உரிமைகள் பேரவையின் 121 ஆவது செயற் குழு மற்றும் பயிற்சி முகாமில் பங்கேற்ற அமைச்சர் இ.எம். சுதர்சன நாச்சியப் பன் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை பெற் றுத் தரும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் நடவடிக்கைக்கு அனைத்து தமிழகக் கட்சிகளும் துணை நிற்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இலங்கைப்பிரச்சினையில் ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு கருத்து உண்டு. அந்த அடிப்படையிலே தி.மு.க. வின் கருத் தும் இருக்கிறது.
பிரிட்டன் பிரதமர் கமரூன் பொதுநலவாய மாநாட்டுக் காக இலங்கை சென்று. அங்கு தமிழர்களைச் சந்தித்தார்.
இதனால் பிரிட்டனிலுள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கு இரு படுக்கை அறையுள்ள வீடும் ஆயிரம் பவுண்டு நிதி யுதவியும் குடியுரிமையும் கிடைக்கும் வாய்ப்புள்ளது என்றும் சுதர் சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார். (வ)

# தேவாலயத்தின் மீது கல்வீச்சு

ஊர்காவற்றுறை கரம்பன் பகு தியிலுள்ள கிறிஸ்தவ தேவா லயத்தின் மீது நேற்றுக் காலை கல்வீச்சு இடம்பெற் றுள்ளது. இதில் 15 வயதுச் சிறுமி ஒருவர் காயமடைந் துள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த தேவாலயத்தில் நேற்றுக் காலை ஆராதனை இடம் பெற்றுக்கொண்டிருந்த போதே இந்தக் கல் எறிவீச்சு இடம் பெற் றுள்ளது. இதில் ஆனந் தராசா பியூலா (வயது - 15) என்ற சிறுமியே காயமடைந் துள்ளார்.
இந்தச் சம்பவத்துடன் தொடர் புடையவர் என்ற சந்தேகத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த நபரொருவரை ஊர்காவற் றுறை பொலிஸார் கைது செய் துள்ளனர். (ங-5-4)

# வடக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபராக பூஜித ஜயசுந்தர

யாழ்ப்பாணம், நவ.25
வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராக் கடமையாற்றிய காமினி சில்வா ஓய்வு பெற்றுச் செல்லவுள்ள நிலையில், அவரது இடத்துக்கு கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர நியமிக்கப்படவுள்ளார் என்று தெரியவருகின்றது.
கிழக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு வருடங்களாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராக பணியாற்றிய பூஜித ஜயசுந்தர, எப்போதும் வடக்குக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.
கிழக்கிலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் அவருக்கான பொலிஸ் அணி வகுப்பு மரியாதை, மட்டக்களப்பு மாகாத்மா காந்தி பூங்கா சதுக்கத்தில் நேற்று இடம்பெற்றது.
இந்த அணிவகுப்பில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேவன் சில்வா, மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள்,பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ங-5-4)

# புலிகள் தமிழ் மக்களின் நாயகர்கள் இல்லையாம்

## ஹத்துருசிங்கவின் கண்டுபிடிப்பு இது

யாழ்ப்பாணம், நவ.25
தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு போதும் தமது கதா நாயகர்கள் இல்லையென்பதை வடக்கு மக்கள் உணரத் தொடங்கி விட்டனர் என்று யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.
கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள நேர் காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது
விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரம் நவம்பர் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையில் நினைவுகூரப்பட்டு வருகின்றது.
இந்த வருடம் மாவீரர் வாரம் அமைதியான காலப்பகுதியாக காணப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.
மாவீரர் வாரத்தில் குழப்ப நிலைகள் எதுவும் எற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை. இதனால் அதிகளவில் இராணுவத்தினரைக் குவிக்க வேண்டிய அவசியமும் எற்படாது.
தமிழீழ விடுதலைப்புலிகள் தமது கதாநாயகர்கள் அல்ல என்பதை வடக்கு மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள். புலிகளுக்கு ஆதரவான சிலர் மட்டும் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்- என்றார். (ங-5)

# 107 இலங்கை மீனவர்கள் இந்திய கடற்படையால் கைது

யாழ்ப்பாணம், நவ.25
இலங்கையின் அப்பாவி மீனவர்கள் 107 பேரை இந்திய கடலோரக் காவல் படை தெரிவித்துள்ளார் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள பிரதியமைச்சர் சரத்குமார குணரத்ன. அரேபியக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற 107 இலங்கை மீனவர்களையே இந்தியா கைது செய்துள்ளதாக செய் துள்ளதாகவும், இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்து வரும் நடவடிக்கைக்கு பதிலடி போன்றே இத்தகைய செய லில் இந்திய ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.
" இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழ் நாட்டு மீனவர்கள் குறுகலான பாக்கு நீரிணையில், அனைத்துலக கடல் எல்லையை மீறி நுழைந்தவர்கள்.
ஆனால், அரேபியக் கடலில் பல நாள் தங்கி மீன் பிடிக்கும் வசதியைக் கொண்ட இழுவைப் படகுகளில் சென்ற இலங்கை மீனவர்களையே இந்தியக் கடற்படை கைது செய்துள்ளது.
அவர்களை விடுவிக்குமாறு இந்தியத் தூதுவர் சின்காவிடம் கடிதம் கோரியுள்ளோம்" என்றும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.
இதேவேளை குறித்த இலங்கை மீனவர்கள் , இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்டதாலேயே தாம் கைது செய்ததாக இந்தியக் கடலோர காவல் படை குற்றம் சாட்டியுள்ளது. (த-5)

# இலங்கைக்கு அமைதிப்படையை அனுப்புவது இந்திய ராணுவ உயர் மட்டத்திற்கு தெரியாது

## முன்னாள் தளபதி மாலிக் புதிய தகவல்

கொழும்பு, நவ. 25
இந்திய இராணுவ உயர் மட்டத்துடன் ஆலோசனை நடத்தாமால்தான், இலங்கைக்கு அமைதிப்படையை அனுப்பும் முடிவை, இந்திய அரசு எடுத்தது - என்று தெரிவித்துள்ளார் இந்திய இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜெனரல் வி.பி.மாலிக்.
இந்தியாவின் இராணுவ முரண்பாடுகளும், இராஜதந்திரமும் :முடிவெடுத்தலில் ஒரு உள்ளகப் பார்வை' என்ற தலைப்பில் ஜெனரல் வி.பி.மாலிக் எழுதிய நூல் நேற்று முன்தினம் சண்டிகரில் வெளியிடப்பட்டது.
இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் தெரிவித்ததாவது:-
தேசிய பாதுகாப்புத் தொடர்பாக முடிவுகளை எடுக்கும் போது, இராணுவத்துடன் அரசியல் தலைமை கலந்தாலோசனை நடத்துவதில்லை.
சிவில் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு இடையிலான நம்பக குறைபாடு, தந்திராபாய கொள்கைகளில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.
இராணுவத் தலைமையுடன் கலந்தாலோசிக்காமல் அரசியல் தலைமைகள் எடுத்த முடிவுகள் பல சந்தர்ப்பங்களில், மோசமான விளைவுகளையே தந்துள்ளன.
அத்துடன்,இலங்கை நடவடிக்கையில் உயிரிழந்த இந்திய இராணுவத்தினருக்கு அரசியல்வாதிகள் மதிப்பளிக்கவில்லை - என்றார்.
ஜெனரல் மாலிக், 1997 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 1 ஆம் திகதி, 2000ம் ஆண்டு செப்ரெம்பர் 30ஆம் திகதி வரை இந்திய இராணுவத் தளபதியாக பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பளை மருத்துவமனை வளாகத்தில்*

# பிரதேச மருத்துவமனை டிசெம்பர் 3 இல் திறப்பு


பளை, நவ.25
பளை மருத்துவமனை வளாகத்தில் 10 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரதேச மருத்துவமனைக் கட்டடம் எதிர்வரும் டிசெம்பர் 3 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு போர் காரணமாக மருத்துவமனைக் கட்டடங்கள் அனைத்தும் சேதமடைந்தன. பிரதேச மக்களின் முயற்சியால் யு.எஸ்.எயிட்ஸ் நிறுவனத்தினர் வைத்தியசாலைக்கான புதிய கட்டடத்தை நிர்மாணிக்க நிதி வழங்கியிருந்தனர்.

இதனடிப்படையில் அமைக்கப்பட்ட வெளி நோயாளர் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, சிறுவர் விடுதி, பிரசவ விடுதி ஆகிய வற்றை உள்ளடக்கிய இரண்டு மாடிக் கட்டடத்தை மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்திய லிங்கம் திறந்து வைக்கவுள் ளார்.

பளைப் பிரதேச மக்களின் நலன் கருதி கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஏற்பாட்டில் 2004, 2010 ஆகிய காலப் பகுதிகளில் தனியார் வீடுகளில் மருத்துவமனை இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள் விடுதிகள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள் இன்னமும் அமைக்கப்படாததால் பளையிலுள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் சாவகச்சேரி அல்லது கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கு செல்லும் நிலை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வவுனியாவுக்கு பயணம் செய்த வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் குழுவினரை வவுனியா நகர பள்ளிவாசல் நிர்வாகம் வரவேற்றுக் கௌரவித்தது. (வ-10)

# எழுதுமட்டுவாள் கணேசாவில் மாணவர்கள் பெரும் அவதியில்

*கட்டடப் பற்றாக்குறையே காரணம்*



தென்மராட்சி, நவ.25
60 அடி வகுப்பறைத் தொகுதியில் 11 வகுப்புகளை நடத்தப்படும் அவல நிலை எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் காணப்படுகிறது.

2000 ஆம் ஆண்டு போர்க் காலப் பகுதியில் பாடசாலை வளாகத்தில் காணப்பட்ட மூன்று கட்டடங்கள் சேதமடைந்தன.

இந்த நிலையில் 2012 ஆம் ஆண்டு பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போது 60 அடி நீளத்துக்கு வகுப்பறைத் தொகுதி அமைக்கப்பட்டு வகுப்புகளில் கற்றல்செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகள் நடத்தப்படுகின்ற போதிலும் ஆரம்பப் பிரிவு வகுப்புகள் மர நிழல்களின் கீழேயே நடத்தப்படுகின் றன.

மழை பெய்யும் வேளைகளில் அனைத்து மாணவர்களும் ஒரே வகுப்பறைத் தொகுதிக்குள் உள்ளடக்கப்படுகின்றனர் என்று பெற்றோர் தெரிவித்தனர்.

சேதமடைந்து காணப்படும் மூன்று கட்டடங்களில் ஒன்றில் புனரமைப்புப் பணிகள் இடம் பெற்று வருகின்றன. சேதமடைந்த கட்டடத் தொகுதியில் காணப்பட்ட அதிபரின் அறை திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டு இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

# வினாகிரி தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்படும்

*மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ.25
மன்னார் பேசாலையிலுள்ள வினாகிரி தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுக்க உள்ளதாக வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து வர்த்தக வாணிப மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மேற்கு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும், அங்கத்தவர்களுக்கான வீட்டுத் திட்டத்தின் புகுமனை திறப்பு விழா கடந்த புதன்கிழமை தலைமன்னார் பட்டப்படி கிராமத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட அமைச்சர் வீட்டை திறந்து வைத்தார்.



அனைவருக்கும் வீடு என்னும் திட்டத்தின் கீழ் மன்னார் மேற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினால் கீழ் 8 லட்சம் ரூபா செலவில் ஒரு வருடத்துக்கு ஒரு வீடு வீதம் சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர்.

அரசின் உதவியில் வீட்டுத் திட்டங்கள் அமைக்கப்பட்டாலும் இவ்வாறான கிராம மட்ட அமைப்புக்களின் மூலம் வீட்டுத் திட்டம் வழங்கப்படுவது பாராட்டப்படக்கூடியது அதே போன்று ஏனைய சங்கங்களும் செயற்பட வேண்டும் என்றார்.

சங்கத்தின் நிர்வாகத்துக்குட்பட்ட பேசாலை வினாகிரித்தொழிற்சாலையின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (வ-5)

## ஒளி கிடைக்குமா எழுதுமட்டுவாழ் தெற்குக்கு?

தென்மராட்சி, நவ.25
எழுதுமட்டுவாழ் தெற்கு பிரிவுக்கான குடியிருப்புக்களுக்கு மின்சார விநியோகம் எப்போது கிடைக்கும் என மக்கள் ஆர்வத்துடன் காத்திருக்கின்றனர்.

குறித்த பிரிவுக்கு மின் விநியோகம் வழங்க வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மின் கம்பங்கள் நடப்பட்டு மின் கம்பிகளும் பொருத்தப்பட்டு இரண்டு மாதங் களாகியும் இது வரை குடியிருப் புக்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப் பட்டது.

அந்தப் பகுதியில் உள்ள குடியிருப்பு காணி ஒன்றில் மின் மாற்றி பொருத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொண்ட போது குடியிருப்பாளர் எதிர்ப்புத் தெரிவித்ததால் மின்மாற்றி இன்னமும் பொருத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



## வரணி வடக்கு பாடசாலைக்கு பெயர் வளைவு

வரணி, நவ.25
வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாலயத்துக்குப் புதிய பெயர் வளைவு ஒன்று நலன் விரும்பி ஒருவரின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. வரணி, தாவளை இயற்றாலை யைச் சேர்ந்தவரும் வெளிநாட்டில் வசித்து வருபவருமான க.நாகநாதன் என்பவரின் நிதியுதவியுடனேயே குறித்த பெயர் வளைவு அமைக்கப் பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையில் இருந்த பழைமை வாய்ந்த கட்டடக் கூரையின் பனை மரத் தொகுதிகள் மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாட சாலைக்கு வழங்கப் பட்டன.

இதற்கு பிரதி உபகாரமாகவே அதிபர் கா.கந்தசாமி மூலம் இந்த நிதி உதவி பெற்றுக் கொள்ளப்பட்டதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார். (வ-122)

## தமிழ்ச் சங்கத்தின் நாவலர் குரு பூசை



யாழ்ப்பாணம், நவ.25
நாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நேற்று ஞாயிற் றுக் கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் விழாவைச் சிறப்பாக நடத்தியது. யாழ். தமிழ்ச் சங்கத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிவகணேசன் ரெக்ஸ்ரையில் உரிமை யாளர் க.அருள்நேசன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தலைமை உரையை அடுத்து நிகழ்வில் தமிழ்ச் சங்கத் தின்தலைவர் பேராசிரியர் தி.வேல் நம்பியின் ஆரம்ப உரையும் 'நாவல ரும் தமிழ்த் தேசியமும்' என்ற தலைப்பில் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசின் உரையும், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் பட்டிமன் றமும் இடம் பெற்றன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் நூலை க.அருள்நேசனிடம் இருந்து கலாநிதி ஆறு.திருமுருகன் பெற்றுக் கொண்டார். நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். (வ-7)

# அடிப்படை வசதிகளில்லாத ஆயுள்வேத வைத்தியசாலை

*நடவடிக்கை எடுக்கக்கோரி மாநகரசபை ஆணையாளருக்கு சுபியான் கடிதம்*

யாழ்ப்பாணம்,நவ.25
யாழ்.முஸ்லிம் வீதியில் அமைந்துள்ள நூல் நிலையக் கட்டடத்தில் உள்ள யாழ்.மாநகரசபையின் சித்த ஆயுள் வேத வைத்தியசாலை போதிய வசதிகளற்ற நிலையில் இயங்குகிறது. எனவே தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு யாழ். மாநகர சபை உறுப்பினர் பி.ஏ. எஸ்.சுபியான் மாநகரசபை ஆணையாளருக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்த சுபியான் எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள் ளதாவது:-

குறித்த நூலகக் கட்டடம் கடந்தகால போர் காரணமாக இரண்டு தடவைகள் சேதமடைந்து புனரமைக்கப்பட்ட துடன் மீண்டும் நூலகமும் செயற் படத் தொடங்கியது. இது தொடர்பான கருத்துக்கள் சபையில் என்னால் முன்வைக்கப்பட்டு தீர்மானமும் நிறை வேற்றப்பட்டுள்ளது. குறித்த கட்டடச் சுற்றாடலில் பற்றைகள் வளர்ந்து விஷ ஜந்துக்களின் வாழ்விட மாக மாறியுள்ளதுடன் மல சல கூட வசதிகள், மின் விசிறிகளற்ற நிலையும் காணப்ப டுகின்றது. எனவே இவ்விடங்களை கருத்தில் கொண்டு மக்களுக்கு உதவுமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்- என்றுள்ளது. (வ-7)

**குறித்த நூலகக் கட்டடம் கடந்தகால போர் காரணமாக அரண்டு தடவைகள் சேதமடைந்து புனரமைக்கப்பட்டதுடன் மீண்டும் நூலகம் செயற்படத் தொடங்கியது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## நாகநாதர் நாகரத்தினம்

(ஓய்வுபெற்ற மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர்)

சிறுவிளான் இளவாளையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி, நாவலர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் நாகரத்தினம் நேற்று (24.11.2013) ஞாயிற்றுக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதர்- விசாலாட்சி தம்பதியரின் மூத்தமகனும், காலஞ்சென்ற மார்க்கண்டன்-ராணி தம்பதியரின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், ராஜரட்ணம், காலஞ்சென்ற சபாரத்தினம், ராஜலக்ஷிமி, திருமதி ருக்குமணி சந்திரராஜா ஆகியோரின் அன்புச் சகோ தரனும், கோபாலகிருஷ்ணனின் அன்புத்தந்தையும், சிவகுமாரியின் அன்பு மாமனும், ஜெகஜீவன் (யாழ். இந்துக் கல்லூரி), கம்சாயினி (சென் பொஸ்கோ), ஆகியோரின் பேர னும், காலஞ்சென்ற காலகண்டன், விடாகண்டன் மற்றும் திருநீலகண்டன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11. 2013) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத் தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: புஸ்பராணி நாகரத்தினம்(மனைவி)
021 222 3276

(40487.14.17)



## திருமதி புஸ்பவதி பத்திநாதன்

முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் இல. 1060 திருநகர் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி பத்திநாதர் நேற்று (24.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தினகரம்பிள்ளை- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மக ளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி-நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பத்தி நாதனின் (கணக்காளர், கரைச்சி தெற்கு, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்), அன்பு மனைவியும், அருள்நேசன் (கட்டட பொருளியலாளர்), அபூலின் (களனிப் பல்கலைக் கழக 3ஆம் வருட மாணவி), அல்சிகா (உயிரியற் பிரிவு மாணவி, கிளிநொச்சி மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதித் திருப்பலி இன்று (25.11.2013) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காக திருநகர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 1060, திருநகர் தெற்கு, கிளிநொச்சி. (40488.14) தகவல்: குடும்பத்தினர்.

**விற்பனைக்கு**

3kw
டைனமோ - 01
3kw
டைனமோவுடன்
எஞ்சின் - 01
select -II
ஸ்கூட்டர்
**077**
**5386251**

# ஓராண்டு நினைவு நாள்



## வேலுப்பிள்ளை சோதிப்பிள்ளை

மலர்வு: 08.02.1937

உதிர்வு: 06.12.2012

ஆண்டு ஒன்று ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம் அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள் நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்

இராஜ வீதி,சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. குடும்பத்தினர்.

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25.06.1978

இறப்பு 25.11.2003



## இரத்தினேஸ்வரன் சுகுமார்

(நிரஞ்சன்)

ஆண்டுகள் பத்து கழிந்தாலும்
உங்களுடைய நினைவு
எம்மை விட்டு நீங்கவில்லை
உங்கள் உயிர்தான் பிரிந்தது
எங்கள் மனதில் நீங்கள்
என்றென்றும் வாழ்ந்து
கொண்டுதான் இருக்கின்றீர்கள்...
என்றும் உங்கள் நினைவுடன்....

8 ஆம் வட்டாரம் மண்டைதீவு. குடும்பத்தினர்.

# வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



உலகின் முதற்தர கூரியர் சேவை நிறுவனங்களின் நேரடி முகவர்

15 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை

வாடிக்கையாளரின் வசதிக்கேற்ப கட்டணத்தெரிவுகள்.

- சகல நாடுகளுக்கும் மிக குறைந்த கட்டணத்தில்
- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- வெளிநாடுகளில் சுங்கத்தீர்வை விலக்கு உண்டு.



மிக குறைந்த கட்டணத்தில் அதி விரைவு சேவை எம்மிடம் மட்டுமே

**ARRUL'S (Pvt) Ltd**
International Courier & Cargo Service

இல.10 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி) Tel : 021 222 3536
இணைநிறுவனம் : இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச்சந்தி, யாழ்ப்பாணம். Tel :021 222 6113

# மரண அறிவித்தல்



## திருமதி புவனேஸ்வரி செல்வரெத்தினம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் பூனாறி மரத்தடியை வசிப்பிட மாகவும் கொண்ட செல்வரெத்தினம் புவனேஸ்வரி நேற்று (24.11.2013) ஞாயிற்றுக் கிழமை மதியம் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரெத்தினம் பத்தரின் அன்புமனைவியும் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி – அன்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான வாய்க்கால் கந்தையா - கனகம்மா தம்பதியரின் மருமகளும் ஞானகலாவதி, யோகேஸ்வரி, மகேஸ்வரன் (போதகர் ஸ்ரீபன் - ஜெபஸ்தலம் பூரண சுவிசேஷசபை கொக்குவில்), கமலேஸ்வரி, நிர்மலகுமாரி (மேஷி), விக்கினேஸ்வரி (ரெபேக்கா) காலஞ்சென்ற ஸ்ரீமுருகன் (மெக்கானிக் ஸ்ரீ) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற செல்லத்துரை பத்தர், சுந்தராம்பாள் (ரொசிற்றா), ஜெயராமன் (யாழ். பொதுசன நூலகம் வயலின் வித்துவான்), அமுதரஞ்சனா ஆகியோரின் மாமியும் நவனீதராஜா - சசிகலாதேவி (லண்டன்), ரவிச்சந்திரன், சிந்துஜா, ரவிராஜன், சுபந்தினி காலஞ்சென்ற றாஜினி மற்றும் ரஜனி, ரவீந்திரன், நோவா, பிரதீப், அக்ஷாள், கிறிஸ்ரின், கஜானா, நாகூம்பிரதீப், றோயல்பிரதீப், சாரங்கன், சைந்தவி, சாருகேசி, ஜனனி, ஜனப்பிரியன், நதுஷனன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் நளாயினி, தாட்சாயினி, ஜோய்நிசான், றோய்நிசான், றொக்ஷானா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் காலஞ்சென்ற கந்தசாமிப்பத்தரின் (உடுப்பிட்டி) சகோதரியும் மங்களம்மாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.00 மணியளவில் தகனத்திற்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

671/2 காங்கேசன்துறை வீதி,
பூநாறி லேன், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே. 021 222 1674, 077 4898039
email : snima11@gmail.com

# மரண அறிவித்தல்



## திருமதி புவனேஸ்வரி தட்சணாமூர்த்தி

(குஞ்சுராசா)

சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தட்சணா மூர்த்தி புவனேஸ்வரி நேற்று முன் தினம் (23.11.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தட்சணா மூர்த்தியின் அன்பு மனைவி யும் அப்பு லிங்கம் – யோகாம்பாள் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான நடராஜா - மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவனேஸ்வரி மற்றும் கமலாதேவி (கனடா), ஜெயராணி, மகேந்திரன், சோமசுந்தரம் (கனடா) காலஞ்சென்ற சந்திரமோகன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்றவர்களான குமரகுரு, கிருஷ்ணமூர்த்தி மற்றும் பஞ்சமூர்த்தி, சுசிலாதேவி, வளர்மதி, சிவரஞ்சனி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் தேனுகா, அனுஷியா (இந்தியா) காலஞ்சென்ற ஜெயந்தஸ்ரீ, விஜயஸ்ரீ (மலேசியா), சந்திரிகா (சுவிஸ்), ஆகியோரின் அன்புத்தாயும் ரமணன், ராஜசேகர் (இந்தியா), ஜீவராணி (மலேசியா), சந்திரமோகன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆரபி, சாகித்தியா, மாதங்கி, மாதுரி, கௌதமன், கார்த்தி (இந்தியா), குகப்பிரியா (மலேசியா), சதீபன் (சுவிஸ்), சர்ச்சனா (சுவிஸ்), செந்தூரன் (சுவிஸ்) தர்சன், விஜயபாலா (ஹொலண்ட) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஹரிணி, சுபிட்சா, பூர்விகா ஆகியோரின் அன்பு ப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2013) திங்கட்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 55/5 விளையாட்டு அரங்க வீதி,
(GPS றோட்) கல்வியங்காடு.


தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்







தென்மராட்சி, நவ.25
சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழாவும் பரிசளிப்பும் வெள்ளிக் கிழமை கொடிகாமத்தில் உள்ள பிர தேச சபை மண்டபத்தில்இடம்பெற்றது. பிரதேசசபைத்தலைவர் சி.துரை ராஜா தலைமையில் நடை பெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக் னேஸ்வரன். யாழ். மாவட்ட நாடா ளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராசா ஆகியோரும் சிறப்பு விருந்தினர் களாக நாடா ளுமன்றஉறுப்பினர்சி.சிறிதரன், வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவ ஞானம், துணை அவைத் தலைவர் அன் ரனி ஜெகநாதன் ஆகியோரும்- கௌரவ விருந்தினர்களாக மாகாணசபை உறுப்பினர் கள், மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வ ரதீஸ்வரன் ஆகியோரும்-
யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உப தலைவர்கள், உறுப்பினர்கள் ஆதி யோரும் கலந்து கொண்டனர்.
விருந்தினர்கள் கொடிகாமம் பஸ் நிலையத்தில் இருந்து கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவிகளின் பாண்ட் வாத்திய இசையுடன் ஊர்வலமாக விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.
நிகழ்வில் கலந்து கொண்ட வடமாகாண முதலமைச்சர், அவைத் தலைவர், துணை அவைத் தலைவர், மாகாண சபை உறுப்பினர்கள் அனை வரும் பிரதேச சபையால் பொன்னாடை போர்த்திக் கௌர விக்கப்பட்டனர்.
தேசிய வாசிப்பு மாதத்தை யொட்டி தேசிய நூலக ஆவணமாக் கல் சபையால் சிறந்த நூலகங் களாகத் தெரிவுசெய்யப்பட்ட பிரதேச சபையின் ஐந்து நூல கங்களுக்கு முதல மைச்சர் விருதுகளை வழங்கினார். நிகழ் வில் முதலமைச்சர் க.வி.விக் னேஸ்வரன் உட்பட கலந்து கொண்ட விருந்தினர்கள் உரை நிகழ்த்தினர். உள்ளூராட்சி வாரத்தை யொட்டி நடத்தப் பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் நடனப்பிரிவில் முதலிடம் பெற்ற உசன் இராமநாதன் ம.வி. மாணவனின் சிவத் தாண்டவ நடனம் அனைவரின் கவனத்தை யும் ஈர்த்தது. கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-9-122)

## நீர் வழங்கல் குறித்து நல்லூரில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், நவ.25
யாழ்ப்பாணம்- கிளிநொச்சி நீர் வழங்கல் சுகாதாரத் திட் டம் தொடர்பாக நல்லூர் பிர தேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம மக்களுக்கு விழிப்பு ணர்வூட்டும் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமையும், எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற் றுக்கிழ மையும் நல்லூர் பிரதேசப் பகு திகளில் நடைபெற வுள்ளன.
இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அரியாலை சரஸ் வதி சனசமூக நிலைய மண் டபத்தில் கிராம அலுவலர் பிரிவு ஜே/89 தொடக்கம் ஜே/ 96 வரை யான பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கும்-
அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு நீராவியடி சைவ பரிபாலன சபை மண்ட பத்தில் ஜே/97 தொடக்கம் ஜே/ 105 வரையான கிராம அலு வலர் பிரிவு மக்களுக்கும்
முதலாம் திகதி ஞாயிற்றுக்கி ழமை முற்பகல் 10 மணிக்கு ஜே/106 தொடக்கம் ஜே/110 வரையான கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்க ளுக்குப் நல்லூர் சட்டநாதர் கோயில் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெறும்.
பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வு களில் யாழ்.கிளிநொச்சி நீர் வழங்கல் சுகாதாரத் திட்டம் தொடர்பான கருத்துக்களை தெரியப்படுத்தும் வகையில் பொது நிறுவனங்களின் பிரதி நிதிகள், பொதுமக்கள் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர். (வ-7)

*உரும்பிராயில் மீண்டும்*

# தலை தூக்கும் கசிப்பு உற்பத்தி

அச்சுவேலி, நவ.25
உரும்பிராய் பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மற் றும் விற்பனை மீண்டும் தலை தூக்கியுள்ளது. இது தொடர் பாக வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பொலிஸ் பொது மக்கள் நல்லுறவுக் கூட்டத்தில் கருத்து முன் வைக்கப்பட்டது.
உரும்பிராய் கிராமத்தில் அன் னங்கை பகுதியில் கசிப்பு உற் பத்தி விற்பனை இடம்பெறு வதாகவும் அதுவும் போயா விடுமுறை தினத்தில் பகிரங் கமாகவே நடைபெறுவதாக வும் கிராம அலுவலர் மற்றும் பொது மக்கள் பிரதிநிதிகள் தரப் பில் கருத்துமுன்வைக்கப்பட்டது.
இந்த விடயம் வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத் தில் கடந்த புதன்கிழமை நடை பெற்ற பொலிஸ் பொது மக்கள் நல்லுறவுக் கூட்டத் திலும் முன்வைக்கப்பட்டது. அத்து டன் மாதாந்தம் நடை பெறும் கலந்துரையாடல்களில் 'உரும் பிராய் பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி விற்பனை என்ற விடயம் மிக முக்கியமான பேசு பொருளாகக் கையாளப் பட்டு வருகின்றது.

> "–"
> சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை தொடர்பாக பொலிஸ் தரப்பில் மேற்கொள் ளப் படும் நடவடிக்கை களோ முன்வைக் கப்படும் பதில் கருத்துக் களோ பொது மக்கள் தரப்பில் நம் பிக்கை கொள்ளத் தக்கவகை யில் அமையவில்லை

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை தொடர்பாக பொலிஸ் தரப்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளோ முன்வைக் கப்படும் பதில் கருத்துக்களோ பொது மக்கள் தரப்பில் நம் பிக்கை கொள்ளத் தக்கவகை யில் அமையவில்லை எனக் கூறப் படுகின்றது.
கசிப்பு உற்பத்தி, விற்பனை செய்வதே சட்டவிரோதம். அது வும் போயா விடுமுறை தினங் களில் பகிரங்கமாக மேற்கொள் ளப்படுவதை எந்த வகையில் உள்ளடக்குவது என்று விசன மும் தெரிவிக்கப்படு கின்றது. சமகாலச் சூழலில் குற்றச் செயல்கள் மற்றும் திட்டமிட்ட சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக பகிரங்கமாக கருத் துத் தெரிவிப்பது கருத்தை முன் வைப்பவர்களின் பாது காப்புக்கு அச்சுறுத்தலாக அமை யும் என்று அஞ்சப்படு கின்றது.
இந்த நிலையில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை விடயத்தில் கிராம அலுவலர் களும் பொது மக்களின் பிரதி நிதிகள் பகிரங்கமாகத் தெரி வித்து அதனைத் தடுத்து நிறுத் துவதற்கு நீண்டகாலமாக முயற்சி எடுத்து வருவதை சமூக ஆர்வலர்கள் பாராட்டு கின்றனர். (வ-11)

*வருமானப் பரிசோதகருக்கான*

## கொடுப்பனவை அதிகரிக்கவும்

*வடமாகாண வருமானப் பரிசோதகர் தொ.சங்கத்துக்கு கோரிக்கை*

பிரதேச சபைகளின் பொருளா தார வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு பிரதேச சபைகளுக் குக் கிடைக்க வேண்டிய வரு மானத்தை அறவிடுவதற்கும் அதிகரிப்பதற்கும் பல வழிகளி லும் அயராது உழைத்துவரும் உள்ளூராட்சிமன்ற வருமா னப் பரிசோதகர்களுக்கு வழங் கப்படும் கொடுப்பனவு போது மானதாக இல்லை என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சுக்குச் சுட்டிக் காட்டியுள்ளது வடமாகாண வருமானப் பரிசோதகர் தொழிற் சங்கம், அத்துடன் வேலைப் பளுவைக் கருத்தில் கொண்டு அடிப்படைச் சம்ப ளத்தை அதி கரிக்குமாறும் கோரியுள்ளது.
வருமானப் பரிசோதகர்களுக் கான கொடுப்பனவை அதிக ரிக்க வேண்டிய நிலைப்பாடு பற்றிக் குறித்த சங்கம், உள் ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல். எம். அதாவுல்லாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மேற்படி விடயம் தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்களில் கட மையாற்றும் வருமான பரிசோ தகர்கள் தமது உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள் உள்ளூ ராட்சி மன்றத்துக்குச் சேர வேண்டிய வருமானங் களை புள்ளி விவரமாகத் திரட்டி அந்த வருமானங்களை அற வீடு செய்து சபைக்கு வழங்குகின்ற னர். உதாரணமாக வியாபார நிலையங்களின் உரிமக் கட்ட ணம், களியாட்ட நிகழ்வுக் கட்ட ணம், விளம்பர கட்டணம், காணி பெயர் மாற்றம், பரிசோதனை யும் வரி அறவீடு செய்தலும், உற்சவ கால தற்காலிக கட்ட ணம் அறவீடு, நடைபாதை வியாபா ரக் கட்டண அறவீடு, பொருள் களைக் கொண்டு திரிந்து வியாபாரம் செய்வோரி டம் கட்டணம் அறவீடு செய்தல் மற்றும் நீதிமன்ற நடவடிக்கை கள் போன்ற கடமைகளை அவர்கள் நிறைவேற்றி வரு கின்றனர். அத்துடன் திணைக் களத் தலைவரால் பணிக்கப் படும் பணிகளும் அவ்வப்போது நிறைவேற்றப்படுகின்றன-என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-115)

## பயனாளிகளுக்கு கோழிக் குஞ்சுகள்



வாழ்வெழுச்சித் திட்டத்தில் (திவிநெகும)நல்லூர் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுக்கு கோழி வளர்ப்புக்கென கோழிக்குஞ்சுகள் வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது. நல்லூர் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி திருமதி செனி விரட்ண தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 75 பயனாளிகளுக்கு இதற்கான உதவிகள் வழங்கப்பட்டன. நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.ஏரேந்திரநாதன் கால்நடை வைத்திய அதிகாரி ஆகியோர் பய னாளி ஒருவருக்கு தலா பத்து கோழிக் குஞ்சுகளை வழங்கினர். (வ-7)

## 25 முதியோர் சங்கங்களுக்கு ஊக்குவிப்பு

அச்சுவேலி, நவ.25
வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் நிறுவப்பட்டுள்ள 25 முதியோர் சங்கங் களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் ஊக்குவிப்பு உதவி நிதியை சமூக சேவை கள் அமைச்சின் முதியோர் முகாமைத்துவப் பிரிவு வழங்கியுள்ளது.
குறித்த பகுதியில் உள்ள 31 கிராம அலுவலர் பிரிவுகளிலும் முதியோர் சங்கங்கள் நிறுவப் பட்டு செயற்பட்டு வருகின்றன.
அவை சமூக சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்த முன்னுரிமை அடிப்படையில் ஊக்குவிப்பு உதவி நிதி வழங்கப்படுகின் றது.
முதற் கட்டமாக 17 முதியோர்களுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கப்பட்டது. தற்போது இருபாலை தெற்கு, கோப்பாய் தெற்கு, உரும்பிராய் மேற்கு, புத்தூர் மேற்கு, வளலாய், பத்த மேனி, தம்பாலை கதிரிப்பாய், அச்சுவேலி தெற்கு ஆகிய 8 சங்கங்களுக்கும் வழங் கப்படுகின்றன.
கிராம அலுவலர் பிரிவு ரீதியாக முதியோ ருக்கான வசதிகள் மற்றும் நலன் மேம்பாடு களை கருத்திற் கொண்டே ஊக்குவிப்பு நிதி உதவி வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது. (வ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேட்பாரற்று கிடக்கும் ரூ.3,600 கோடி

புதுடில்லி, நவ.25
இந்தியாவில் உள்ள வங்கிகளில் பாராமரிப்பு இன்றிக் காணப்படும் கணக்குகளில் சுமார் 3 ஆயிரத்து 600 கோடி ரூபா தேங்கியுள்ளது என்று கூறப்படுகின்றது.
சேமிப்புக் கணக்குளை ஆரம்பிக்கும் மக்கள் அவற்றைத் தொடர்ந்து பேணாமல் விடுவதாலேயே இவ்வாறு பெருந் தொகைப் பணம் தேங்கிம் நிலை ஏற்பட்டுள்ளது. பெரும்பாலும் கிராமப்புற வங்கிகளில் காணப்படும் சேமிப்புக் கணக்குகளிலேயே இவ்வாறு பெருந் தொகைப் பணம் தேங்கியுள்ளது. (ற)



ஆந்திராவைத் தாக்கிய 'ஹெலன்' புயலால் 10க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். வங்கக் கடலில் உருவான 'ஹெலன்' நேற்றுமுன்தினம் மாலை ஆந்திராவின் கிருஷ்ணா மாவட்டம் ஊடாகக் கரையைக் கடந்தது. மணிக்கு 80 கிலோ மீற்றர் தொடக்கம் 90 கிலோ மீற்றர் வேகத்தில் காற்றால் மரங்கள் பிடுங்கி வீசப்பட்டுள்ளன. அதனால் அந்தப் பகுதிகளுக்கான மின்விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. புயல் தாக்கத்தை அடுத்து பெய்துவரும் கடும் மழையால் தாழ்வான பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ற)

## பொலிஸாரின் காலணிகளை திருடிய திருடர்கள்

சென்னை, நவ.25
பொலிஸாரின் குடியிருப்புக்குள் நள்ளிரவில் புகுந்தவர்கள் 150க்கும் மேற்பட்ட பொலிஸ் காலணிகளைத் திருட்டிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் சென்னையில் திருவல்லிக்கேணி பொலிஸ் குடியிருப்பில் நடந்துள்ளது.
அந்தக் குடியிருப்பில் 150 பொலிஸ் குடியிருப்புகள் உள்ளன. அங்கு வசிக்கும் பொலிஸார் அனைவரும் தமது காலணிகளை வீடுகளுக்கு வெளியே வைப்பது தான் வழக்கம்.
நேற்றுமுன்தினம் நள்ளிரவு குடியிருப்புக்குள் புகுந்த இனந் தெரியாதவர்கள் அங்கிருந்த பொலிஸாரின் காலணிகள் மற்றும் இடுப்பட்டிகள் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர். இது குறித்து பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (ற)

## அறுபது வயதிலும் அசத்தும் பெண்

சென்னை, நவ.25
அறுபது வயதாகியும் நீச்சல் போட்டிகளில் பங்கேற்று அசத்தி வருகின்றார் ஸ்வப்னா வாணி. சிறு வயதிலிருந்து, நீச்சல் போட்டிகளில் பங்கேற்கும் வாணி, 74 விருதுகளைப் பெற்றுள்ளார். நாற்பது வயதைத் தாண்டி விட்டாலே வாழ்க்கையே அவ்வளவுதான் என நினைத்துப் பலரும் சோம்பிக் கிடக்கையில் 60 வயதில் நாட்டில் எங்கு நீச்சல் போட்டி நடந்தாலும் அதில் ஆர்வமாக பங்கேற்று விருதுகளைக் குவித்து வருகிறார் இவர்.
இவர் சிறுவயதில் இருந்தே நீச்சல் கற்றுக்கொள்ளவில்லை. அவருக்கு 35 வயதாக இருக்கும் போது, அவரின் இரு மகன்களுக்கு நீச்சல் பயிற்சி அளிப்பதற்காக நீச்சல் குளத்திற்கு கூட்டிச் சென்றவர் அங்கேயே தானும் நீச்சல் பயிற்சி பெற்று சில ஆண்டுகளில், நீச்சல் வீராங்கனையாக மாறிவிட்டார்.
இவர் தற்போது மும்பையில் நடக்கவிருக்கும் கடல் நீச்சல் போட்டி யில் பங்கேற்கவுள்ளார். கடலில் 6 கிலோ மீற்றர் நீச்சல் அடிக்க வேண்டிய இந்த போட்டியில் 16 வயது முதல் பல வயதினரும் பங்கேற்கின்றனர். அவர்களுடன், வாணியும் போட்டியிடுகிறார். "எப்படியும் விருதை வென்றே தீருவேன்" என்று உறுதியாகக் கூறுகின்றார். (ற)

# இலங்கை விடயத்தில் அவசரப்பட முடியாது

### தமிழக காங்கிரஸ் தலைவர் கூறுகின்றார்



சென்னை, நவ.25
இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்காகவும், இந்திய மீனவர் பிரச்சினைக்கான தீர்வை கருத்திற்கொண்டும் இலங்கையிடம் இந்தியா பக்குவமாகச் செயற்பட வேண்டியுள்ளது என்று தமிழகக் காங்கிரஸ் தலைவர் ஞான தேசிகன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,
"இலங்கை விடயத்தில் இந்தியா அவசரப்பட்டு நடவடிக்கைகள் எதுவும் எடுக்க முடியாது. இலங்கைத் தமிழர்களுக்கான தீர்வு, கச்சதீவில் நடைபெறும் புனித அந்தோனியார் திருவிழா, தமிழக மீனவர் பிரச்சினைக்கான தீர்வு போன்றவற்றைக்கவனத்திற்கொண்டே இலங்கையை அணுக வேண்டியுள்ளது.
இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் இருநாட்டு மீனவர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் கடற்றொழில் துறை அதிகாரிகளுக்கு இடையிலான சந்திப்புக்கு ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு இது வரை தமிழக அரசு அனுமதியளிக்க மறுத்ததால் இந்த சந்திப்பு டிசெம்பர் மாத இறுதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க இந்திய மத்திய அரசு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது." என்று தெரிவித்துள்ளார். (ற)

## தேர்தலை சீர்குலைக்க தீவிரவாதிகள் திட்டம்

### இந்தியப் பிரதமர் கவலை

புதுடில்லி, நவ.25
நடைபெறவுள்ள மக்களவை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களைச் சீர்குலைக்கும் முயற்சிகளில் தீவிரவாதிகள் ஈடுபட்டுள்ளனர் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கவலை வெளியிட்டுள்ளார்.




புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில்பொலிஸ் துறை அதிகாரிகளிடையே உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"நடைபெறவுள்ள தேர்தல்களைச் சீர்குலைக்கும் முயற்சிகளில் தீவிரவாதிகள் ஈடுபட்டுள்ளனர். இந்தியப்பாதுகாப்புஅமைச்சுக்கள் அதிக எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். அண்மையில் முஸாபர் நகர் வன்முறைகள் அதிக உயிர்களைக் காவு கொண்டது. இந்த ஆண்டில் சில மாநிலங்கள் கலவரத்தால்அதிகம்பாதிப்படைந்துள்ளன. இவ்வாறான கலவரங்கள் ஏற்படாது இருக்க சட்டம் ஒழுங்கு அமைப்புகள் பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டும்." என்று தெரிவித்துள்ளார். (ற)

# 'பேரறிவாளன் வாக்குமூலத்தைத் திருத்தினேன்'

### தற்போது கவலைப்படுகின்றார் சி.பி.ஐ. அதிகாரி

சென்னை, நவ.25
ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை வழங்கப்பட்டுள்ள பேரறிவாளன் வழங்கிய வாக்குமூலத்தை திருத்தியமைக்காக வருந்துகிறேன் என்று முன்னாள் சி.பி.ஐ. அதிகாரியான தியாகராஜன் கவலை வெளியிட்டுள்ளார்.
ராஜில் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளனிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்தவர் தியாகராஜன். அவர் தற்போது பேரறிவாளனிடம் பெற்றுக் கொண்ட வாக்குமூலத்தில் மாற்றங்களைச் செய்தேன் என்று கூறியுள்ளார்.
இதுகுறித்து நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள நேர்காணலில்,
"9 வோல்ட் திறன் கொண்ட 2 'கோல்டன் பவர்' பற்றரிகளை வாங்கி சிவராசனிடம் கொடுத்தேன். அவற்றை வெடிகுண்டுகளில் சிவராசன் பயன்படுத்தினார் என்று பேரறிவாளன் வாக்குமூலத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் தான் வாங்கிய பற்றரி, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டில் பயன்படுத்தப்பட உள்ளது என்பது தெரியும் என்று பேரறிவாளன் கூறவே இல்லை.
அவரிடம் வாக்குமூலம் பெற்ற போது "நான் பற்றரியை வாங்கி கொடுத்தது உண்மை. ஆனால் எதற்காக சிவராசன் அதை கேட்டார் என்று தெரியவில்லை" என்றுதான் பேரறிவாளன் கூறினார்.
ஒரு விசாரணை அதிகாரி என்ற முறையில் பேரறிவாளனின் வாக்குமூலம் என்னை குழப்பத்தில் ஆழ்த்தியது. அது தகுதியான வாக்குமூலம் அல்ல. அதாவது அவரது ஒப்புதல் இல்லாமல், சதி திட்டம் அரங்கேறியது என்றுதான் அதில் அர்த்தம் கொள்ளப்படும்.
அதனால் பேரறிவாளனின் வாக்குமூலத்தில் ஒரு பகுதியை நீக்கி விட்டு, என் கருத்தை சேர்த்து கொண்டேன். அதற்காக நான் வருந்துகிறேன்.
பேரறிவாளன் வாக்கு மூலம் கொடுத்த பின்னர் எனக்கு 2 வாய்ப்புகள்தான் இருந் தன. அவரது வாக்குமூலத்தை அப்படியே ஏற்பது அல்லது பிற ஆதாரங்கள் அடிப்படையில் என்னுடைய அனுமானத்தை அதில் பதிவு செய்வது. அதனால் வேறு வழியின்றி 2ஆவது வாய்ப்பை தெரிவுசெய்தேன்.
வெடிகுண்டு தயாரிக்கப்பட்டதற்கு வேறு எந்த ஆதாரமும் இல்லாத நிலையில் பேரறிவாளன் வாக்குமூலம் தகுதியானதாக இல்லாவிட்டால் அது நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும்.
22 ஆண்டுகளுக்கு பின்னர் என் செயலுக்காக வருந்துவதற்கு காரணம் இப்போது இல்லாவிட்டால் எப்போதும் முடியாது என்பதால்தான். ராஜிவ் கொலை வழக்கு விசாரணை முடிவதற்கு பல மாதங்களுக்கு முன்பே பேரறிவாளனிடம் நான் வாக்குமூலத்தை பதிவு செய்துவிட்டேன்.
அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் பேரறிவாளனுக்குத் தூக்குத் தண்டனை கிடைக்கும் என்று நான் சிறிதும் எதிர் பார்க்க வில்லை. துரதிருஷ்ட வசமாக ராஜிவ் கொலை வழக்கில் வெடிகுண்டு யாரால், எங்கு தயாரிக்கப்பட்டது என்பதற்கான ஆதாரத்தை சிபிஐயால் கண்டுபிடிக்க முடியவில்லை" என்று தெரிவித்துள்ளார். (ற)



அணுஆயுதங்களை தாங்கிச் சென்று கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் 'தனுஷ்' ஏவுகணையை வெற்றிகரமாக நேற்றுமுன்தினம் சோதனை செய்துள்ளது இந்தியா. ஒரிசா மாநிலம் கடற்பகுதியில் இந்தியக் கடற்படைக்கு சொந்தமான கப்பலில் இருந்து இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 'தனுஷ்' ஏவுகணை 500 முதல் 1000 கிலோ வரை எடையுள்ள அணு ஆயுதங்களை எடுத்துச் சென்று கடல் வழியாகவும், தரை வழியாகவும் தாக்கக்கூடிய சக்தி வாய்ந்தது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாக். அரசுடன் பேச்சுக்கள் இல்லை
### - தலிபான்கள்

இஸ்லாமாபாத், நவ.25
பாகிஸ்தான் அரசுடன் பேச் நடத்தும் திட்டம் ஏதுமில்லை என்று தலிபான்கள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.
பாகிஸ்தானில் அமைதியை நிலைநாட்டுவதற்காக தலிபான்களுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண விரும்புகின்றோம் என்று பிரதமர் நவாஸ் ஷெரிப் கூறியுள்ள நிலையிலேயே தலிபான் அமைப்பு இவ்வாறு தெரிவித்துள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் தலிபான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஷஹிதுல்லா ஷகித்,
"எமது தலைவர் ஹகிமுல்லா மசூத்தை கொன்றவர்களை நாங்கள் மன்னிக்கப் போவதில்லை. பஞ்சாப் மற்றும் பலூசிஸ்தானின் தூரப்பகுதிகளில் இருந்து கூட அவர்களை நாங்கள் விரட்டியடிப்போம்.
எங்களுக்கு எதிராக அதிகமான தாக்குதலை நடத்திய கைபர் பாக்துங்வா பகுதியிலிருந்து அரச படையை விரட்டும் நடவடிக்கைகளை தொடருவோம். பொதுமக்களை நாங்கள் குறிவைக்க மாட்டோம், பழங்குடியின மக்கள் கூட அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதலை தடுத்து நிறுத்த முடியும்.
ஆனால் நவாஸ் ஷெரிப் தலைமையிலான அரசு, ஒரு கையாலாகத அரசாக உள்ளது. அவர்களுடன் நாம் எந்த விதப் பேச்சுக்களையும் நடத்தப்போவதில்லை" என்று தெரிவித்துள்ளார். (ற)



பாகிஸ்தானில் அமெரிக்கா மேற்கொள்ளும் ஆளில்லா விமானத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாகிஸ்தானின் முக்கிய நகரங்களில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்ரான்கான் தலைமையிலான தெக்ரிக் - ஈ- இன்சாப் கட்சி அந்த ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்திருந்தது. "ஆளில்லா விமானங்கள் மூலம் பாகிஸ்தானின் இறைமையை மீறும் செயற்பாடுகளை அமெரிக்கா நிறுத்த வேண்டும். அல்லாதுவிடில் ஆப்கனில் நிலைகொண்டிருக்கும் நேட்டோ படையினருக்காக விநியோகப் பாதையைத் தடுப்பதற்கான முயற்சிகள் ஆரம்பமாகும்" என்று ஆர்ப்பாட்டங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ற)

## பிலிப்பைன்ஸுக்கு பிரிட்டன் மீண்டும் உதவி

லண்டன், நவ.25
பிலிப்பைன்ஸைத் தாக்கிய 'ஹையான்' புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளை துரிதப்படுத்துவதற்காக மேலும் ஆறு உதவி விமானங்களை அங்கு அனுப்பியுள்ளது பிரிட்டன்.
புயலின் தாக்கத்தால் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதுடன், ஆயிரத்து 600 பேர் காணாமற் போயுள்ளனர்.
புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தற்போதும் மீட்புப் பணிகள் நடைபெற்றுவரும் நிலையில் அங்கு அத்தியாவசியப் பொருள்களுக்கான பற்றாக்குறை காணப்படுகின்றது.
இந்தநிலையில் இரு போர்க் கப்பல்களையும் 50 மில்லியன் பவுண்ட் பெறுமதியிலான நிவாரண உதவிகளையும் வழங்கியிருந்த பிரிட்டன் தற்போது ஆறு உதவி விமானங்களை மேலதிகமாக பிலிப்பைன்ஸ்க்கு அனுப்பியுள்ளது. (ற)

# எட்டப்பட்டது சமரசம்
## அணுத்திட்டங்களைக் குறைப்பதற்கு சம்மதம் தெரிவித்தது ஈரான்

ஜெனிவா, நவ.25
ஈரானுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் ஈரான் அணுத் திட்டங்கள் தொடர்பான பேச்சுக்களின் முடிவில் அணுத் திட்டங்களைக் குறைத்துக் கொள்வதற்கு ஈரான் சம்மதம் தெரிவித்துள்ளது
இந்த விவகாரம் தொடர்பாக நடைபெற்ற முதல் இரு பேச்சுக்களும் முடிவு எட்டப்படாத நிலையில், மூன்றாம் கட்டப் பேச்சுக்கள் கடந்த 4 நாள்களாக ஜெனிவாவில் நடைபெற்று வந்தன.
ஈரானுடன் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் பிரதிநிதிகள் பேச்சுகளில் ஈடுபட்டனர். பேச்சுக்கள் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளதுடன், ஈரான் நிறைவேற்று ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.




ஒப்பந்தம் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஈரான் தமது நாட்டு அணுசக்தி உரிமைகளுக்கு உட்பட்டே இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

அந்த ஒப்பந்தத்தின்படி, "ஈரான் சர்வதேச அணு ஆயுத ஆய்வாளர்களைத் தமது அணு செறிவூட்டல் தொழிற்சாலைகளுக்கு அனுமதிக்க வேண்டும். அணு ஆயுத உற்பத்திகள் குறைக்கப்படும். அத்துடன் ஈரான் மீது விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரக் தடைகள் காரணமாக அந்த நாட்டுக்கு 7 பில்லியன் டொலர் நிதியுதவி வழங்கப்படும். ஈரான் மீது எதிர்வரும் 6 மாதங்களுக்கு எந்தவிதத் தடைகளும் விதிக்கப்படாது'' என்று கூறப்படுகின்றது. (ற)

## சிரியாவில் வான்தாக்குதல் 44 பேர் சாவு; பலர் காயம்

பெய்ரூட், நவ.25
சிரியாவின் அலப்போ நகருக்கு அண்மையில் சிரியக் கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள பகுதிகளில் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 44 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதுகுறித்து அங்குள்ள மனித உரிமை அமைப்புகள் கூறுகையில், "கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள அல் - பாக் பகுதிகளிலே ஜெட் விமானங்கள் தாக்குதலை நடத்தியுள்ளன. அந்த தாக்குதலில் 44 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 22 பேர் பொதுமக்கள் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது'' என்று தெரிவித்துள்ளன.
கிளர்ச்சியாளர்களின் நிலைகளைக் கண்டறிவதில் தோல்வியடைந்த விமானங்கள் பொதுமக்கள் செறிந்திருந்த சந்தைத் தொகுதி ஒன்றிலேயே தாக்குதல் நடத்தியுள்ளன என்று கூறப்படுகின்றது.
எனினும் இவற்றை மறுத்துள்ள சிரிய அரசு, ''கிளர்ச்சியாளர்கள் நிலைகள் மீதே வான்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது'' என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. (ற)



சிரியாவில் கடந்த இரண்டாண்டுக்கு மேலான நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரால் பொதுமக்கள் பெருமளவு உயிரிழந்துள்ளதுடன், அவர்களுக்கான அத்தியாவசியச் சேவைகளும் தடைப்பட்டுள்ளன.

## பனிச் சரிவில் 7 பேர் சாவு

டோக்கியோ, நவ.25
ஜப்பானில் பனிப்பாறை சரிந்து விழுந்ததில் பனிச்சறுக்கு வீரர்கள் 7 பேர் உயிரிழந்துள்ளனர். ஜப்பானின் டொயாமா எல்லைக்குட்பட்ட வடக்கு ஆல்ப்ஸ் மலைத் தொடரில் மலையேற்ற வீரர்கள் மற்றும் பனிச்சறுக்கு வீரர்கள் சாகச பயணம் மேற்கொள்வது வழக்கம். கடல் மட்டத்தில் இருந்து 2 ஆயிரத்து 861 மீற்றர் உயரத்தில் உள்ள மசகோடேக் மலைப்பகுதியில் ஏற்பட்ட பனிச் சரிவிலேயே பனிச்சறுக்கு வீரர்கள் சிக்கிக் கொண்டுள்ளனர். (ற)

# தேர்தலின் பின்பே இந்தியாவுடன் பேச்சு
### *பாக். பிரதமர் நவாஸ் ஷெரிப் கூறுகின்றார்*

இஸ்லாமாபாத், நவ.25
இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரே அந்த நாட்டுடனான பிரச்சினைகள் குறித்துப் பேச முடியும் என்று கூறியுள்ளார் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிப்.
இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



"இந்தியாவுடன் சிறந்த உறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்பதே எங்கள் கட்சியின் கொள்கையாகும். அதில் எந்த மாற்றமும் இல்லை. எல்லையில் நடந்த துப்பாக்கி சூடு மற்றும் பதற்றமான சூழ்நிலை காரணமாக பேச்சு நடத்துவதில் இருதரப்பினருக்கும் ஆர்வம் இல்லாமல் போனது.
காஷ்மீர் பிரச்சினை போன்ற அனைத்து பிரச்சினைகள் தொடர்பாக இரு நாடுகளும் பேச்சு நடத்தி தீர்வு காண வேண்டும். அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு பேச்சுக்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும்.
வாஜ்பாய் உண்மையிலேயே ஒரு ராஜதந்திரி. காஷ்மீர் பிரச்சினை மற்றும் அனைத்து பிரச்சினைகளும் ஒரு வருடத்திற்குள் தீர்க்கப்பட வேண்டும் என்று 1999ஆம் ஆண்டு என்னிடம் அவர் கூறினார்.
அந்த வழியில் பேச்சு முன்னெடுத்துச் செல்ல நான் விரும்புகிறேன்.
மே மாதம் பாகிஸ்தானில் நடக்கும் பொதுத் தேர்தலில் இந்தியாவுக்கு எதிரான பரப்புரை இருக்காது. இந்தியாவுக்கு எதிராக ஒரு வார்த்தைகூட பேசமாட்டோம். ஆனால் இந்தியாவில் பாகிஸ்தானுக்கு எதிரான பரப்புரை நடந்து கொண்டிருக்கிறது.
இவ்வாறு பேசுவதில் இருந்து இரு நாடுகளும் வெளியே வர வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நாங்கள் ஏற்கனவே வெளியில் வந்து விட்டோம்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## மாலி பொதுத் தேர்தல்: வாக்குப் பதிவு ஆரம்பம்

பமாகோ, நவ.25
இஸ்லாமியத் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் மாலியின் பொதுத்தேர்தல் நேற்று ஆரம்பமானது.
மாலியில் பிரிவினை வாதத் தாக்குதல்களின் காரணமாக சுமார் 5 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். எனினும் 6.5 பில்லியன் மக்கள் வாக்களிக்க உள்ள நிலையில் பொதுத் தேர்தலில் 90 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் வாக்களிப்பில் ஈடுபடுவர் என்று அந்நாட்டு மனித உரிமை அமைப்புகள் கூறுகின்றன.
தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக வேட்பாளர்கள் தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்ளாத நிலையில் அங்கு அதிகளவான பிரான்ஸ் படையினர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏறாவூர் மாக்கான் மாக்கார் வித்தியாலயத்தின் வெள்ளிவிழா வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்தநிகழ்வில் ஏறாவூர் நகரபிதா அலிஸாஹிர் மௌலானா, கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ். சுபைர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ரூ. 10,000 சம்பள உயர்வு அரச ஊழியருக்கு வேண்டும்

## அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கம் தீர்மானம்

அம்பாறை, நவ.25

"அரச ஊழியர்கள் எதிர் நோக்கும் வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு ஏற்ப சகல அரச ஊழியர்களுக் கும் பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங் கப்பட வேண்டும்"

இவ்வாறு அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர் கள் சங்கம் ஏக மனதாக நிறை வேற்றியுள்ளது.

அஞ்சல் திணைக்கள உத்தி யோகத்தர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கப் பொதுச் செயலாளர் யூ.எல்.எம்.பைஸர் தலை மையில் நடைபெற்றது.

மாளிகைக்காடு பிஸ்மில்லா றெஸ்ரோரன்ட் மண்டபத்தில் நடை பெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் ஏக மனதாக நிறை வேற்றப்பட்டது.

இந்த வருடாந்தப் பொதுக் கூட் டத்தில் பின்வரும் தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட் டன.

★ வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அரச ஊழி யர்களுக்கான 1200 ரூபா கொடுப்பனவு அதிக ரிப்பு இப் போதைய வாழ்க் கைச் செலவு உயர்வுக்குப் போதாமையால் அரச சம் பள உயர்வாக பத்தாயிரம் ரூபா வழங்க வேண்டும்.

★ அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் சகல கொடுப் பனவுகளும் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்பட வேண்டும்.

★ அரச ஊழியர்களின் பண் டிகை முற்பணம் பத்தாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண் டும்.

★ அக்ரஹார காப்புறுதிக் கொடுப்பனவுகள் அதிகரிக் கப்பட வேண்டும்.

★ உப அஞ்சல் அதிபர்களுக்கு சனிக்கிழமை கொடுப்பனவு வழங்கப்படவேண்டும்.

★ கல்முனை அஞ்சல் அலுவ லகத்தில் பொதி கருமபீடம் மீண்டும் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

★ உப அஞ்சல் அதிபர்களுக்கு வழங்கப்படும் காகிதாதிகளுக் கான கொடுப்பனவு 100 ரூபா விலிருந்து 500 ரூபாவாக அதிகரிக்கப்படவேண்டும்.

★ மருதமுனை அஞ்சல் அலு வலகத்துக்கு கடந்த 18 வரு டங்க ளாக நியமிக்கப்படாத கே.கே. எஸ்.நியமிக்கப்பட வேண்டும்.

★ சம்மாந்துறை அஞ்சல் அலு வலகத்தின் கட்டுப்பாட்டி லுள்ள மல்கம்பிட்டி உப அஞ் சல் அலுவலகத்துக்கு இரும் புப் பெட்டகம் வழங்கப்பட வேண்டும்.

★ உப அஞ்சல் அலுவலகங் களுக்கான வாடகை ரூபா 250 இலிருந்து மதிப்பீட் டறிக்கையின்படி அதிகரிக் கப் படவேண்டும். (ச-30)

சட்ட திணைக்களத்தின்

# ஆலோசகர் பதவிகளுக்கு ஓய்வுபெற்ற அதிகாரிகள்

கொழும்பு, நவ.25

சட்ட வரைவுகளைத் தயாரிக் கும் திணைக்களத்தில் ஆலோ சகர் பதவிகளுக்கு நிலவும் தட்டுப்பாட்டைத் தவிர்த்துக் கொள்வதற்கு எழுபது வய துக்கு மேற்படாத ஓய்வுபெற்ற அதிகாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

ஓய்வு பெற்றுள்ள இந்த அதி கா ரிகள் ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஒரு வருடத்துக்கு இணைத் துக் கொள்ளப்படவுள்ளனர்.

அவர்களுக்கு 40.000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவு அவர்கள் ஓய்வுபெற்றுச் செல் லும் சந்தர்ப்பத்தில் வழங்கப் பட்டிருந்த வாகன வசதிகள், போக் குவரத்துக் கொடுப்பனவு ஆகியவற்றைச் செலுத்து வதற்கு அமைச்சரவையின் உப செயற்குழு பரிந்துரை செய்துள்ளது. (ச-22)

# தமிழர்களுக்கு எதிராக கருத்தை வெளியிடாதீர்

## இராஜேஸ்வரன் கூறுகிறார்

மட்டக்களப்பு,நவ.25

முரளிதரன் வெளியிட்ட கருத்து புண்பட்ட தமிழ் மக்களின் மனதை மேலும் பாதிப்ப டைய வைத்துள்ளது. எனவே இவ்வாறான கருத்துக்களை வெளியிட வேண்டாம் என்று கிழக்கு மாகாணசபை உறுப் பினர் மு.இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரிட்டன் பிரதமர் டேவிட் கம ரூன் மற்றும் சனல்-4 ஊடகவி யலாளரிடம் கருத்துத் தெரி வித்த முரளிதரன் இலங் கையில் தமிழ் மக்களுக்கு நடந்த உண்மை யான அநீதி களை மூடி மறைத்து அரசுக்கு சார்பான கருத்துகளை வெளி யிட்டுள்ளார். இந்தக் கருத்து 30 வருட காலமாக புண்பட்ட தமிழ் மக்களின் மனதை மேலும் புண்பட வைத்துள்ளது.

வடக்கு, கிழக்கு தமிழர்கள் மட்டுமல்லாது இலங்கை முழு வதும் வாழ்கின்ற தமிழர்கள் இவரது கருத்துக்களை வன் மையாகக் கண்டித்து வரு கின்றனர்.-என்றார். (ச)

# பிரதி முதல்வராக சிராஸ் நியமனம்

கல்முனை,நவ.25



கல்முனை மாநகர சபையின் பிரதி முதல்வராக சிராஸ் மீரா சாஹிப் நியமிக்கப் பட்டுள்ளார்.

இதன் மூலம் கல்முனை பிரதி முதல்வர் சர்ச்சைக்கு உரிய தீர்வு காணப்பட்டுள்ளது.

கல்முனை பிரதி முதல்வராக இருந்த சட்டத்தரணி நிசாம் காரியப்பர் புதிய முதல் வராகப் பதவியேற்றதை யடுத்து பிரதி முதல்வர் வெற்றிடத்துக்கு நியமிக் கப்படுபவர் பற்றி பல்வேறு ஊகங்கள் நிலவின.

முதல்வராக இருந்து பதவி விலகிய சிராஸ் மீராசாஹிப் தனது மாநகர சபை உறுப்பி னர் பதவியில் நீடிக்கும் வகை யில் இந்த புதிய நியமனம் அமைந் துள்ளது.

கல்முனை மாநகர சபை முதல்வர் விவகாரம் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் பல் வேறு சர்ச்சைகளையும் நெருக்கடிகளையும் உரு வாக்கியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ச)

# கடைகளில் திருட்டு

மட்டக்களப்பு,நவ.25

மட்டக்களப்பு-திருகோணமலை பிரதான வீதியில் தாண்டவன் வெளி பகுதியில் வியாழக்கிழமை இரவு மூன்று கடைகள் இனம் தெரியாதநபர்களால் உடைக்கப்பட்டு இரண்டு கடை களில் பொருள் கள் திருடப்பட் டுள்ளன என்று பொலிஸார் தெரி வித்தனர்.



மூன்று கடைக ளின் கூரைக்கு மேல் ஏறி ஓடுக ளைக் கழற்றி கடைகளுக்குள் நுழைந்த திருடர்கள் பொருள்களைத் திருடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசா ரணைகளை மட்டக் களப்பு தலைமை யக பொலிஸார் மேற் கொண்டு வருகின் றனர். (ச)


## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் தவராஜசிங்கம்

(உரிமையாளர்-அம்பிகாஸ் ஸ்ரோர்ஸ், அம்பிகாஸ் பூட்சிற்றி முன்னாள் தலைவர்-அப்புத்தளை சைவ இளைஞர் மன்றம், அகில இலங்கை சமாதான நீதிவான்)

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் அப்புத் தளையை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் தவராஜசிங்கம். 23.11.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் சோமசுந்தரம் மற்றும் பராசக்தி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும், சிவ மணியின் அன்புக் கணவரும், சோமாஸ்கந்தா, கேதாரகௌரி, சர்வாபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்..

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2013) திங்கட்கிழமை அவரது அப்புத்தளை இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பண்டாரவளை பொது மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
077 110 9001

அப்புத்தளை (40447)(3.6.4)



## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை மகாதேவன்



ஐயனார் கோயிலடி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் செல்வநாயகம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை மகாதேவன் 22.11.2013 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமப்பிள்ளை-இரத்தினேஸ்வரி மற்றும் பங்கயற்செல்வி தம்பதியரின் மரு மகனும், விஜியலட்சுமியின் அன்புக் கணவரும், கேமலா (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் - உள்ளூராட்சித் திணைக்களம் -யாழ்ப்பாணம்), மோகனராஜ் (டென்மார்க்), விஜியமாலா (கனடா), விஜயராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசோதி (புள்ளிவிபரவியலாளர், யாழ். போதனா வைத்தி யசாலை), கலைவதனா (டென்மார்க்), சுகுமார் (கனடா), வாசுகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பத்மநாதன், இரத்தினசபாபதி, வேலாயுதபிள்ளை, சந்திரசேகரம், இராஜேந்திரம் மற்றும் மகேஸ்வரி, சுப்பிரமணியம், மகேஸ்வரன், இந்திராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயலட்சுமி, லலிதகுமாரி, குசலகுமாரி (ஆஸ்திரேலியா), திருமால்மருகன் (சுவிஸ்), சிறி முருகன் (ஜேர்மனி), லோஜினி (சுவிஸ்), சண்முகலிங்கம் காலஞ்சென்ற இராசேந்திரம், திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனரும், பிரதீபா (மாணவி, இரஜரட்டைப் பல்கலைக்கழகம்), சிந்துஜன், பிரசாந் ( 2015 கணிதப் பிரிவு மாணவன், யாழ். இந்துக் கல்லூரி), றொசானா (கனடா), அனோஜன் (கனடா), கீர்த்தனா (கனடா), அபிராம் (டென்மார்க்), அபினா (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2013) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மோகன்ராஜ் (மகன்)
ச. சிவசோதி (மருமகன்) குடும்பத்தினர்.
021 222 0115, 077 9028857

செல்வநாயகம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,கோண்டாவில். (40471)(3.6.4)



## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி சிவசுப்பிரமணியம்



யாழ். மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கு, இங்கிலாந்து Kent ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கமலா தேவி சிவசுப்பிரமணியம் 22-11-2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-அமிர்தவல்லி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், பகவதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற நில அளவையாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும், Dr.கருணாகரன்(Nephrologist -கனடா), Dr.வத்சலா (இங்கிலாந்து), முரளிதரன்(Accountant -இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற அகிலேஸ்வரன் மற்றும் சுசிலா தேவி (கொழும்பு), சரோஜா (இங்கிலாந்து), சாரதாதேவி(இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு சகோதரி யும், Dr.குமுதினி, கந்தவேள்(Proprietor), காயத்திரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், செல்வராணி(மல்லாகம்), சிவயோகநாதன்(கொழும்பு), அரசரட்ணம் (இங்கிலாந்து), சிவஞானசுந்தரம்(இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், பிரவீன், அஸ்வின், காயத்திரி, கார்த்திகேயன், ஹரிஷன், ஹாசினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 28.11.2013 வியாழக்கிழமை இங்கிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
இ. சிவசுப்பிரமணியம் (கணவர்) - பிரித்தானியா 044 755 [illegible]
Dr.வத்சலா - பிரித்தானியா தொ.பே.+441 634 719 394
Dr.கருணாகரன்- கனடா தொ.பே.+130 658 406 97
முரளிதரன் - பிரித்தானியா தொ.பே.+447 958 244 113 (40478)(3.6.4)

தகவல்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வவுனியா மாவட்ட விவசாயிகளுடனான கலந்துரையாடல் அண்மையில் வவுனியா முருகனூரில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பண்ணையில், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்ச்சியில் வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மாகாண சபை உறுப்பினர்களான பா.லிங்கநாதன், என்.தியாகராசா, இ.இந்திரராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (க-5)

# பிரதேச சபைக்கு புதிய மாநாட்டு மண்டபம்

## வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது

வவுனியா, நவ.25

வவுனியா வடக்கு பிரதேச சபையின் புதிய மாநாட்டு மண்டபக் கட்டடம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

நெடுங்கேணி பிரதேச சபைத் தவிசாளர் முருகுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் தலைமையில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் நெடுங்கேணி மகாவித்தியாலய முன்றலில் இருந்து ஒலுமடு பாடசாலை மாணவர்களின் இசை அணி வகுப்பு மரியாதையுடன் அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் மண்டபத்தை அடைந்ததும் நெடுங்கேணி மகாவித்தியாலய மாணவர்களின் வரவேற்பு நடனத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நெடுங்கேணி பிரதேச சபையின் மாநாட்டு மண்டபம் மற்றும் நூல் நிலையக் கட்டடம் என்பன வைபவரீதியாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சபையின் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டன.

இதன்போது வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வடமாகாண சபை உறுப்பினர்கள், நெடுங்கேணி பிரதேச சபைச் செயலாளர், பாடசாலை அதிபர்கள், வர்த்தக சங்கத் தலைவர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர், நெடுங்கேணி பொலிஸ் அதிகாரி, நெடுங்கேணி கதிர்வேலாயுத சுவாமி ஆலயக் குருக்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (க- 435)

# புலனாய்வாளர்களின் அடாவடியை நிறுத்துக

## செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை

மன்னார், நவ.25

வடக்கில் தமிழ் மக்கள் மீதும் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மீதும் புலனாய்வுத் துறையினர் மேற்கொண்டு வரும் அடாவடித்தனத்தை உடன் நிறுத்துவதற்கு அரசு துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்;

மன்னார் மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவை யின் இணைப்பாளர் எஸ். சுனேஸ் சோசை உட்பட மனிதாபிமானப் பணியாளர்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் ஆகியோருக்குத் தொடர்ச்சியாக புலனாய்வுத்துறையினரினால் நேரடியாகவும், தொலை பேசியூடாகவும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக காணாமற்போன உறவுகளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கே தொடர்ந்து அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்தால் உரிய முறையில் விசாரணைகள் இடம்பெறுவதில்லை எனவும் தெரிய வருகின்றது.

**பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலை யங்களில் முறைப்பாடு செய்தால் உரிய முறையில் விசாரணைகள் இடம்பெறுவ தில்லை.**



இதனால் காணாமற்போன உறவுகளைக் கண்டு பிடிப்பதற்காக அவர்கள் மேற்கொண்டு வரும் அமைதி வழிப்போராட்டங்கள் கூட கைவிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த புலனாய்வாளர்கள் இரவு நேரங்களில் விசாரணைகளுக்கென வீடுகளுக்கு செல்வதாக தெரிய வருகின்றது.

இதனால் பெண்கள் அச்சத்தை எதிர்கொள்கின்றனர். பெண் பொலிஸாரை அழைத்துச் செல்லப்படாமல் பெண்களை விசாரணை செய்கின்ற நடவடிக்கைகளும் தொடர்ந்து இடம்பெறுகின்றது. இவர்கள் யார் என்பது கூடத் தெரியாத நிலையில் எவ்வித சீருடையும் இன்றி சாதாரண உடையில் அரச புலனாய்வுத்துறை எனக் கூறி விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

எனவே வடமாகாணத்தில் உள்ள தமிழ் மக்கள் மீதும் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மீதும் புலனாய்வுத் துறையினர் மேற்கொண்டு வரும் அச்சுறுத்தல் நடவடிக்கைகளுக்கு எதிராக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவர்கள் மீதான இந்த சம்பவங்களுக்கு அரசே உரிய பதிலைக்கூறுவதுடன் இவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இதில் சர்வதேச சமூகம் உரிய கவனம் செலுத்த வேண்டும் -என்றுள்ளது. (க-12)

### மின்சாரம் இல்லை உருத்திரபுரத்தில் மக்கள் அவதி

கிளிநொச்சி, நவ.25


கிளிநொச்சி மாவட்டம் உருத்திரபுரம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள இடங்களுக்கு 40 வருட காலமாக மின்சார இணைப்பு வழங்கப்படாததால் இங்குள்ள மக்கள் அவலத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேற்படி உருத்திரபுரம் கிராம அலுவலர் பிரிவில் சுமார் 300க்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்ட போதிலும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. குப்பி விளக்கில் கல்வி கற்கும் மாணவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மின்சார கம்பங்கள் எள்ளுக்காடு முருகன் ஆலயம் வரையும் நடப்பட்டுள்ளன.

இங்கிருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தினுள் வசிக்கும் தமக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை என கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பருவ மழை பெய்து வருவதால் இரவில் வெளியே நடமாட முடியாத அளவுக்குத் தாம் பாதிக்கப்பட்டு வருவதாகவும் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கவலையுடன் தெரிவித்தனர். (க-415)



# வாய்க்கால் வேலைகள் சாந்தபுரத்தில் நிறுத்தம்

## *மிதிவெடி அபாயமே காரணம்*

கிளிநொச்சி, நவ.25

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் இடம்பெற்று வந்த கழிவுவாய்க்கால்களை அமைக்கும் வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கு.சுகுணதாஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் மிதிவெடிகள் இருப்பதன் காரணமாகவே கழிவுவாய்க்கால்களை அமைக்கும் பணிகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சாந்தபுரம் கிராமத்தின் நடுப் பகுதியில் தேங்கி நிற்கும் வெள்ளத்தை கழிவு வாய்க்கால்கள் மூலமாக கனகாம்பிகைக் குளத்தில் கலக்க விடுவதற்கென சுமார் 19 லட்சம் ரூபா செலவில் இந்தப் பணிகள் இடம் பெற்று வந்ததாகவும், மிதி வெடிகள் அகற்றப்பட்டதும் வாய்க்கால் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

*அக்கராயன், வன்னேரிக்குளம் பாடசாலைகளில்*

# உயர்தர வகுப்புக்களுக்கு விரைவில் மூடுவிழா?

அக்கராயன், நவ.25

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம், வன்னேரிக் குளம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆரம்பிக்கப்பட்ட உயர்தர வகுப்புக்கள் நிறுத்தி வைக்கப்படும் அபாய நிலை உருவாகியுள்ளது.

அக்கராயன் மகாவித்தியாலயத்தில் இரசாயனவியல் பாடத்துக்கு ஆசிரியர் இதுவரை வரவில்லை. வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் ஒரு ஆசிரியர்கூட இல்லாத நிலை காணப்படுகின்றது.

பெற்றோர் இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்த போதிலும் பயன் எதுவும் கிட்டவில்லை. இது தொடர்பாக கடும் விசனம் தெரிவித்த பெற்றோர் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஆலோசித்து வருவதாகத் தெரிய வருகின்றது. (க-18)

# மதகுகள் அமைக்கும் பணிகள் தீவிரம்

வேப்பங்குளம், நவ.25

மழை காலம் ஆரம்பித்துள்ளதால் வவுனியாவில் புனரமைக்கப்பட்ட கால்வாய்களுக்கு மதகுகளை அமைக்கும் பணிகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன.

தரணிக்குளம், மயிலன்குளம் ஆகிய பகுதிகளில் இந்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

ஆனால் ஆசிகுளம், வேப்பங்குளம், கல்நாட்டியகுளம், துரவிக்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள கால்வாய்கள் புனரமைக்கப்பட்டுள்ளபோதிலும் மதகுகள் அமைக்கப்படாததால் வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்படக்கூடிய நிலை காணப்படுகின்றது.

பெருமழை பெய்யுமானால் வெள்ளம் வழிந்தோட முடியாத நிலையில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து மக்கள் அவலங்களுக்கு உள்ளாக நேரிடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-421)



# ஒட்டுசுட்டான் பகுதியில் குடிதண்ணீர் விநியோகம்

முல்லைத்தீவு, நவ.25

ஒட்டுசுட்டானில் அமைக்கப்பட்ட குடிதண்ணீர்த் தாங்கி மூலமான குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பித்துள்ளது.

இந்த குடிதண்ணீர்த்தாங்கி மூலமாக ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மேட்டு நிலத்தில் வசிக்கும் மக்கள் அதிக பயனை அடையவுள்ளனர். சமளங்குளம் பகுதியில் அரை ஏக்கர் திட்டப் பகுதியில் கோடை காலங்களில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் குடிதண்ணீர் தேடி நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது.

அத்துடன் கிணறுகளிலும் நீர் மட்டம் குறைந்து காணப்படுவதால் சிவநகர் அரை ஏக்கர் திட்டத்தில் வசிக்கும் மக்களும் பாதிக்கப்பட்டு வந்தனர். தற்போது குடிதண்ணீர்த்தாங்கி மூலம் விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் சுத்தமானதாகக் காணப்படுகின்றது. இந்தக் குடிதண்ணீரைப் பெறுவதற்கு உரிய பதிவுகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (க-500)



# பெற்றோரின் மதுப்பாவனையால் மாணவர்களுக்கு பெரும் பாதிப்பு

அக்கராயன், நவ.25

பெற்றோர் மதுவுக்கு அடிமையாகியிருப்பதன் காரணமாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக அக்கராயன் மகா வித்தியாலய அதிபர் க.மதுரநாயகம் தெரிவித்தார்.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் இடம்பெற்ற தரம் 5 மாணவர்களுக்கான பாராட்டு விழாவின் போது உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாணவர்களுடன் உரையாடும் போது பல தந்தைமார் மதுவுக்கு அடிமையாகியிருப்பது தெரிய வந்தது. இதனால் வீடுகளில் பல பிரச்சினைகள் ஏற்படுவதால் கல்வி கற்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும், தாம் பாடசாலைக்கு வருவதில் கூட இடர்களை எதிர்கொள்வதாகவும் பல மாணவர்கள் கண்ணீர் மல்கத் தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

*மாணவர்களுடன் உரையாடும் போது பல தந்தைமார்கள் மதுவுக்கு அடிமை யாகியிருப்பது தெரிய வந்தது.*

கிளிநொச்சி மாவட்டத்தில் சமூக, குடும்ப வன்முறைகளின் பின்னணியில் மதுப்பாவனை உள்ளமை தெரிய வந்துள்ளதாக அரச செயலகத்தில் இடம்பெறும் கூட்டங்களிலும் சுட்டிக்காட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாவித் தொழிலில் மீனவர்கள் ஆர்வம்



மட்டக்களப்பு,நவ.25
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாவிகளில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்கள் புதிய பொறிமுறையைப் பாவித்து ஒட்டி, ஓரா ஆகிய மீன்களைப் பிடிப்பதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வீச்சு வலை, தூண்டில் கொண்டு மீன்களைப் பிடிப்பதற்கு பதிலாக மெல்லிய இரும்பு இழைகளால் பின்னப்பட்ட கூடுகளுக்குள் அல்கா தாவர இனப் பாசிகளை இட்டு அந்தக் கூடுகளை ஆற்றினுள் நிலையாக இடுவதன் மூலம் அவர்கள் மேற்படி மீன்களைப் பிடித்து வருகின்றனர்.

தற்போது வாவிகளில் மீன்கள் அதிகமாகப் பிடிபடுவதால் பிரம்பினால் பின்னப்பட்ட கூடுகளுக்குப் பதிலாக இவ்வகையான கூடு களை மீனவர்கள் பாவித்து வருகின்றனர் என்று மீனவர் ஒருவர் தெரிவித்தார். (ச)

# தமிழர் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்கள்

## தடுத்து நிறுத்த இணைந்து போராடுங்கள் என்கிறார் மாகாணசபை உறுப்பினர்

மட்டக்களப்பு,நவ.25
கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, செங்கலடி, கிரான், வாகரை போன்ற கிராமங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கு எதிராக இனவாத ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்படும் அநீதிகளை உடன் தடுத்து நிறுத்த அனைத்து தமிழ் மக்களும் இணைந்து போராட வேண்டும். தமிழர்களுக்கு எதிரான நவடிக்கைகளுக்கு எதிராக திட்டமிட்டுச் செயற்படாவிட்டால் நாம் தோற்கடிக்கப்படுவோம்.

சிங்கள குடியேற்ற நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் குடிப் பரம்பலைச் சிதைப்பதோடு நின்றுவிடாமல் திட்டமிட்ட அரசின் எல்லை மீள் நிர்ணயத்தின் மூலம் இனப் பரம்பலிலும் மாற்றத்தை ஏற்ப டுத்தலாம் என்ற ஐயப்பாட்டையும் தோற்றுவித்துள்ளது.



ஆரையம்பதி ,காத்தான்குடி, நாவற்குடா, நொச்சிமுனை, ஐயங்கேணி, தளவாய், சவுக்கடி, மங்களகம, மீராவோடை, புணானை, றிதிதென்ன, ஜெயந்தியாய போன்ற கிராமங்களில் உள்ள காணிப் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் -முஸ்லிம் உறவுகளில் முரண்பாடுகள் வலுவடைந்து கொண்டே செல்கின்றன.

இந்த நடவடிக்கைகளில் ஆளும் அரசியல்வாதிகள் பலம் செல்வாக்கு செலுத்துவதாக தமிழ் மக்கள் அச்சமடைந்துள்ளனர். மாகாண அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு, நியமனம் தொடர்பான விடயங்களிலும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் கிழக்கு மாகாண ஆட்சியாளர்களால் புறக்கணிக் கப்பட்டு வருகின்றனர்.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான விடயங்களிலும் கூட அரசு பக்கச்சார்பான கொள்கைகளையே கடைப்பிடித்து வருகின்றன.

13ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட மாகாண சபைக்கான அதிகாரங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதில் அரசு தயக்கம் காட்டி வருகின்றது.

எனவே தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்றனர் என்ற ஐயப்பாடு தமிழ் மக்களிடையே .எழுந்துள்ளது. -என்றார். (ச)

# முரளியின் கருத்து விசமத்தனமானது

## ரெலோ அமைப்பின் செயலர் தெரிவிப்பு

அம்பாறை,நவ.25
கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் வெளியிட்டுள்ள கருத்து விசமத்தனமானதும், கண்டிக்கத் தக்கதுமாகும்.

அவரது கூற்றுக்களை அவர் திருப்பப் பெறுவதுடன் மன்னிப்பும் கோர வேண்டும்.

இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் வெளியிட்டுள்ள கருத்தை வன்மையாகக் கண்டித்து அவர் விடுத்துள்ள இந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்களுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் முத்தையா முரளிதரன் விடுத்துள்ள கருத்து அமைந்துள்ளது.

அவர் விளையாட்டு வீரரென்ற வகையில் சகல மக்களாலும் மதிக்கப்படும்போது பொறுப்புணர்ந்து கருத்துக்களை வெளியிட வேண்டும்.

திடீர் ஞானம் பிறந்தவராக யாரையோ திருப்திப்படுத்த வேண்டுமென்ற நோக்கில் அவர் வெளியிட்டுள்ள கருத்து தமிழ் மக்களை பெரும் அதிர்ச்சிக்கும், கவலைக்குமுள்ளாக்கியுள்ளது.

இந்த நாட்டு தமிழ் மக்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தும் வகையிலான அவரது கருத்து பொறுப்புணர்வற்ற சிறுபிள்ளைத் தன செயற்பாடாகும்.

தமிழ் உணர்வாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்களெனப் பல்வேறு தரப்பினரதும் கண் டனங்கள் இன்று முரளிதரனின் பொறுப்பற்ற கருத்துக்கு எதிராகக் கிளம்பியுள்ளன -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)




உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை ஏற்பாட்டில் செய்த விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. இந்த ஊர்வலத்தில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

## காணிகளுக்கு வடிச்சல் திட்டம்

அம்பாறை,நவ.25
அம்பாறை, அட்டாளைச்சேனை பிரதேசத்தின் 4,500 ஏக்கர் நெற்செய்கை காணிகளுக்கான வடிச்சல் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தக் காணிகளுக்கான வடிச்சல், வாய்க்கால்கள், ஆறுகள் என்பன இயற்கை இடர்களாலும் சட்டவிரோத நடவடிக்கைகளாலும் மூடப்பட்டு நிலங்களாக மாற்றப்பட்டு வந்துள்ளன.

அதனால் நெற்செய்கைக் காணிகளில் தேங்கி நிற்கும் மேலதிக நீர் வடிந்து செல்வதற்கு தடைகள் ஏற்பட்டு நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து தற்போது கிழக்கு மாகாண நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை நீர்ப்பாசன திணைக்



களம் மற்றும் கரையோர பாதுகாப்பு திணைக்களம், சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை ஆகியவற்றின் உயர் அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்று வடிச்சல் திட்டத்தை விரிவாக்கம் செய்யும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றார். (ச)

# பருவ மழை இல்லை; நெற் செய்கை பாதிப்பு

## விவசாயிகள் கவலை

அம்பாறை,நவ.25
பருவகால மழை இன்மையால் அம்பாறை மாவட்டத்தில் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த முறை அம்பாறை மாவட்டத்தில் சுமார் 65,000 ஹெக்ரெயரில் நெற் செய்கை பண்ணப்பட்டுள்ளது என்று மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.கலீஸ் தெரிவித்தார்.

வழமையாக கிடைக்கின்ற காலப்பகுதிக்கான பருவ மழை இம்முறை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அதனால் மழை நீரை நம்பி நெற்செய்கை பண்ணுவதற்கு விவசாயத்திணைக்களத்தால்



அனுமதி வழங்கப்பட்டு செய்கை பண்ணப்பட்ட சுமார் 5,500 ஹெக்ரெயர் வயல் காணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பு, திருக்கோவில், பொத்துவில், அட்டாளைச்சேனை, தம்பிலுவில், கோமாரி, விநாயகபுரம் ஆகிய பகுதிகள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை நீர்ப்பாசனத்துடன் தொடர்புடைய நெற்செய்கைக் காணிகளுக்கான நீர் குளத்திலிருந்து திறந்து விடப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டும்

## சுபைர் தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் காணிப் பிரச்சினைக்குத் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும்- இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ்.சுபைர் கூறினார்.

கிழக்கு மாகாண காணிப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கென திருகோணமலையில் நடைபெற்ற கூட்டத்தில், மட்டக்களப்பு மாவட்ட காணிப் பிரச்சினைகள் தொடர்பாக உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கில் காணி தொடர்பான பிரச்சினைகளும், அவை தொடர்பான முறைப்பாடுகளும் தோன்றிய வண்ணமேயுள்ளன. போர் நடைபெற்ற காலத்தில் இத்தகைய பிரச்சினைகள் எழுவது தவிர்க்க முடியாத விடயமாகும்.

ஆனால் இன்று இத்தகைய காணிப் பிரச்சினைகள், மேய்ச்சல் தரைப் பிரச்சினைகள் [illegible] பாதிக்கும் வகையிலும், சீர்குலைக்கும் வகையிலும் பேசப்படுவதாக அமைவது வருந்தத்தக்க விடயமாகும்.

எனவே இந்தக் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகள், அரசியல்வாதிகள் கூடிப் பேசுவதுடன் அதில் சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களையும் அழைத்துப் பேசி அவர்களது ஆலோசனைகளையும் பெறுவது சிறந்ததென நான் கருதுகின்றேன். எனவே பரம்பரை, பரம்பரையாக விவசாயம் செய்து வந்த எமது மக்களின் விவசாயக் காணிகளில் தொடர்ச்சியாக விவசாயம் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும்- என்றார். (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான பொருளாதாரக் கொள்கையின் பிரதிபலிப்பே 2014 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்

## மக்கள் நலத்திட்டமில்லை என்கிறார் ராம்



ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தவறான பொருளாதார கொள்கைகளின் பிரதிபலிப்பு என விமர்சித்துள்ளார் ஐக்கிய தேசிய க் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளரும், மேல்மாகாண சபை உறுப்பினருமானசி.வைபிராம்.

மக்களுக்கு எவ்வித நிவாரணத்தையும் வழங்காது ஏமாற்றியுள்ள இந்த வரவு - செலவுத் திட்டம் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

2014 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பித்துள்ள வரவுசெலவுத் திட்டம் தொடர்பில் ராம் மேலும் தெரிவிக்கையில்;

"ஒரு நாடு வளர்ச்சியடைய அந்நாட்டின் பொருளாதார நிபுணர்கள் அல்லது கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் சரியான பொருளாதாரக் கொள்கைகளை முன்வைத்து செயற்பட வேண்டும். இது ஒரு நாட்டுக்கு மட்டுமல்லாது வேறு தனியார் நிறுவனங்கள் , அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

ஆனால், இன்று எங்கள் நாட்டின் பொருளாதார கொள்கைகளில் நிறைய தவறுகள் இருப்பதைக் காணக்கூடியதாகவே உள்ளது.

ஆகவே, அரசு இந்த குறைகளை இனங்கண்டு உடனடியாக சரியான பொருளாதார கொள்கைகளைக் கடைபிடிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அப்படியில்லையேல் நாடு எதிர்காலத்தில் பெரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

அண்மைகாலங்களில் நாட்டில் அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்வு, பணவீக்கம் , அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாயின் வீழ்ச்சி என அனைத்தும் தவறான பொருளாதாரக் கொள்கையினால் ஏற்பட்ட விளைவுகளாகும்.

இந்த வரவு-செலவு திட்டம் வருவாய்க்கும், செலவு திட்டமாக இருந்த போதிலும் இதன் மூலமாக அரசு எதிர்பார்க்கும் பொருளாதார வளர்ச்சியை அடைய முடியுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. மேலும் இந்த வரவு-செலவு திட்டத்தில் அரசின் குறுகிய காலம் அல்லது நீண்ட காலத்திற்கான பொருளாதார தீர்வு தென்படுவதாக தெரியவில்லை. வெறுமனே அரச ஊழியர்களுக்கு ரூபா 1200 க்கும் மேல் கொடுப்பனவாக வழங்குவதால் நாட்டில் வறுமையை ஒழித்துக் கட்ட முடியாது என எம்மால் திட்டவட்டமாக கூறமுடியும்.

இது ஒரு புறம் குறுகிய சலுகைகளையும் மறுபுறம் அதை ஈடுசெய்ய வரிகளை விதிப்பதாலும் மக்களின் வாழ்க்கையில் எந்த விதமான பொருளாதார முன்னேற்றத்தையும் உருவாக்க முடியாது. இப்படியான தவறான கொள்கைகள் மேலும் மக்களின் பொருளாதாரச் சுமைகளையே அதி கரிக்கும்.

ஆகவே, அரசு நடுத்தர மற்றும் வருமானம் குறைந்த ஏழை மக்களின் அன்றாட வாழ்க்கை சுமைகளை இனங்கண்டு, மக்கள் எதிர்பார்புகளை நிறைவேற்றும் மக்களுக்கு சாதாரண வரவு-செலவு திட்டத்தையே முன்வைத்து செயற்பட வேண்டும்." என்றார். (13)

# 150 மில்லியன் ரூபாவை விரயம் செய்த பீரிஸ்

### ரவி எம்.பி சாடல்

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், கடந்த 5 மாதங்களில் 44 நாடுகளுக்குப் பயணம் செய்து 150 மில்லியன் ரூபாவை விரயம் செய்துள்ளார் என்ற ஐக்கிய தேசிய க் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இதுகுறித்து இக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவிக்கையில்,

"நாட்டில் நடந்து முடிந்த பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கும் படி அழைப்பு விடுக்க, கடந்த 5 மாதங்களில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் 44 நாடுகளுக்குப் பயணம்மேற்கொண்டுள்ளார். பொதுநலவாய மாநாட்டில் அங்கம் வகிக்கும் 54 நாடுகளில் 44 நாடுகளுக்கு பீரிஸ் நேரில் சென்று அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்காக 150 மில்லியன் ரூபா விரயமானது மட்டுமல்லாது 21 நாடுகளின் தலைவர்களே மாநாட்டுக்கு வருகைத் தந்தனர்.

33 நாடுகளின் தலைவர்கள் வருகை தராத இம்மாநாட்டிற்காக விமான செலவு, தங்குமிட கட்டணங்கள் மற்றும் பிற தேவைகள் என 150 மில்லியன் ரூபாவை இவர் செலவிடப்பட்டுள்ளமை அபத்தமானதாகும்.

அண்மையிலுள்ள இந்தியா, மாலைதீவு மற்றும் அடுத்த மாநாட்டை நடத்தவிருந்த மொறிசியஸ் போன்ற நாடுகளைக் கூட மாநாட்டுக்கு கொண்டுவர முடியாத பயணமாகவே இந்தபீரிஸின்பயணம் அமைந்துள்ளது" என்றார்.

இது குறித்து வெளிவிவகார அமைச்சின் செயலர் கருணாதிலக அமுனுகம விடம் வினவியபோது அவர்,

"ஒரே ஒரு நாட்டுக்கு மட்டுமே பீரிஸ் நேரில் அழைப்பு விடுத்தார். ஏனைய நாடுகளுக்கு அந்தந்த நாடுகளுக்கான இலங்கை தூதரகங்களின் ஊடாகவே அழைப்பு விடுக்கப்பட்டது" என்றார்.

ஆனால், இந்த 150 மில்லியன் ரூபா செலவழிந்தமை பற்றியோ, 44 நாடுகளுக்கு இவர் நேரில் சென்றமைக் குறித்தோ அவர் எவ்வித தகவல்களும் தெரிவிக்க வில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது. (13)

# கைதிகள் தப்பியோட்டம் கண்டுபிடிக்க விசேடகுழு

மஹர சிறைச்சாலையில் இருந்து கைதிகள் தப்பியோடியுள்ளனர். இவர்களைத் தேடிப் பிடித்து கைதுசெய்வதற்காக பொலிஸ் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தப்பியோடிய கைதிகள் மூவரும் பொலன்னறுவை, மாரவில மற்றும் தங்கொட்டுவ பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்களைக் கண்டுபிடித்து கைது செய்வதற்காக விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

# பல்கலை மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி ஆரம்பம்

2013, 2014 கல்வியாண்டுகளுக்காக பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

இந்த பயிற்சி நடவடிக்கைகள் மூன்று கட்டங்களாக இடம்பெறவுள்ளன. நேற்று ஆரம்பமான முதலாம் கட்ட தலைமைத்துவ பயிற்சிகள் மூன்றுவார காலத்திற்கு இடம்பெறும். ஒவ்வொரு கட்டத்திற்கும் பங்குபற்றும் மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. தலைமைத்துவ பயிற்சிகளின் பின்னர் எதிர்வரும் ஜனவரி மாதம் பல்கலைக்கழகத்திற்கான புதுமுக மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (13)

# எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

அநுராதபுரம், விலச்சிய பிரதேச செயலகத்திற்கு முன்னால் பிரதேசவாசிகள் சிலர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விலச்சிய பிரதேச செயலகத்தை பிறிதொரு இடத்திற்கு மாற்ற எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிய வருகிறது

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு வழங்கும் நோக்கில் பிரதேசத்திலுள்ள அனைத்து கடைகளும் மூடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

விலச்சிய பிரதேச செயலகத்தை பிரிதொரு இடத்திற்கு மாற்றுவதன் காரணமாக தாம் பெரும் பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிடும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் குறிப்பிட்டனர்.

தமது கோரிக்கைக்கு உரியவர்கள் தீர்வை முன்வைக்காவிடின் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் எச்சரிக்கை விடுத்தனர். (13)

# ஆசிரியையை முழந்தாழிட வைத்த வழக்கு விசாரணைகள் இன்று ஆரம்பம்

ஆசிரியை ஒருவரை முழந்தாழிட செய்த முன்னாள் வட மேல் மாகாண சபை உறுப்பினர் ஆனந்த சரத் குமாரவின் வழக்கு விசாரணையை இன்று முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள புத்தளம் மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

கடந்த ஜீன் மாதம் 14ஆம் திகதி நவகத்தேகம பிரதேச பாடசாலை ஆசிரியை ஒருவரை முழந்தாழிட வைத்தமை தொடர்பில் ஆனந்த சரத் குமாரவுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டது.

இதன்படி ஜீன் 15ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட ஆனந்த சரத் குமாரவை, விளக்கமறி யிலில் வைக்குமாறு இரண்டு முறை உத்தரவிடப்பட்டது. பின்னர் ஜீன் 27ஆம் திகதி அவர் நிபந்தனைப்பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இதன்போது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நவகத்தேகம பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் எனவும், வழக்கின் சாட்சியாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக் கக் கூடாது எனவும் தெரிவித்து சந்தேகநபரான ஆனந்த சரத்குமாரவுக்கு பிணை வழங்கப்பட்டது.

ஆனால் ஆனந்த சரத் குமாரவினால் தனக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாக குறித்த ஆசிரியை பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

இதனையடுத்து, ஜீலை 25ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பிணை நிபந்தனைகளை மீறியதற்காக ஆனந்த சரத் குமாரவை மீண்டும் விளக்கமறியலில் வைக்க ஆனமடுவ மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

குறித்த ஆசிரியை, பாடசாலை மாணவியான அனந்த சரத்குமாரவின் மகளுக்கு பாடசாலை சீருடை தொடர்பில் எச்சரித்துள்ளார்.

இவ்வாறு எச்சரிக்கப்பட்டதாக மாணவி தனது தந்தையிடம் முறைப்பாடு செய்ய, பாடசாலைக்குச் சென்ற மாகாண சபை உறுப்பினர், குறித்த ஆசிரியையை பாடசாலைக் குள்ளேயே முழங்காலில் நிறுத்தி தண்டனை வழங்கி யிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதையல் தோண்டிய 8 பேர் கைது

எதிமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகலன் பொகுணயாய பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட எட்டுப் பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை எதிமலை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர் களிடமிருந்து புதையல் தோண்டப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள், ஜெனரேட்டர், பழ வகைகள் உள்ளிட்ட பூஜைப் பொருட்கள் மற்றும் மூன்று மோட்டார் சைக்கிள்களும் [illegible] வத்தேகம, தொலபிஹில்ல மற்றும் எதிமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதாகியுள்ளதாக தெரிவிக்கப்படுறது.

சந்தேகநபர்கள் மொனராகலை நீதிவான் நீதிமன்றத்தில் [illegible] எதிர்வரும் 29ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# பால்மா விலையை அதிகரிக்க கோரிக்கை

### விடுத்தன 4 நிறுவனங்கள்

நான்கு பால்மா உற்பத்தி நிறுவனங்கள் தமது உற்பத்திகளின் விலைகளை அதிகரிப்பதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் அனுமதி கோரியுள்ளன.

இந்நிறுவனங்களின் வேண்டுகோள் தொடர்பில் விலைக் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் ஆராயவுள்ளதாக தெரிவித்த அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.எம். ஏ. டக்லஸ், அடுத்த வாரம் இந்தக் குழு கூடவுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக சந்தையில் பால்மா விலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை கருத்திற்கொண்டு இலங்கையில் பால்மா விலைகள் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது.

இதேவேளை, வரவு - செலவுத் திட்டத்தை அடுத்து சீனி, மிளகாய், ரின் மீன், மாசி உள்ளிட்ட உணவு பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளதாக புறக்கோட்டை மொத்த வியாபாரி கள் தெரிவிக்கின்றனர்.

இம்முறை வரவு -செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட இறக்குமதி பொருள்கள் மீதான விசேட தீர்வை நடைமுறைக்கு வந்துள்ள நிலையிலேயே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

எனினும் சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றின் விலைகள் 10 தொடக்கம் 20 ரூபாவால் குறைவடைந்துள்ளதாக புறக்கோட்டை மொத்த வியாபாரிகள் குறிப்பிடுகின்றனர். (13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111, விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நல்லிணக்கத்துக்கு உதவுமா இந்த வரவு-செலவு திட்டம்?

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டை நடத்தி முடிப்பதற்கு அரச தரப்பினர் அள்ளி இறைத்த பணத்தையும், அதற்காக முன் னெடுத்த ஏற்பாடுகளையும், அமைச்சர்களும், அவர் களைச் சார்ந்த அதிகாரிகளும் வெளியிட்டு வந்த கருத் துக்களையும் அவதானித்துக் கொண்டிருந்த பொதுமக்கள் இப்போது ஏக்கப் பெருமூச்சு விடுகிறார்கள். எதிர்த் தரப்பினரோவெனில் "இப்படித்தான் நடக்கும் என்பது எங்களுக்கு அப்பொழுதே தெரியும்" என்பது போல் பொதுமக்களைப் பார்த்து இரக்கப்படுகிறார்கள்.

இதற்கெல்லாம் காரணம் "ஆகா ஓகோ" என்று நடத்தப்பட்ட மாநாட்டையடுத்து அரசு சமர்ப்பிக்கவிருந்த வரவு – செலவுத் திட்டத்தில், 'ஜனாதிபதி தங்கள் வருமானங்களை அதிகரிக்க, விண்ணில் எகிறி நிற்கும் விலை வாசிகளைக் குறைத்து உதவ அருமையான திட்டங்களை வழங்குவார், உடனடி நிவாரணங்களை அள்ளி அள்ளிப் போடுவார்' என்று அனைத்து மக்களும் எதிர்பார்த்துக் காத்திருந்தமைதான்!

மாநாட்டை நடத்துவதற்கு, கொழும்பு நகரைச் சொர்க்க புரியாக்கி, விருந்தாளிகள் தங்கவும், பயன்படுத்தவும் விடுதிகள் அமைத்தது மட்டுமன்றி ஒரு தொகை சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்து ஏகதடபுடல் செலவுகளைச் செய்த அரசு இந்த நாட்டின் ஏழைகள், உழைப்பாளிகள் மனங் குளிரும் வகையில் எதனைத்தான் இந்த வரவு – செலவுத் திட்டத்தில் செய்துள்ளது என்பதாக எதிர்த்தரப்பினர் கேள்வி எழுப்புகிறார்கள்.

ஏற்கெனவே துன்பத்தில் உழலும் மக்களை மின்சாரக் கதிரையை நோக்கி இழுத்துச் செல்வதாக உள்ளது இந்த முறை வரவு – செலவுத்திட்டம் என்று கூறியுள்ளார், எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க. அத்தியாவசியப் பொருள்களின் வரி அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கும் பொருளாதார நிபுணர்கள் பொதுமக்கள் தொடர்ந்தும் நிர்க்கதிக்குள்ளாகும் நிலை ஏற்பட்டிருப்பதாக கூறியுள்ளனர். புதிய வரி திருத்தங்களின் காரணமாக மக்களின் அன்றாட தேவைக்கான சீனி, பருப்பு, வெங்காயம், ரின்மீன் மற்றும் இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இறக்குமதிப் பொருள்களின் விலை உயர்த்தப்படுவதால் உள்ளூர் உற்பத்திகளின் விலை குறையும் என்பது தப்புக் கணக்கு. இதனை உள்ளூர்ச் சந்தைகளில் அன்றாடம் பொருள் கொள்வனவு செய்து வரும் குடும்பப் பெண்கள் அறிவார்கள். ஏற்கெனவே அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகின்றது. பொலித்தீன் பைகளில் தரப்படும் பாணுக்கு 60 ரூபாய் பெற்றவர்கள் இப்போது 62 ரூபாய் வாங்கத் தொடங்கிவிட்டார்கள். இன்னும் எந்தெந்தப் பொருள்களின் விலைகள் எகிறியுள்ளன என்பதை சந்தைகளில் புகுந்து ஆராய்ந்தால்தான் புரியும். இதே வேளை வரும் நாள்களில் மின்சாரம், தொலைபேசி, எரிபொருள், போக்குவரத்துக் கட்டணங்களும் எகிறும் என்று ஊடகங்கள் எதிர்வு கூறுகின்றன.

அரசுத் துறையினரும், தனியார் துறை மற்றும் கூட்டுத் தாபனங்களின் ஊழியர்களும் தங்கள் ஊதியங்கள் பெருமளவில் உயரும் என்று எதிர்பார்த்திருந்தனர். அதுவும் புஸ்வாணமாகியுள்ளது.

உண்மையில் போருக்குப் பின் உலக நாடுகள் ஐநா. மனித உரிமைகள் சபை மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு போன்ற அமைப்புகள் யாவும் தேசிய நல்லிணக்கத்துக்கான உத்வேகச் செயற்பாடுகளை அரசிடமிருந்து எதிர்பார்த்திருக்கும் நிலையில் போரின் போதும் போரின் பின்னரும் நிலை குலைந்து நிர்க்கதிக் குள்ளாகி நிற்கும் மக்களைப் பற்றி வரவு–செலவுத் திட்டத்தில் எதுவும் குறிக்கப்படாதது ஒரு புறமிருக்க சமிக்ஞையாகவாவது ஒரு திட்டத்தை அந்த மக்களின் மேம்பாட்டுக்காக அறிவிக்காமல் போனமை கவலையளிப்பதாகும். அதுமட்டுமல்ல போரில் தம் உறவுகளை உயிருக்கும் மேலான குழந்தைகளை, தாய் தந்தையரை, கணவன் மனைவியரை, உடன்பிறப்புக்களை இழந்து நிற்கும் அம்மக்கள் அவர்களுக்காக கண்ணீர் சிந்திக் கவலை தெரிவிப்பதற்குக் கூட தடை விதிக்கப் பட்டிருப்பது நல்லிணக்கத்துக்கு உகந்த செயல்தானா என்று கேட்பதில் தவறு இருக்க முடியாது.

# காத்திருக்கிறது கண்டம்

க.கோணேஸ்வரன்

இலங்கையில் நடந்து முடிந்துள்ள அணிசேரா மாநாட்டுக்கு பிரிட்டன் பிரதமர் இலங்கை செல்லக்கூடாது என்று லண் டன் வாழ் ஈழத் தமிழர்களாலும் மற்றும் ஏனைய ஐரோப்பா வாழ் ஈழத்தமி ழர்களாலும் தொடர் கவன ஈர்ப்புப் போராட்டங்கள்- ஆர்ப்பாட்டங்கள் லண்டனில் நடைபெற்றன.

இந்தநிலையில் இலங்கை வருவதற்கு முன்னதாக பிரிட்டன் வாழ் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளை பிரதமர் கமரூன் சந்தித்து அவர்களிடம் உரையாடினார்.

பிரதமர் கமரூன் லண்டன் வாழ் ஈழத் தமிழர் பிரதிநிதிகளிடம் தான் இலங்கை செல்வது பற்றி விவரமாகப் பேசினார். இலங்கையின் மனித உரிமை மீறல்களையும் போர்க்குற்றங் களையும் மாநாட்டில் பேசுவேன் முன் வைப்பேன் என்று விளக்கம் கொடுத்தார்.

சிங்கத்தை சிங்கத்தின் குகைக்குள் நின்று மோதுவது போன்று சண்டியருடன் சண்டியனின் சந்தியில் நின்று மோதுவது போன்றுதான் பிரதமர் கமரூன் இலங்கைக்குள் நடந்து கொண் டார்.

பிரதமர் கமரூனின் செயற்பா டுகள் அத்தனையும் இலங்கை ஆட்சியாளர்களை கிலிகொள்ள வைத்துள்ளன. பிரதமர் கமரூனின் கருத் துக்கள் ஆட்சியாளர்களுக்கு எரிச்சலூட்டியுள்ளன.

## வடக்கில் பிரிட்டன் பிரதமர்

இலங்கையின் வரலாற்றில் பிரதமர் கமரூனின் வடபகுதி பயணம் என்பது தமிழ் மக்களுக்குக் கிடைத்த உலக மகா வெற்றியாகும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. லண்டனில் ஈழத் தமிழர்கள் நடத்திய போராட்டங்கள் வெற்றியளித்துள்ளன. அந்தப் போராட்டங்கள் தான் வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரியான பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. சரியான நேரத்தில் சரியான விளக்கத்தை பிரதமர் கமரூனிடம் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் செய்துள்ளார்.

உலகத்தின் பெரும் பகுதியை தனது காலனித்துவ ஆட்சியின் கீழ் வைத்திருந்த பிரிட்டன் இலங்கையைச் சிங்களவர்களிடம் கையளித்த பின்பு முதன் முதலாக உலகத்தின் சக்தி வாய்ந்த தலைவர் ஒருவர் யாழுக்கு பயணம் செய்துள்ளார்.

பிரதமரின் யாழ். விஜயம் என்பது ஈழத் தமிழர்களுக்குக் கிடைத்த மாபெரும் வரப் பிரசாதமாகும். அந்த வாய்ப்பை மக்களும் சரியாகப் பயன்படுத்தியுள்ளார்கள். அதற்காக இந்தப் பொன்னான வாய்ப்பை கொமன்வெல்த் மாநாடு என்ற ஒன்றை ஏற்பாடு செய்த இலங்கை ஜனாதிபதிக் குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

## இறையாண்மையைப் பறித்தது ஐரோப்பிய ஊடுருவல்

தமிழினத்தின் இனப்பிரச்சினையின் மூலவேர்கள் அந்நிய காலனித்துவ வரலாற் றிலே ஆழமாகப் புதைந்து கிடக்கின்றன. தமிழினம் தனது இறையாண்மையை இழக்க நேரிட்டதற்கும் ஐரோப்பிய அரசுகளின் ஊடுருவல்களே காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த உண்மையை அடிக்கடி ஐரோப்பிய அரசியல்வாதிகளுக்கு புலிகளின் மதியுரைஞர் கலாநிதி அன்ரன் பால சிங்கம் லண்டனில் இருந்துகொண்டு ஞாபகமூட்டி வந்தார்.

அத்துடன் 1948 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்களையும் மலையகத் தமிழர்களையும் நட்டாற்றில் விட்டுச் சென்ற பிரிட்டன் ஏகாதிபத்தியவாதி கள் தாம் செய்த பெரும் பாவத்திற்காக செஞ்சோற்றுக் கடனாக இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு விமோசனத்தை பெற்றுக்கொடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு பிரிட்டனுக்கு உள்ளது.

## பிரிட்டனில் தமிழர்களின் செல்வாக்கு

பிரிட்டனைப் பொறுத்தமட்டில் ஈழத் தமிழர்களின் செல்வாக்கு என்பது நல்ல நிலையில் உள்ளது. லண்டன் மாநகரில் மட்டும் 65 வீதமான வர்த்தகமும் ஏனைய வியாபார நிலையங்களும் ஈழத் தமிழர்களின் கையிலுள்ளன. மற்றும் பிரிட்டனில் பல நகரங்களில் ஈழத் தமிழர்கள் நகர மேயர்களாக உள்ளார்கள். அங்கு கன்சர் வேடிவ் கட்சி தனது கட்சிக்கான உபகட்சியாக பிரிட்டன் வாழ் தமிழர்களை ஒன்றிணைத்து பிரிட்டன் தமிழர்களின் கன்சர்வேடிங் கட்சி என்ற புதிய கட்சியை கடந்த வருடம் முன்னாள் பிரதமர் டேவிட் பிறவுனின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பித்துள்ளார்கள். மற்றும் பிரிட்டன் அனைத்து நாடா ளுமன்றக் குழு என்று என்ற அமைப்பை கடந்த வருடம் அமைத்துள்ளார்கள். இந்த அமைப்பில் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்லாது ஐரோப்பிய வெள்ளைக்கார நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளார்கள். இப்படியாக பிரிட்டனில் ஈழத்தமிழர்கள் அரசியலிலும் கோலோச்சுகின்றார்கள்.

## ஐ.நா. ஊடாக விசாரணைக்கு முயற்சியா?

கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை ஜெனிவாவில் தொடர்ந்து கால அவகாசம் தான் கேட்டு வருகின்றது. எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இலங்கை இன்னும் கால அவகாசம்தான் கேட்கப் போகின்றது. அதற்கு சான்றாகவே கொமன்வெல்த் தலைமைச் செயலர் கமலேஷ் சர்மா இலங்கையில் உள்நாட்டு விசாரணை போதுமானது என்றும் சர்வதேச விசாரணை நடைமுறைச் சாத்திய மற்றது என்றும் இலங்கைக்கு இன்னும் 13 மாதங்கள் கால அவகாசம் வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். இப்படியாக காலத்தை இழுத்தடிப்பது என்பதுதான் இலங்கையின் நோக்கம்.

## வடக்கில் இராணுவம் குறைக்கப்பட வேண்டும்

இந்த நிலைமையைப் புரிந்துகொண்ட பிரதமர் கமரூன் வடக்கில் இராணுவ ஆக்கிரமிப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும், படைகளின் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும் என்பதில் பிரிட்டன் உறுதியாகவுள்ளது. இதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை இதனையே சர்வதேச சமூகம் விரும்புகின்றது. வடக்கில் நடைபெற்று வரும் மனித உரிமைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று பிரதமர் கமரூன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முன்னாள் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மஹிந்த ராஜபக்ஷ அரசால் வலுக்கட்டாயமாக பதவி நீக்கம் செய்யப்பட்டதானது இலங்கையின் நீதித்துறை செயலிழந்து விட்டது. எனவே, சர்வதேச அழுத்தத்தின் ஊடாகத்தான் இலங்கையின் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வைக் காணலாம். இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள், போர்க்குற்றங்கள், மற்றும் காணாமற்போனோர்கள் தொடர்பில் நீதியான பக்கச் சார்பற்ற சர்வதேச சமூகம் எற்றுக்கொள்ளக் கூடிய விசாரணை நடத்தப்பட வேண்டும் இல்லையேல் சர்வதேச விசாரணையை பிரிட்டன் வலியுறுத்தும் என்று பிரதமர் கமரூன் அழுத்திச் சொல்லியுள்ளார். பிரதமரின் எச்சரிக்கையை இலங்கை துளினம் செய்துள்ளது.

ஆனால், பிரதமரின் எச்சரிக்கையை இலங்கையில் ஐ.தே.க. உட்பட அதிகமானோர் பாரதூரமாகப் பார்க்கின்றார்கள். காரணம் பிரிட்டனின் கருத் தையும் பிரிட்டனையும் ஏளனமாகப் பார்க்க முடியாது. ஐ.நாவில் சக்திமிக்க வல்லரசு நாடு ஒன்றின் எச்சரிக்கையை மட்டமாகப் பார்த்தால் அதன் பின் விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும். இலங்கையைக் காப்பாற்றத் துடிக்கும் ஐ.நாவில் விஜய் நம்பியார். அணிசேரா செயலர் கமலேஷ் சர்மா இந்தியாவின் கோமாளி அரசியல்வாதி சுப்பிரமணியசுவாமி ஆகியோரின் காவடிகள் பிரித்தானியாவில் பலிக்காது என்பது இலங்கைக்கு புரிய வேண்டும்.

## வலுப்பெற்று வரும் சர்வஜன வாக்கெடுப்பும் போர்க்குற்றமும்

எந்த நோக்கத்தை நோக்கிப் பிரபாகரன் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தாரோ எந்த நாட்டின் ஆதரவை நோக்கிக் காய் நகர்த்தினாரோ அந்த நோக்கம் நிறைவேறத்தான் போகின்றது. அவரின் போராட்டத்தின் களங்களும், தளங்களும் மாறியுள்ளன. ஆனால், நோக்கமும், வடிவமும் ஒன்றுதான். ஆயுதம் மட்டும்தான் மறைந்துள்ளது. இலங்கைக்குள் மட்டும் பேசப்பட்டு வந்த தமிழர் பிரச்சினை இன்று சர்வதேச அரங்கில் ஒலிக்கின்றது.

சர்வதேசத்திற்கு இலங்கை கட்டுப்படாமல் திமிராக நடக்குமானால் பொருளாதாரத் தடையும் நேட்டோப் படைகளின் வருகையும் இலங்கைக்குத் தவிர்க்க முடியாத அழுத்தங்களாகி விடும்.

ஈழத் தமிழர் பிரச்சினை என்பது இறுதிக் கட்டத்தை நெருங்கிவிட்டது இன்னும் எஞ்சியிருப்பது போர்க்குற்றம் பற்றிய விசாரணையும் வடக்கு, கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பும்தான் இந்த இரண்டும் நடந்தேயாக வேண்டும் என்ற குரல்கள் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

## பிரிட்டனில் இருந்து இலங்கைக்கு ஆபத்து

எதிர்வரும் காலங்களில் பெரும் அழுத்தங்கள் பிரிட்டன் அரசு ஊடாக இலங்கைக்கு கிளம்பவுள்ளன. எந்தப் பிரிட்டன் தமிழர்களின் உரிமைகளை சிங்களவர்களுக்கு தாரைவார்த்துக் கொடுத்துவிட்டுச் சென்றதோ அந்தப் பிரிட்டனே தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவுள்ளது. தமிழ் மக்களின் தாகமும், புலிகளின் தாகமும் தணியும் காலம் நெருங்கிவிட்டது. சிட்டி சன் திரைப்படத்தில் அத்திப்பட்டிக் கிராமத்தில் வருவது போன்று உயிரோடும் உடலோடும் புதைக்கப்பட்ட மக்களின் உண்மைக் கதைகள் சர்வதேச நீதிமன்றில் உயிர் பெறப் போகின்றது.

ஈழத் தமிழர்களைக் காக்க ஐ.நா. தவறிவிட்டதாக மீண்டும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் தெரிவித்துள்ளார். இது பான் கீ - மூனின் ஒப்புதல் வாக்கு மூலம்தான். ஐ.நா. மன்றமே வாக்கு மூலம் அளித்துள்ள நிலையில் இனிமேல் இருப்பது வாக்கு மூலங்களை நெறிப்படுத்துவது மட்டும்தான்.

காலம் கடந்தாலும் சர்வதேச அரங்கில் இலங்கையை இந்தியா பிணையெடுத்துக் காப்பாற்றி வந்தாலும் தர்மம் வெல்லும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையுள்ளது. மனித உரிமை மீறல் மற்றும் போர்க்குற்றம் ஆகியவற்றுக்கு இலங்கை பதிலளித்தேயாக வேண்டும் என்பதில் மாற்றமிருக்க முடியாது.

பிரிட்டனில் இருந்துதான் ஈழத் தமிழர்கள் பிரிட்டன் நாடாளுமன்றத்தின் ஊடாக பெரும் ஆதிக்கம் செலுத்தவுள்ளார்கள். அங்கிருந்துதான் இலங்கை பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டும். இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த வேண்டும் அல்லது அரசு வீறாப்புப் பேசுமானால் பிரித்தானியா ஊடாக வரப்போகின்ற ஐ.நா. நெருக்கடிகள் மற்றும் அழுத்தங்களை எதிர்கொள்ள வேண்டும். எதிர்வரும் காலங்களில் இலங்கை ஐ.நா. மன்றில் கண்டம் கடக்க வேண்டிய நிலை ஏற்படப் போகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வன்முறை இல்லாத உலகில் பெண்கள்

ராஜராஜன்



இன்று சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்புத் தினமாகும்

இன்று சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்புத் தினமாகும். இந்தத் தினம் தொடர்பாக எவருமே மகிழ்ச்சி தெரிவிக்க முடியாது. ஏனென்றால் பெண்களை மதித்து அவர்களின் உரிமைகள் யாவற்றையும் வழங்க வேண்டிய இந்த உலக சமுதாயம் அவர்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கென ஒரு தினத்தை தெரிவு செய்து கொண்டமை வேதனைக்குரியது.

இன்றைய உலகிலே மிகவும் பாதிக்கப்படுபவர்களாகப் பெண்களே திகழ்கின்றார்கள். என்னதான் வாயளவில் பெண்ணின் பெருமை, பெண்களின் உரிமைகள் தொடர்பாக நாம் கூறிக் கொண்டிருக்கின்றபோதிலும் அவர்களை உண்மையாகவே மதித்துப் போற்றுகின்றோமா என்ற கேள்விக்குப் பதில் வழங்க முடியாத நிலையே நீடிக்கின்றது.

பெண்களை மதிக்காமல் விட்டாலும் பரவாயில்லை. அவர்களுக்கு எதிரான வன்முறைகளைக் கைவிடுவதற்குக் கூட இந்த மனித சமுதாயம் முன்வராது பதுங்கியிருப்பதுதான் நெஞ்சில் தாங்கொணாத வலியை ஏற்படுத்துகின்றது. மனிதர்களாக இருந்தாலும் சரி அல்லது மிருகங்களாக இருந்தாலும் சரி அங்கு பெண்மையின் உருவில் காட்சியளிக்கும் அன்னையானவள் பிரமாண்டமாய் உயர்ந்து நிற்கின்றாள். பெண்ணின் பெருமைகளுக்கு எல்லாம் உதாரணமாகத் திகழ்பவள் அன்னையே. அவளது அன்புக்கும் அருளுக்கும் இணையாக நாம் வேறு எதையும் கூற முடியாது. இந்தவுலகுக்கு எம்மைக் கொண்டு வருபவள் அவள்தான். பெண்களை வன்முறைக்குள் தள்ளிவிட்டுச் சீரழிப்பவர்கள் ஒரு கணம் தன்னைப் பெற்றெடுத்த தாயை நினைத்துப் பார்த்தால் தாம் செய்யும் செயல்கள் எவ்வளவு ஈனத்தனமானவை என்பதைப் புரிந்து கொள்வார்கள். இதனைப் புரிந்து கொள்ளாதவர்கள் மனிதப் பிறவிகளே இல்லை. காட்டில் வாழுகின்ற கொடிய மிருகங்களை விடக் கீழானவர்கள் அவர்கள்.

தினமும் பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதை நாம் அறிந்து கொள்கின்றோம். வயது வேறுபாடின்றி இளம் மொட்டுக்களிலிருந்து முதுமைப் பருவத்தை அடைந்தவர்கள் வரை பெண்கள் என்ற அடையாளத்தை மட்டுமே கொண்டு வன்முறைகளுக்கு ஆளாகி வருகின்றனர்.

வீடுகள், பொது இடங்கள், அலுவலகங்கள் என்பன பெண்களுக்கெதிரான வன்முறைக் களங்களாக மாறியுள்ளன.

திருமணம் என்பது பெண்கள் வாழ்வில் வசந்த காலத்தைப் போன்றது. அன்பான கணவன், பாசத்தைப் பொழியும் குழந்தைகள் மகிழ்ச்சியான தீங்கில்லாத உறவினர்கள் ஆகியோரைத்தான் திருமணமான ஒருபெண் எதிர்பார்க்கின்றாள். ஆனால் அனைவருக்கும் இது அமைவதில்லை. திருமணம் என்பதே நரகமாக மாறிவிடும் நிலையில் ஏராளமான பெண்கள் குடும்ப வன்முறைகளுக்கு ஆளாகித் தவிக்கின்றனர். சிறுசிறு விடயங்களுக்குக் கூட பெண்கள் துன்புறுத்தப்படுகின்றனர். கணவனானவன் தனது மனைவியையும், பிள்ளைகள் தமது தாயையும் கொடுமைப்படுத்தும் சம்பவங்கள் கூட இடம் பெறுகின்றன. இதைவிடக் கொடுமையான விடயமே இருக்க முடியாது.

சீதனம் என்னும் கொடிய வழக்கம் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு ஆரம்ப சுழி இடுகின்றது என்று துணிந்து கூறலாம். சீதன அரக்கனால் பல பெண்களின் வாழ்க்கை துன்பத்தில் உழல்வதையும் காண்கின்றோம்.

பல பெண்களின் உயிர்களையும் சீதனம் காவு கொண்டுள்ளது. ஆண் வர்க்கத்தையே இழிவு படுத்தும் இந்தக் கேவலமான வழக்கம் மென்மேலும் வீரியம் பெற்றுச் செல்கின்றமைதான் வேதனை தருகின்றது.

பெண்கள் பிரயாணத்தை மேற்கொள்ளும் போது கூட மிருக உணர்வு கொண்ட ஆண்களால் துன்புறுத்தப்பட்டு வன்முறைக்கு ஆளாக்கப்படுகின்றனர். அலுவலகங்களில் பணிபுரியும் ஆண்களில் சிலர் தம்முடன் பழகும் பெண்களைத் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். ஒரே அலுவலகத்தில் ஆண்களும், பெண்களும் பணிபுரியும் போது அலுவலகப் பணிகள் தொடர்பாகப் பழக வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால் சில ஆண்கள் தவறான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதும் தவறாக நடந்துகொள்ள முயல்வதும் எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத இழிசெயல்களாகும்.

மேலும் பாலியல் ரீதியான வன்முறைகளும் பெண்களுக்கு எதிராக அதிகரித்துள்ளன. தற்போதைய நவீன உலகின் மாற்றங்கள் ஆண்களின் மனங்களில் கேவலமான சிந்தனைகளைத் தோற்றுவிக்கின்றன. இதற்கான வடிகாலாகப் பெண்கள் பயன்படுத்தப்படுவதுதான் தாங்க முடியாத சோகத்தை ஏற்படுத்துகின்றது.

பூப்போன்று மென்மையான உடலமைப்பைக் கொண்டவர்கள் பெண்கள் என்று கூறுவார்கள். ஆனால் புயல் போன்ற வன்முறைகள் இவர்களைச் சின்னாபின்னமாக்கி வருகின்றன. எனவே பெண்கள் இன்னமும் தம்மை மென்மை என்ற வட்டத்தினுள் வைத்திருக்க வேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது. இந்த உலகிலே மனிதர்கள் என்று எடுத்துக் கொண்டால் ஆண், பெண் என்ற இரு பிரிவுகள் மாத்திரமே உள்ளன. ஏனைய பிரிவுகள் எல்லாம் மனிதர்களால் தமது வசதிக்கென உருவாக்கப்பட்டவையாகும். இதில் பெண்கள் மட்டுமே பல்வேறு வகையிலும் வன்முறைகளுக்கு ஆளாக்கப்படுகின்றமை ஒருபோதுமே ஏற்றுக் கொள்ள முடியாதவை. சகித்துக் கொள்ள முடியாவை.

இதன் வெளிப்பாடாக இந்தியாவில் பல புதிய சிந்தனைகள் உருவாக ஆரம்பித்துள்ளன. இந்தியத் தலைநகரான டில்லியில் மருத்துவக் கல்லூரி மாணவியொருவர் பாலியல் வன்முறைக்காளாகி வன் கொலை செய்யப்பட்ட சம்பவம் இந்தப் புதிய சிந்தனைகளுக்கு வித்திட்டுள்ளது.

இதன் பிரகாரம் குற்றவாளிகளென நிரூபிக்கப்பட்டவர்களுக்கு நீதிமன்றத்தால் மரண தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஒட்டுமொத்த ஆண்களும் இந்த அதிகபட்சத் தண்டனையால் திருந்திக் கொள்வார்களென நாம் எதிர்பார்க்க முடியாது.

எனவே ஒட்டுமொத்த உலக சமுதாயமும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழ வேண்டும். வன்முறைகள் எந்த ரூபத்தில் இடம்பெற்றாலும் அவற்றில் ஈடுபடுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படும் நிலை உருவாக வேண்டும். பெண்களைப் போற்றிப் பாதுகாப்பதன் அவசியத்தை அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றுக்கு எல்லாம் மேலாக எம்மைப் பெற்றெடுத்து வளர்த்தெடுக்கும் அன்னையை பெண்களின் முழு உருவமாகக் கொள்ளும் வகையில் மனிதர்களின் மனங்களில் ஒரு உயர்ந்த எண்ணத்தை விதைக்க வேண்டும்.

பெண்கள் கூட தமக்கெதிரான வன்முறைகளை எதிர்த்து நின்று முறியடிப்பதற்கான துணிவுள்ளவர்களாகத் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். தொடர்ந்து அடியை வாங்கும் போதுதான் மற்றவர்கள் அடிப்பதற்கு முனைவார்கள். அதனைத் தடுப்பதற்குத் துணிந்து நின்றால் அடிப்பவன் அஞ்சியோடிவிடுவான். பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் இவ்வாறே தகர்த்தெறியப்பட வேண்டும்.

இன்றைய சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்புத் தினத்தில் வன்முறைகளற்ற ஒரு உலகில் பெண்கள் வாழ்வதற்கான நிலையை உருவாக்குவோமென நாம் சபதம் எடுப்போம்.

## மருத்துவர் சத்தியமூர்த்தியின் விளக்கம்

உதயனில் வெளியான மொழியாக்கக் கட்டுரை ஒன்றில் தனது பெயர் மேற்கோள்காட்டப்பட்டமை தொடர்பில் தனது உண்மை நிலையை விளக்க விரும்பி மருத்துவர் தங்க முத்து சத்தியமூர்த்தி கடிதம் ஒன்றை உதயன் பத்திரி கைக்கு அனுப்பி வைத்துள்ளார். வன்னியில் நடந்த இறு திப் போரின் போது அங்கு மக்களுடன் தங்கியிருந்து மனித நேய மருத்துவப் பணியாற்றிய ஒருசில மருத்துவர்களில் ஒருவர் சத்தியமூர்த்தி. அவரது விளக்கம் இங்கு பிரசுரமா கின்றது.

கடந்த 12ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையின் 12, 13ஆம் பக்கங்களில் மொழியாக்கக் கட்டுரை ஒன்று வெளியாகி இருந்தது. கனடா நாட்டில் இருந்து வெளியாகும் ஆங்கில இணையத்தளம் வெளியிட்ட கட்டுரையின் மொழியாக்க மாகவே அது அமைந்திருந்தது. போர் நடைபெற்ற காலங்களிலும் அதன் பின்னரும் பல்வேறு இணையங்களிலும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களினது அறிக்கைகளிலும் தெரிவிக்கப்பட்டிருந்த விடயங்கள் பலதே அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் கட்டு ரையில் இருந்த பல தகவல்கள் என்னால் தெரிவிக்கப் பட்டவை என்று கூறப்பட்டிருந்தது. கனடா நாட்டின் ஆங்கில இணையத் தளத்திற்காக எந்த ஒரு செய்தியாளரும் என்னைச் சந்தித்து இதுவரையில் பேட்டியெடுக்கவில்லை. அதற்காக என்னை எவரும் அணுகியதுமில்லை. அப்படியிருந்தபோதும் என்னை மேற்கோள்காட்டி இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டமை எனக்குக் கவலையளிப் தாக வும் வருத்தமளிப்பதாகவும் உள்ளன. மொழியாக் கத்தை வெளியிடுவதற்கு முன்னர் 'உதயன்' என்னுடன் தொடர்பு கொண்டிருந்தால் இந்த விடயம் தெளிவுபடுத்தியிருக்க முடியும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

## உலகில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும்

### சர்வதேச தினம் கார்த்திகை 25

1.பெண்ணே உலகத்தின் பொன்-ஆயினும்
நம் முன்னே நாளும் மாதர் மீது வக்கிரம் ஏனோ!
கண்ணே என்று காத்திட வேண்டும்-அன்றில்
பின்னே வருந்திடலாகாது காண்

2.கல்வியில் சம உரிமை உண்டு-பெண்ணுக்கு
தொழிலில் சம உரிமை உண்டு-பெண்ணுக்கு
தலைமைத்துவத்தில் சமஉரிமை உண்டு-குடும்ப
வாழ்வில் சம உரிமை உண்டு-பெண்ணுக்கு

3.ஏழைப் பெண்ணை வஞ்சிக்காதே-கோழை நீ
விதவைப் பெண்ணை வஞ்சிக்காதே-கோழை நீ
கன்னிப் பெண்ணை வஞ்சிக்காதே-பேதை நீ
அகதிப் பெண்ணை வஞ்சிக்காதே-பேதை நீ

4.இல்லது இல்லத்து வன்மம் என்றிடுவீர்
அல்லது தொழிலிடத்து வன்மம் என்றிடுவீர்
நில்லது பொது விடத்து வன்மம் என்றிடுவீர்
நல்லது நகல் இனப் பாகுபாட்டு வன்மம் என்றிடுவீர்

5.அக்கிரமிக்க பூமியில் பெண் மீது
உக்கிரமிக்க வன்புணர்வுகளை- கொடிதே
வக்கிரத்துடன் புரியும் ஆடவரை
சீக்கிர மிகவே தண்டித்திடல் வேண்டும் காண்

6.பொங்கு பெண் எதிர் வன்முறைகள்
இங்கு இல்லை என்றிடும் நல்நாளை நோக்கி
எங்கும் இஃததனை எடுத்தியம்பிடப்
பாங்கு இன்று எமக்குண்டென்றே முழங்கு சங்கே.



மருத்துவர் சி.யமுனாநந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியசாலை வளாகத்தில் கட்டாக்காலி நாய்கள்

கொழும்புத்துறை, நவ.24

யாழ்.போதனா வைத்திய சாலையின் உட்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் அதிகரிப்பும், தொல்லையும் காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரி விக்கின்றனர்.

நோயாளர் விடுதிகளின் முன்பாகவும், பார்வையாளர்கள் சென்றுவரும் வழிகளிலும் பரவலாக அலைந்து திரியும் நாய்கள் தமக்குள்ளே சண்டையிடுவதுடன் வைத்தியசாலைக்குச் செல்வோரையும் அச்சுறுத்தும் வகையில் குலைப்பதாகவும் நோயாளர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.

சன நெருக்கடி மிகுந்த பார்வையாளர் நேரங்களில் தவறுதலாக மக்களின் கால்களுக்குள் நாய்கள் மிதிபட்டு கடிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

நோய்களுக்கு சிகிச்சை பெறச் சென்று நாய்க்கடிக்கு இலக்காகி புதிய நோயைச் சந்திக்க வேண்டிய இக்கட்டான நிலையை நீக்க வைத்திய சாலை நிர்வாகம் கட்டாக்காலி நாய்களை அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-135)





காரைநகர், நவ.25

காரைநகர் பிரதேச செயலகத்துக்கு அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய சுவாமி படங்கள் வைப்பதற்கான பீடம் இ.ச.பேரம்பலம் நாகரட்ணத்தால் வழங்கப்பட்டுள்ளது.

சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான குறித்த பீடம் வழங்கும் நிகழ்வு வெள்ளியன்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், ஈ.எஸ்.பி.நாகரட்ணம், காரைநகர் முன்னாள் பிரதேச செயலரும், தெல்லிப்பழை பிரதேச செயலருமான, க.ஸ்ரீமோகன் சங்கானைப் பிரதேச செயலர் அ.சோதிநாதன் மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-250)

*பாடசாலை பூமரக்கன்றுகள் சேதம்*

## ஆசிரியை, மாணவர்கள் பொலிஸ் விசாரணைக்கு

கொடிகாமம், நவ.25

பாடசாலை வளாகத்தில் காணப்பட்ட பூமரக்கன்றுகளில் கிளைகள் வெட்டப்பட்டதால் பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை உட்பட மாணவர்கள் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பாடசாலையில் அழகுக்காக வைக்கப்பட்டிருந்த பூ மரங்களிலிருந்து கிளைகள் வெட்டப்பட்டுள்ளதாக அதிபர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து பாடசாலையின் மூத்த ஆசிரியையும் மாணவர்கள் சிலரும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணையின் பின்னர் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (வ)

## செஞ்சிலுவைச் சங்கத்தால் மலசலகூடம்

யாழ்ப்பாணம், நவ.25

சர்வதேச கழிப்பறை தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு மலசலகூடம் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. பயனாளிகள் தெரிவின் அடிப்படையில் அளவெட்டி தெற்கு பகுதியைச் சேர்ந்த சாந்தராசா சுபாசினி என்பவரது குடும்பத்துக்கு மலசலகூடத்தை அமைத்துக் கொடுக்க இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (வ-7)

# எழுதுமட்டுவாழ் மக்களுக்கு விழிப்புணர்வு

தென்மராட்சி, நவ.25

எழுதுமட்டுவாழ் தெற்கு பிரிவு மக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கொடிகாமம் பொலிஸாரால் நேற்று முன்தினம் எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலய மண்டபத்தில் நடத்தப்பட்டது.

கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.பி.எதிரிசிங்கவின் ஏற்பாட்டில் நிலைய குற்றத் தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி தர்மசூரிய, போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் அதிகாரி புஷ்பநாதன், எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவுக்கான சிவில் பாதுகாப்புப் பிரிவு பொலிஸ் கான்ஸ்டபிள் பி.எம்.பீ.எஸ்.யு.அப்துல்லா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். நிகழ்வில் 100 இற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். எழுதுமட்டு வாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு நிகழ்வில் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (வ-9)



தருவது வித்தியா

## இன்றைய நாள்

**உங்களுக்கு எப்படி?**

**மேடம்:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். பணவரவு சீராக இருக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**இடபம்:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைசுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

**கடகம்** : நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். சிலர் உங்களை தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம்.

**சிங்கம்:** அலைச்சலுடன் ஆதாயம் உண்டாகும். அசதி, சோர்வு வந்து நீங்கும். யாருக்காகவும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.

**கன்னி:** எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்

**நாளை**

கார்த்திகை-10 செவ்வாய்க்கிழமை 26.11.2013
திதி: அட்டமி மு.ப.10.35 வரை
நட்சத்திரம்: பூரம் முழுவதும்
சுபநேரம்: 10.42 - 12.12 வரை
இராகுகாலம்: 03.12 - 04.42 வரை

**துலாம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பணவரவு திருப்தி தரும். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள்.

**விருச்சிகம்:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சியைத் தரும்.

**தனுசு:** எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப்போவது நல்லது.

**மகரம்:** முன்கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்கமுடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**கும்பம்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசி அனைவரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளி வட்டாரங்களில் தொடர்பு அதிகரிக்கும்.

**மீனம்:** உத்தியோகத்தில் பணிகளை [illegible] அயல் வீட்டாரின் அன்புத் தொ லைகள் விலகும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | | 8 | 6 | | 7 | | |
| | | 9 | | 3 | | | | |
| | 2 | 6 | | 4 | | 9 | 3 | |
| 4 | | 7 | | | | | 8 | |
| 3 | | | 6 | 5 | 7 | | | 9 |
| | 9 | | | | | 3 | | 7 |
| | 7 | 4 | | 2 | | 8 | 5 | |
| | | | | 1 | | 6 | | |
| | | 8 | | 7 | 4 | | 9 | 3 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 6 | 8 | 4 | 2 | 5 | 3 | 7 |
| 5 | 7 | 2 | 1 | 3 | 9 | 4 | 6 | 8 |
| 8 | 4 | 3 | 6 | 7 | 5 | 1 | 9 | 2 |
| 4 | 6 | 7 | 5 | 9 | 3 | 2 | 8 | 1 |
| 3 | 9 | 5 | 2 | 8 | 1 | 7 | 4 | 6 |
| 1 | 2 | 8 | 4 | 6 | 1 | 3 | 5 | 9 |
| 6 | 5 | 1 | 3 | 2 | 8 | 9 | 7 | 4 |
| 7 | 3 | 4 | 9 | 1 | 6 | 8 | 2 | 5 |
| 2 | 8 | 9 | 7 | 5 | 4 | 6 | 1 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் மீதான வன்முறைகள்

அனுஜன்






பெண்கள் மீதான அடக்குமுறை காலத்துக்குக் காலம் வெவ்வேறு வகையில் வடிவம் பெறுகின்றது. கடந்த சில தசாப்தங்களில் பெண்கள் மீதான அடக்குமுறைகள், உடல், உள ரீதியான வன்முறைகளாக மாற்றம் பெற்றுள்ளன. அதிலும் குடும்பத்தில் தமக்கு மிகவும் நெருக்கமானவர்களாலேயே, தெரிந்தவர்களாலேயே பெண் அதிகளவில் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றாள். நாம் வன் முறைக்கு உட்படுத்தப்படுகின்றோம் என்பதை அறிந்திருந்தும் அதையெதிர்த் துக் குரல் எழுப்ப முடியாதவர்களாய், அனேக பெண்கள் இருக்கையில், தம்மை அடித்துத் திருத்தும் உரிமை கணவனுக்கு இருப்பதாக எண்ணும் பெண்களின் எண்ணிக்கையும் கணிசமானதாக இருக்கின்றது. அவ்வாறு தம் மீதான வன்முறைகளை எதிர்க்கப் பெண்கள் துணியாத நிலையில் அவர்கள் மீதான வன்முறைகள் நாளுக்கு நாள் கட்டுக்கடங்காமல் பெருகிவிடுகின்றன.

பெண்கள் மீதான வன்முறைகள் தொடர்பில் ஐ. நா. மற்றும் உலக உணவு ஸ்தாபனம் என்பன வெளியிட்டுள்ள அறிக்கையில் பல அதிர்ச்சித் தரவுகள் வெளியாகியுள்ளன. அதன் படி, 1000 பேரைக் கொண்ட ஒரு கிராமத்தில், 500 பேர் பெண்களாக இருக்கின்றனர். 510 பெண்கள் பிறந்திருக்க வேண்டிய இடத்தில் 500 பெண்கள் இருக்கின்றனர்.

## குடும்பத்தில் வன்முறை

குடும்ப வன்முறைகள் பல்வேறு வடிவங்களை எடுக்கின்றன. அடித்தல், உதைத்தல் என்பனவற்றிலிருந்து, உள ரீதியான பாதிப்புகள் வரை குடும்ப வன்முறைகள் வேறுபடுகின்றன. பெண்ணை அவளது உறவினர், நண்பர்களிடமிருந்து தனிமைப்படுத்தல், பெண்ணின் நடவடிக்கைகளைக் கண்காணித்தலும், கட்டுப்படுத்தலும், தொடர்ச்சியான உடல் உள வன்முறைகளாக இவை காணப்படுகின்றன.

## உலகம் பூராவும் நிலவும் நிலை

மூன்று பெண்களில் ஒருவர் தான் நன்கு அறிந்த வர்களாலேயே அல்லது தனக்கு மிக நெருக்கமானவர்களாலேயே அடித்துத் துன்புறுத்தப்பட்டோ, கட்டாய வன்புணர்வுக்குத் தள்ளப்பட்டோ வன்முறைக்குள்ளாகின்றாள் கொலை செய்யப்படும் பெண்களில் 70 சதவீதமானவர்கள், அவர்களது கணவர்களாலேயே கொல்லப்படுகிறார்கள். கென்யாவில், ஒவ்வொரு கிழமையும் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்கள் தமது துணைவர்களால் கொல்லப் படுகிறார்கள். எகிப்தில் திருமணமான பெண்களில் 35 சதவீதமானோர் திருமண வாழ்வின் ஏதோவொரு கட்டத்தில் கணவர்களால் அடித்துத் துன்புறுத்தப்படுகின்றனர்.

கனடாவில் வீட்டு வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களின் பாராமரிப்புக்கென வருடாந்தம் 1.6 பில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்படுகின்றது.

அமெரிக்காவில் ஒவ்வொரு 12 செக்கனுக்கு ஒரு பெண் தனது துணைவனால் அடித்துத் துன்புறுத்தப்படுகின்றாள்.

பாகிஸ்தானில் 42 சதவீதமான பெண்கள் குடும்பத்தில் தம்மீது கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைகளைத் தமது தலைவிதி என ஏற்றுக்கொள்கின்றனர்.

ரஷ்யாவில் தினமும் சுமார் 36,000 பெண்கள் தமது கணவர்களால் வன்முறைக்குள்ளாகின்றனர்.

ஸ்பெயினில் 2000ஆம் ஆண்டளவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம், 5 நாள்களுக்கு 1 தடவை ஒரு பெண் தனது கணவனால் கொல்லப்படுகின்றாள்.

## பாலியல் வன்முறைகள்

ஒரு பெண்ணை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்துவதே, பாலியல் வன்முறையின் உச்சக்கட்டமாகக் கருதப்படுகின்றது. விருப்பமில்லாத கருத்தரிப்பு, எச். ஐ. வி/ எயிட்ஸ் உட்பட்ட பாலியல் நோய்களின் தொற்றுகை என்பனவற்றோடு, பாலியல் வன்புணர்வுக்கு நெருக்கமாகத் தொடர்புபடுகின்றது. தாம் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுவிட்டோம் என்பது வெளியே தெரியவந்தால் சமூகத்தால் ஒதுக்கிவைக்கப்பட்டுவிடுவோம் என்ற பயத்தாலேயே, தமக்கு நேர்ந்த அவலத்தை பல பெண்கள் வெளியே சொல்வதில்லை. தன்னை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய வனை சட்டத்தின் முன் நிறுத்துவதுமில்லை. இது ஆணை தண்டனையின்றியே தப்பித்துக்கொள்ளவும், மேலும் குற்றம் செய்யவும் தூண்டுகின்றது.

## போரும் பெண்களும்

போரின் போது பெண்கள் அதிகளவில் வன்முறைக்கு உள்ளாக நேர்கின்றது. போரின்போது பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெறக் காரணம், பாலியல் வல்லுறவை ஓர் ஆயுதமாக போரில் ஈடுபடும் தரப்பினர் கருதுவதுதான். பல போர்களின்போது தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்வதற்காக பாலியல் தொழிலில் பெண் தள்ளப்படுகின்றாள். போரினால் இடம்பெயர்ந் தவர்களில் பெண்களும் சிறுவர்களுமே அதிகளவு இருக்கின்றார்கள்.

அகதிகளில் 80 சதவீதத்தினர் பெண்களும் சிறுவர்களுமாக உள்ளனர். இவ்வுலகில் இடம்பெற்ற 34 போர்களில் பல மில்லியன் பெண்களும் சிறுவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். போர் இடம்பெறும் பகுதிகளில் பெண்கள் மற்றும் சிறுமிகள் கடத்திச் செல்லப்படுவது 85 சதவீதமாக இருக்கின்றது.

கொங்கோவின் உள்நாட்டுப் போரில் யுவிரா பிரதேசத்தில் 2002 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 40 பெண்கள் வீதம் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

உகண்டாவில் 1994 இல் இடம்பெற்ற பெரும் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் 25,0000 முதல் 500,000 வரையான பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். சியராலியோனில் இடம்பெயர்ந்த பெண்களில் 94 சத வீதத்தினர் பாலியல் பலாத்காரத்துக்கு உட்பட்டிருக்கின்றார்கள். ஈராக்கில் 2003 இல் இடம்பெற்ற யுத்தத்தின்போதும் அதன் பின்னரும் பெண்களும் சிறுமிகளுமாக குறைந்தது 400 பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சிறுமிகளில் 8 வயது நிரம்பிய சிறுமிகளும் அநேகம். கமரூஜ் ஆட்சிக் காலத்தில் கம்போடியாவில் 250,000 கம்போடிய பெண்கள் கட்டாயத் திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ளனர்.

## வன்முறைக்குச் சட்ட நிவாரணங்கள்

பெண்களுக்கெதிரான வன்முறைகளில் குற்றவாளிகள் தண்டனைகள் இன்றியே தப்பித்துவிடுகின்றார்கள். இவ் வன்முறைக்கெதிரான சட்டங்கள் எவையும் சில நாடுகளில் இல்லை. சில நாடுகளில் சில வன்முறைகளுக்கு எதிராக மட்டுமே சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. பெண்கள் மீதான எல்லாவிதமான வன்முறைகளை எதிர்த்தும் சட்டங்கள் இருந்தாலும் பல நாடுகளில் இவை ஒழுங்காக நடைமுறைப்படுத்தப் படுவதில்லை . 2003 இல் பெண்கள் மீதான வன்முறைகளை எதிர்த்து 54 நாடுகள் சட்டமியற்றின. 79 நாடுகள் வீட்டு வன்முறைகளை எதிர்த்து எந்தவிதமான சட்டங்களையும் கொண்டிருக்கவில்லை.

திருமண பந்தத்திலும் பெண்ணின் விருப்பின்றி உறவு கொள்வது தண்டனைக்குரிய குற்றம் என 51 நாடுகள் அங்கீகரித்தன. விசேடமாக பாலியல் பலாத்காரம் தொடர்பில், 16 நாடுகளே சட்டங்களைக் கொண்டிருக்கின்றன.

## எச். ஐ. வி. / எயிட்ஸ்

பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரிப்பது, பெரும் சுகாதாரப் பிரச்சினையாகவும் உருவெடுத்துள்ளது. வன்முறைகள் பெண்ணின் இனப்பெருக்க சுகாதாரத்தைப் பாதித்திப்பதோடு, உடல், உள நலனோம்புகையையும் பாதிக்கின்றது. பெண்கள் மீதான வன்முறைகளால் எச். ஐ. வி/ எயிட்ஸ் போன்ற நோய்த்தொற்றுக்குள்ளாகும் வாய்ப்பும் ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்களுக்கு அதிகமானதாக இருக்கின்றது. உலகில் எச். ஐ. வி/ எயிட்ஸ் தொற்றுக்குள்ளானோரில் 51 சதவீதமானவர்கள் பெண்கள். புதிய எச். ஐ. வி. தோற்றுக்கள், 15 முதல் 24 வயது வரையானோருக்கே ஏற்படுகின்றன. அவ்வயதுப் பருவத்தில் எச். ஐ. வி. தோற்றுக்குள்ளானோரில் 60 சத வீதமானவர்கள் பெண்கள். தினமும் தொற்றுக்குள்ளாகும் 16,000 பேரில் 55 சத வீதமான்வர்கள் பெண்கள். ஐரோப்பா, வட அமெரிக்கா, ஆசியா போன்ற பகுதிகளில் 20 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களிடையே ஏற்படும் மரணத்துக்கு எச். ஐ. வி/ எயிட்ஸே காரணமாகின்றது.

பெண்ணியப் போராட்டங்கள் ஆரம்பமாகி நூற்றாண்டுகள் கழிந்து விட்ட நிலையிலும் பெண்கள் இன்னமும் இரண்டாம் தரப் பிரஜைகளாகவே இருக்கின்றனர். ஆணுக்கு நிகராக பல்வேறு துறைகளில் பெண் தடம் பதித்திருந்தாலும், பெண் மீதான அடக்குமுறைகள் இன்று, குடும்ப, பாலியல் வன்முறைகளாக உருவெடுத்துள்ளன. குடும்பத்தில் நன்கறிந்தவர்களாலேயே பெண் அதிகளவில் அடக்கு முறைக்குள்ளாகும் நிலையில் அவற்றுக்கெதிராகக் குரலெழுப்ப வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவை யாகவுள்ளது. வெறுமனே, அழகுக் குறிப்புகளையும் சமை யல் குறிப்புகளையும் வாசித்துக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருப்பதற்கப்பால், நாம் பெண்களாக இருப்பதால் எம் அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், எம்மைச் சூழவுள்ள பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகளைப் பதிவு செய்வதன் மூலம் பெண்ணின் குரலை உரத்து ஒலிக்கச் செய்வதற்கான தருணம் இது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2013

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி முதல் காரைநகர் பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமையவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2013.02.08 ஆம் திகதிய NP/05/01/GE 6/UNS/RQ இலக்க கடிதத்திற்கமைவாகவும் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆள்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்:**

01. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்
02 .ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்
03. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்:**

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர்வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
03. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்
04. விண்ணப்பதாரி காரைநகர் பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.(வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)
05. தொழில்நுட்பம் சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை:**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

01. காரைநகர் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா நூறு செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்காதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
02. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு செயலாளர், காரைநகர் பிரதேசசபை, களபூமி, காரைநகர் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்
04. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும்.
05. ஆள்சேர்ப்பு திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னரோ நியமனத்தின் பின்னராகவோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக் கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்
06. விண்ணப்பமுடிவுதிகதி 2013.12.10 ஆம்திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அதற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

## பதவிகள் பற்றிய விவரங்கள்

| பதவி இல. | பதவிகள் | வெற்றிடம் |
|---|---|---|
| 01 | காரியாலய காரிய சகாயர் - III | 02 |
| 02 | நூலக பரிசாரகர் -III | 01 |
| 03 | வேலைத் தொழிலாளி -III | 03 |
| 04 | சுகாதாரத் தொழிலாளி -III | 02 |

**சம்பள அளவுத்திட்டம்:** PL- 1- 2006 - A ,(11,730-10×120-130×10-145×10-160×12-17,600)

**கல்வித் தகைமை:**

01. கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச்சித்தி உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் 05 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

| பதவி இல. | பதவிகள் | வெற்றிடம் |
|---|---|---|
| 05 | ஆயுள் வேத மருந்து கொடுப்பவர் - III | 01 |
| 06 | மின்னிணைப்பாளர் -III | 01 |

**சம்பள அளவுத்திட்டம்:** PL- 2- 2006 - A ,(12,210-10×130-145×10-160×10-170×12-18,600)

**கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

01. கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச்சித்தி உள்ளங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் 05 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
02. இப் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி விண்ணப்ப இறுதித்திகதியன்று ஆறு மாதத்துக்கு குறையாத வகையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் கல்வி நிறுவனத்திலிருந்து துறை சார்ந்த பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

| பதவி இல. | பதவி | வெற்றிடம் |
|---|---|---|
| 07 | சாரதி - III | 03 |

**சம்பள அளவுத்திட்டம்:** PL- 3- 2006 - A ,(12,470-10×130-10×145-10×160-12× 170 -18,860)

**கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

01. கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச்சித்தி உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் 05 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை/ தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்குக் குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை விண்ணப்ப இறுதித்திகதிக்கு மூன்று (03) வருடத்திற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
03. மோட்டார் வாகன சாரதியாக மூன்று (03) வருட அனுபவத்திற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5 அடி 21/2 அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
05. விண்ணப்பதாரி இரவு, பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியைக் கொண்டிருப்பதுடன், சிறந்த கண்பார்வையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
06. பெருந்தெரு விதிமுறை பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**காரைநகர் பிரதேச சபை,**
**களபூமி,காரைநகர்,**

(சி.13817) (45.3.6)

கணபதிப்பிள்ளை [illegible]
செயலாளர், பிரதேச சபை, காரைநகர்.

## இதுதான் காரைநகர் புது வீதி; திருவாதிரைக்கு முன் விடிவு வருமா?



காரைநகர், நவ.25

காரைநகர் புது வீதி பொதுமக்கள் பயணம் செய்ய முடியாதளவு சேதமடைந்துள்ளது. இதனைப் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்துக்குச் செல்லும் பிரதான வீதியான இந்த வீதி புனரமைக்கப்படாமை குறித்து மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். அடுத்த மாதம் ஈழத்துச் சிதம்பரத்தில் ஆரம்பமாக உள்ள திருவாதிரை உற்சவத்துக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகைதர உள்ளனர்.

திருவாதிரை உற்சவம் ஆரம்பமாவதற்கு முன்னராவது இந்த வீதியைச் செப்பனிட வேண்டும்- என்று அவர்கள் கோரியுள்ளனர். (ஒ-250)

## தேசிய சம்பளக் கொள்கை ஆணைக்குழு நியமனம்

யாழ்ப்பாணம், நவ.25

தேசிய சம்பள கொள்கை வகுப்புக்கான தேசிய சம்பள ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் 21பேர் இடம் பெற்றுள்ளனர். இவர்களின் பெயர்விவரம் விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட் டுள்ளது. குழுவில் ஒருவர் தமிழர், ஒருவர் முஸ்லிம், 19 பேர் சிங் களவர்கள்.

குழுவின் செயற்பாடு கள் மற்றும் கடமைப் பொறுப்புக்கள் தொடர்பான விவரம் வர்த்த மானியில் வெளியிடப் பட்டுள்ளது. இணைத் தலைவர்களாக டி.ஏச். நெவில் பியட்டிகம, ஜே.ஆர். விமலனே திலகரத்ன, செயலாள ராக பி.விஜயரத்ன நியமிக்கப்பட்டுள்ள னர்.

புதிய ஆணைக்குழு நியமிக்கப்பட்டதை அடுத்து இதுவரை காலமும் செயற்பட்டு வந்த தேசிய சம்பள பதவி ஆளணி ஆணைக் குழு வின் செயற்பாடு கள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவினர் அறிக்கை சமர்ப்பிப்ப தற்கு உரிய கால இடைவெளி வரையறை செய்து அறிவிக்கப்பட வில்லை. ஆணைக் குழுவினர் உப குழுக்களை உருவாக்கி தமது ஆய்வுகளை மேற்கொள்வதற்கு வகை செய்யப் பட்டுள்ளது. (ஒ-11)

## ஈழத்து சபரிமலை ஐயப்பனுக்கு கொடி

யாழ்ப்பாணம், நவ.25

ஈழத்து சபரிமலை கோண்டாவில் சபரீச ஐயப்ப ஆலயத்தின் பெருந்திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் திருவிழாகள் இடம்பெறும்.

திருவிழாக் காலத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

அத்துடன் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை ஐயப்பன் யானை மேல் ஊர்வலமாக வரும் காட்சி இடம்பெறும்.

தினமும் காலை 6 மணிக்கு நடை திறத்தல், காலை 7 மணிக்கு மூலவர் அபிஷேகம், கணபதிஹோமம், மதியம் 12 மணிக்கு பூசை, மாலை 5 மணிக்கு அபிஷேகம், மாலை 6 மணிக்கு பூசை, மாலை 6.30 மணிக்கு பஜனை, இரவு 8 மணிக்கு படிப்பூசை, இரவு 8.45 மணிக்கு ஹரிவராசனம் இரவு 9 மணிக்கு நடைசார்த்துதல் என்பன நடைபெறும்.

ஐயப்ப விரதத்தை அனுஷ்டிப்போர் விரதமாலை அணிந்து எதிர்வரும் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி வரை விரதத்தை கடைப்பிடிப்பர். (ந-14)

## பெரியபுளியங்குளம் அ.த.க. மாணவர்களுக்குப் பரிசு

துணுக்காய், நவ. 25

உலக சுற்றாடல் தினத்தையொட்டி பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட வட மாகாண துரித மீன் எழுச்சி திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட தேசிய மட்ட சித்திரப் போட்டியில் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள கிராமப் புறப் பாடசாலையான பெரியபுளியங்குளம் அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த 3 மாணவர்களுக்கு பணப் பரிசு கிடைத்துள்ளது.

இதில் பிரிவு Iஇல் க.கபிலன் 750 ரூபாவும், பிரிவு II எல்.றஜீவினி 1000 ரூபாவும், பிரிவுIII பா.லஜீதன் 1250 ரூபா பணப் பரிசையும் தேசிய மட்டத்தில் பெற்றனர்.

பாடசாலைக்கும் துணுக்காய் கல்வி வலயத்துக்கும் பெருமை சேர்த்த இந்த மாணவர்களுக்கு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் பாராட்டுத் தெரிவித்துள்ளார். (ஒ-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மீசாலை பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசில் வழங்கலும் நூலக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நகரசபை உறுப்பினர்களான ப.சிறிதரன், அ.பாலமயூரன், செல்வரத்தினம் ஆகியோ ரும் ஓய்வு நிலை நூலகர் திருமதி க.கணேசானந்தமும் கலந்து கொண்டனர். (வ-9)

# விஷக்கடிக்கு 95 பேர் சிகிச்சை

### சாவகச்சேரி மருத்துவமனையில்

தென்மராட்சி, நவ.25
சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் கடந்த ஜூலை தொடக்கம் செப்ரெம்பர் வரை யான மூன்றாம் கந்தாயப் பகுதியில் 25 பேர் ஏனைய பாம்புகளாலும் 95 பேர் விஷ ஜந்துக்களாலும், கடியுண்டு சிகிச்சை பெற்றுள்ளதாக மருத் துவமனை விளம்பரப் பல கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
மழை காலம் ஆரம்பித்துள் ளதால் நான்காம் கந்தாயம் பகுதியில்குறித்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என் றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.
இவ்வாறு பாதிக்கப்பட்டவர்க ளில் பெரும்பாலானோர் இரவு வேளையிலேயே விஷ ஜந் துக்களாலும், பாம்புகளாலும் கடியுண்டுள்ளனரெனக் குறிப் பிடப்பட்டுள்ளது. இவற்றில் நாவற்குழி பிரதேசத்தில் வெள் ளைப் பூரானால் கடியுண்ட தாகவும் வருகின்றது.
அவர்களில் பெரும்பாலானோர் இரவு வேளைகளில் உறங்கிக் கொண்டிருந்த போதும், இரவில் போதிய வெளிச்ச மின்றி நட மாடிய வேளையிலும் கடியுண் டுள்ளனர். அத்துடன் வயல் வெளி களிலும் வளவுகள் துப் புரவுப் பணிகளில் ஈடுபட்ட வேளையிலும் கடியுண்டதாக வும் குறிப்பிடப்பட்டுள்ளது.
மழை காலங்களில் வெள்ளம் காரணமாக விஷஜந்துகள் மற்றும் பாம்புகள் ஊருக்குள் நடமாடும் வாய்ப்பு உள்ள தால் மக்களை அவதான மாக இருக் குமாறு கோரப்பட் டுள்ளது. (வ)

# கால்கடுக்க காத்திருந்த மக்களுக்கு நிழல்குடை



யாழ்ப்பாணம், நவ.25
யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் வேண்டுகோளுக் கிணங்க சாவகச்சேரி சிற்றி லயன்ஸ் கழகம் கைதடியில் உள்ள முதலமைச்சர் அலுவ லகத்துக்கு முன்பாக ஏ-9 வீதியில் நிழற்குடை ஒன்றை (பயணிகள் தரிப்பிடம்). கடந்த வாரம் அமைத்துள்ளது.
குறித்த வீதியில் அண்மை யாக விழிப்புலனிழந்தோர், தொழிற்பூங்கா, நவீல்ட் பாட சாலை, முதியோர் இல்லம், இரட்சணிய சேனை மற்றும் வடக்கு மாகாண சபையின் வடமாகாண சபை அலுவல கம் அமைக்கப்பட்ட போதும் அங்கு மிக நீண்ட காலமாக பயணிகள் தரிப்பிடம் இல்லா தது ஒரு பெருங்குறையாகவே இருந்ததாகவும் மக்கள் மத்தி யில் கூறப்படுகின்றது.
இந்த நிலையில் அந்தப் பகுதி யில்பயணிகள்நிழற்குடையை அமைக்க எவரும் முன்வராத நிலையில் சாவ கச்சேரி சிற்றி லயன்ஸ் கழகம் வீதியின் இரு மங்கிலும் நிழற்குடையை அமைப்பதற்கு தீர்மானித்தது. அதனை அடுத்து உடனடியாக இந்த மாத ஆரம்பத்தில் ஏ-9 வீதி யின் கிழக்குப் பக்கமாக முதற் கட்டமாக ஓர் நிழற் குடையை அமைத்துள்ளதாக வும் மற் றொன்றை விரைவில் அமைக்க வுள்ளதாகவும் தெரி விக்கப் பட்டுள்ளது.
இவ்வாறு நிழற்குடை அமைக் கப்பட்டதன் காரணமாக நவீல்ட் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களும் தொழிற்பூங்காவில் வசிக் கும் விழிப்புலனிழந்தோரும் பெரும் பயன் அடைந்துள்ள னர். (வ-288)


# தென்மராட்சிக்கு 24 ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், நவ.25
வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் வெளி யிடப்பட்ட 2014 ஆம் ஆண் டுக்கான ஆசிரியர் இடமாற் றப்பட்டியலின் பிரகாரம் தென்மராட்சி கல்வி வலயத் துக்கு 24 ஆசிரியர்கள் இட மாற்றம் செய்யப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.
இடமாற்றப் பட்டியல் பிரகாரம் கிளிநொச்சி வலயத்திலிருந்து 7 பேரும் வவுனியா வடக்கு, மன்னார் ஆகிய வலயங்களி லிருந்து தலா 4 பேரும் வவுனியா தெற்கு வலயத்திலி ருந்து 3 பேரும் துணுக்காய் வலயத்திலிருந்து இருவரும் முல்லைத்தீவு, தீவகம், வலி காமம், வடமராட்சி ஆகிய வல



யங்களிலிருந்து தலா ஒருவர் வீதமும் தென்மராட்சி வல யத்துக்கு இடமாற்றம் செய் யப்பட்டுள்ளனர் என்று தெரி விக்கப்பட்டது.
2014 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் இட மாற்றம் வழங்கப்படவுள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டது. (வ)

# பாடசாலை மூடப்பட்டதற்கு பெற்றோர் கண்டனம்



வவுனியா, நவ.25
வவுனியாவில் இயங்கி வந்த பேயாடி கூளாங்குளம் பாட சாலை மூடப்பட்டமைக்கு அதி காரிகளின் அசமந்தப் போக்கே காரணமென பெற்றோர் கண் டனம் தெரிவித்துள்ளனர்.
1960 ஆம் ஆண்டு பேயாடி கூளாங்குளம் பாடசாலை அமைக்கப்பட்டது. தாண்டிக் குளம், நொச்சிமோட்டை, பறநாட்டகல் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் இந்தப் பாட சாலைகளில் கல்வி கற்று வந்தனர். இந்தப் பாடசாலை 1990 ஆம் ஆண்டு போர் காரணமாக மூடப்பட்டது. அங்கு இராணுவ முகாம் அமைக்கப்பட்டு இன்றுவரை இராணுவ முகாமாகவே பாட சாலை காட்சியளிக்கின்றது.
1996 ஆம் ஆண்டு வவுனியா பூந்தோட்டம் பகுதியில் போரி னால் இடம்பெயர்ந்த கிளி நொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள். அங்கு அமைக்கப்பட்ட தற் காலிக முகாமில் தங்கினர்.
இதனையடுத்து 2000 ஆம் ஆண்டு பூந்தோட்டம் பகுதி யில் பேயாடி கூளாங்குளம் பாடசாலை இயங்கத் தொடங் கியது.
போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து பூந்தோட்டம் முகாமில் தங்கியிருந்த சில குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்ந்தனர். இதனால் 20 க்கும் குறை வான மாணவர்கள் கல்வி கற்றதால் இந்தப் பாடசாலை மூடப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது.
ஆனால் இன்னமும் 100 குடும்பங்கள் இங்கு உள்ளன. பாடசாலை செல்லும் பல மாண வர்களும் உள்ளதாகத் தெரிய வருகின்றது. இந்த நிலையில் இந்தப் பாடசாலை மூடப் பட்டமைக்கு பலரும் எதிர்ப் புத் தெரிவித்துள்ளனர். (க-402)

# ஐந்து பயனாளிகளுக்கு தற்செயல் நிவாரணம்

### வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில்

அச்சுவேலி, நவ.25
வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் தற்செயல் நிவாரணக் கொடுப்பன வாக 10 ஆயிரம் ரூபா வீதம் 5 பயனாளிகளுக்கு அண்மையில் வழங்கப் பட்டது.
முதலாம் கட்டம், 2 ஆம் கட்டம் என்ற வகையில் பயனாளிகளுக்கு தற் செயல் நிவாரணக் கொடுப் பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.
முதலாம் கட்ட தற்செயல் நிவாரணக் கொடுப்பன வைப் பெறுவோர் பெயர் விவரம் வருமாறு:-
இராசரத்தினம் உமாபதி- அச்செழு குடியேற்றத் திட் டம், சின்னராசா செல் லம்மா- இருபாலை கிழக்கு, இரண்டாம் கட்ட தற்செயல் நிவாரணக் கொடுப் பனவை பெறுவோர்:
உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த தம்பிராசா அமுதா, கிட்டிணன் யோகதாஸ், இரவிச்சந்திரன் சசி (வ-11)



சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலைக்காக ரூபா 45 லட்சம் செலவில் கொள் வனவு செய்யப்பட்ட காணியின் உறுதி உரிமை மாற்றம் செய்து வழங்கும் நிகழ்வில் அண்மையில் காணியின் உரிமையாளர்கள் அதற்கான உறுதிப் பத்திரத்தில் கையெழுத்திடுகின்றனர். (ஒ-29)

# உயிலங்குளத்தில் மருத்துவமனை

### விரைவில் அமைக்க நடவடிக்கை என்கிறார் டெனீஸ்வரன்

உயிலங்குளத்தில் விரைவில் மருத்துவமனை ஒன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக் கைகளை சுகாதார அமைச் சருடன் இணைந்துமுன்னெடுப் பதாக வடமாகாண வர்த்தக வாணிப மற்றும் மீன்பிடி போக்குவரத்து, கிராமிய அபிவி ருத்தி அமைச்சர் பா.டெனீஸ் வரன் தெரிவித்தார்.
மன்னார் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த வட்டுப் பித் தான்மடு சமயபுரம், தேத்தா வாடிக்கமம் ஆகிய கிராமங் களைச்சேர்ந்த மக்களை அண் மையில் அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்தனர்.
இந்தச் சந்திப்பின் போது தங்க ளது கிராமத்துக்குப் பஸ் சேவை வழங்க வேண்டும் என்றும் இந்தியன் வீட்டுத் திட்டத்தின் மூலம் தமக்கு வீடுகள் கிடைக்க வில்லை என்ற குற்றச் சாட்டை யும் மக்கள் முன்வைத்தனர்.
அதனைத் தொடர்ந்து உரை யாற்றிய அமைச்சர் பா.டெனீஸ் வரன், வடக்கு மாகாண சபை தற்போதுதான் உதயமாகியுள் ளது. ஒவ்வொரு கிராமங்களி லும் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. பிரச்சினை களை நாம் கிரமமாகத் தீர்ப் போம். எனது அமைச்சின் கீழான வேலைத் திட்டங்களாயினும் ஏனைய அமைச்சின் கீழான வேலைத் திட்டமாயினும் அவற்றைப் பெற்றுத் தருவ தற்கு நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வேன். மேலும் உயிலங்குளத்தில் மருத்துவ மனை ஒன்றை அமைப்பதற் குரிய நடவடிக்கைகள் எடுப் பேன். தமிழ்பேசும் மக்கள் நான் முன்னரே கேட்டுக் கொண்ட தற்கு அமைவாக எதிர்வரும் 27 ஆம் திகதி அனைத்து போரில் உயிர்நீத்த அனைத்து உயிர் களுக்காகவும் வீட்டுக்கு ஒரு மரம் நட்டு அவர்களின் ஆத் மசாந்திக்கு வழி வகுக்க வேண் டும்- என்றார். (வ-5)

# பழுதடைந்த நிலையில் குழாய்க் கிணறுகள்

அக்கராயன், நவ.25
அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்பட்ட 20 குழாய்க்கிணறுகள்பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.
கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலங்களில் அமைக் கப்பட்ட குழாய்க் கிணறுகளில் பல பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.
போர்க் காலத்தின் போது அவசரமாக அமைக்கப்பட்ட குழாய்க்கிணறுகளே இவ் வாறு பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.
150 அடி ஆழத்தில் தோண் டப்பட்ட இத்தகைய கிணறுகள் சிலவற்றில் 100 அடி வரையும் மட்டுமே குழாய்கள் பொருத் தப்பட்டதால் மண் இடிந்து வீழ்ந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன.
அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் மட்டும் 20 குழாய்க் கிணறுகள் பழுதடைந்த நிலை யில் காணப்படுகின்றன.
குழாய்க் கிணறுகளை உரிய வகையில் அமைக்காததா லேயே இந்த நிலை ஏற்பட் டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் கடும் விசனம் தெரி வித்துள்ளனர். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒட்டுசுட்டான் ம.வி.க்கு பழைய மாணவர் உதவி

முல்லைத்தீவு, நவ.25

லண்டனில் வசிக்கும், ஒட்டு சுட்டான் மகாவித்தியாலயத் தின் பழைய மாணவர் ஒருவர் தாம்கல்விகற்றபாடசாலைக்கு பெருமளவு நிதியுத வியை வழங்கியுள்ளார்.

வளர்ந்து வரும் தொழிலதிபரான அல்லிராசா சுபாஸ்கரன் என்பவரே 10 மில்லியன் ரூபா நிதியுதவியை குறித்த பாடசாலைக்கு வழங் கியுள்ளார். அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பிரிட்டனின் சார்பில் வளர்ந்து வரும் தொழிலதிபர் என்ற வகையில் கலந்துகொண்ட இவர், தான் கல்வி கற்ற பாடசாலையை மறக்காது அங்கு சென்று இந்த நிதியுதவியை வழங்கினார். (க-500)

## விஞ்ஞான பட்டமாணி; மீள் விண்ணப்பம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானப் பட்டமாணி நிகழ்ச்சித் திட்டத்துக்கான மீள் விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

18 வயதைப் பூர்த்தி செய்த க.பொ.த. உயர் தரத்தில் உயிரியல் மற்றும் கணிதவியல் பிரிவுகளில் 3 சித்திகளைப் பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். தகுதியுடையவர் கள் எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள லாம். (ஒ-14)

## நடனத்தால் சபையோரை வியக்க வைத்த சிறுமி

*மாவை எம்.பி.பாராட்டிப் பரிசு*

ஆறு வயதுச் சிறுமியின் வரவேற்பு நடனத்தை லயித்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா 5 ஆயிரம் ரூபா பணத்தை அன்பளிப்பாக வழங்கினார்.

நேற்று முன்தினம் கொடிகாமத்தில் இடம்பெற்ற சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அங்கு நடைபெற்ற 6 வயது சிறுமியின் அபிநயங்களில் லயித்து சிறுமியைப் பாராட்டிய துடன் 5 ஆயிரம் ரூபாவினையும் சிறுமிக்கு வழங்கினார்.

வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் சிறுமியின் நடனத் தைப் பாராட்டி உரையாற்றினார். வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தி யாலயத்தில் தரம்-1 இல் கல்வி பயிலும் ஸ்ரீகருணாகரன் மிதுஸ்னா என்ற மாணவியே இவ்வாறு பாராட்டுப் பெற்றவர் ஆவார். (த-9-131)

## துயர் பகிர்வு



அமரர் **கதிரவேலு அன்னலட்சுமி**

கடந்த 17.11.2013 அமரத்துவமடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அன்பு மருமகன் எம் முன்னாள் பிரதி அதிபர் ந. நகுலநாதன் அவர்களுக்கும் குடும்ப உறவுகளுக்கும் எம் அனுதாபங்களை சமர்ப்பிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/நாவாந்துறை றோ.க.வித். யாழ்ப்பாணம்

(40470)(5.6.4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20★04★1959

உதிர்வு
06★12★2012



அமரர்
**நவரத்தினம் பகவதி**

(ஆசிரியை-யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம், மல்லாகம்)

திதி: 25.11.2013

"சிவகாந்தபதி"
நீலியம்பனை
மல்லாகம் (ச/14479) (6.4)

குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
12 * 03 * 1989

மறைவு
12 * 10 * 2013

அமரர்
**ஜெகநாதன் ஜெகரூபிபுவிகரன்**

தாங்க முடியவில்லை அம்மா
உன் மறைவை ஏங்கி அழுகின்றோம்!
எம் கண்ணீர் சொரிய சடுதியாய்
வந்தானோ காலன்!
உயிர் இருந்தும் நாம் ஊனமாகி
விட்டோம்.

இன்று (25.11.2013) திங்கட் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத் தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் இந்த அழைப் பைத் தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆனைவிழுந்தான்,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

(40021) (7.6.3)

## 25ஆவது ஆண்டு நினைவு தினம்

அன்னையின் அளிப்பு
28.12.1970

அரக்கனின் அழிப்பு
26.11.1988



அமரர் **ம. யூட் சக்கரி சந்திரகுமார்**

அன்புடனும், பாசத்துடனும்
மகிழ்வுடனும் வாழ்ந்த உம்மை
பாதகர்கள் பறித்ததனை
மறக்குமோ எம் நெஞ்சம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக
யாழ். மரியன்னை பேராலயத்தில்
நாளை (26.11.2013) செவ்வாய்க்கிழமை
காலை 6.00 மணிக்கு
திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

19/4, பீச் லேன்,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

அன்புடன் நினைவுகூரும்
அப்பா, அம்மா, சகோதரர்களான சுரேன்,
ராஜி, மச்சான்மார், பெறாமக்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

(40248) (7.6.3)

# மரண அறிவித்தல்

# கந்தையா சோதிலிங்கம்

## (முன்னாள் உத்தியோகஸ்த்தர் C.W.E)



யாழ்.ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சோதிலிங்கம் கடந்த 21.11.2013 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- கற்பகம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், சாந்தா (கிளி)வின் பாசமிகு கணவரும், இதயஜோதி, மோகன்ராஜ், ஜெகனஜோதி, தவஜோதி, ஷகிலஜோதி, தேவஜோதி தவராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான குணரெட்ணம், திருஞானசம்பந்தர் மற்றும் ரோகினி (ஓவியம்மா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ருக்குமணி, சுமதி (கருணா) காலஞ்சென்றவர்களான பூரணம், தியாகராஜா, மயில்வாகனம், தேசோவதி (வாணி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பரமேஸ்வரன், ஜோதினி, தியாகேஸ் வரன், ரமணன், காண்டீபன், கேதீஸ்வரன் (பிரபா), நிரூபாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிர்ஜன், நிவேதா, நிஷாயினி, அமுதினி, சிந்துஜா, தனுஷ், அர்ஜீன், திசாந், ஜெனுஷன், அபிரா, அபிஷா, அபிலாஷ், சௌமியா, ஷர்மிகா, விதுஷன், நிதுஷன், பரத், சாதனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவரர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2013) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி **சாந்தா சோதிலிங்கம்,**
**பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

2ஆம் ஒழுங்கை,
விதானையார் வீதி,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

(40439) (45.3-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்த வருடம் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை தயார்ப்படுத்தும் முகமாக, சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தொடர் இலவசக் கல்விக் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன. இதில் 5 ஆவது கருத்தரங்கு மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ந-5)

## இரு வேறு சம்பவங்கள் மூவர் வைத்தியசாலையில்

வீட்டுச் சுவர் தலையில் வீழ்ந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் சனிக்கிழமை இரவு பளை மாசாரில் இடம் பெற்றது. இரவு படுத்திருந்த வேளையிலேயே சுவர் சரிந்து வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த இராஜரத்தினம் இராமச்சந்திரா (வயது-60) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதேவேளை இரவு படுக்கையில் வைத்து பாம்பினால் கடியுண்ட இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சரசாலை வடக்கைச் சேர்ந்த சிவராசா யாழினி (வயது-23) கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த சிவராஜா சதீஸ்குமார் (வயது-26) ஆகிய இருவருமே பாம்புக் கடிக்கு இலக்கானவர்களாவர். இவர்களில் சதீஸ்குமார் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தயசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். (ந-9)

*கோப்பாய் கல்வி கோட்டத்தில்*

## ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்ய வேண்டும்

யாழ்ப்பாணம், நவ.25

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோப்பாய் கல்விக் கோட்டத்தில் அதிகமான பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் 100 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவது தொடர்பாக பல தடவைகள் வடமாகாண கல்வி அமைச்சுக்கு சுட்டிக்காட்டப்பட்ட போதும் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

பாடசாலைகளில் இவ்வாறானதொரு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால் மாணவர்கள் கோப்பாய்க் கோட்டம் தவிர்ந்த ஏனைய நகர்ப் புறப் பாடசாலைகளுக்குச் செல்வதில் ஆர்வம் காட்டியுள்ளனர். இதன் காரணமாக திறமையான

*ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டால் இவ்வாறானதொரு நிலையை கல்விச் சமூகம் எதிர்கொள்ள வேண்டியது இல்லை.*

மாணவர்களது கல்வி நிலைமை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டால் இவ்வாறானதொரு நிலையை கல்விச் சமூகம் எதிர்கொள்ள வேண்டியது இல்லை. உரிய காலத்தில் உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (ந-14)

## நெஞ்சக் கதவை கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

### வாய்ப்புக்கு வாய்ப்பில்லாமல் போகலாம்

யாழ்.பிராந்தியத்தில் வரி செலுத்துவோரது எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனை மேலும் அதிகரிக்க வர்த்தகத் துறையை மேம்படுத்துவது அவசியமாகிறது என உள்நாட்டு இறைவரித்திணைக்கள ஆணையாளர் தெரிவித்திருக்கிறார். குடாநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் தற்போது பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. இதற்கான தீர்வு உடனடியாகக் காண வேண்டியது அவசியம் என்று குடாநாட்டு வர்த்தகத்தின் யதார்த்தக் கள நிலைமையை மேலதிகாரி தொட்டுக் காட்டியிருக்கிறார் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய பிரதி ஆணையாளர் முன்னவரது கூற்றில் திணைக்களத்தினது இலக்குத் தெரிகிறது. பின்னவரது கூற்றில் அந்த இலக்கை எட்டுவதிலுள்ள கையறு நிலை உணரப்படுகிறது.

"திருடாத நாளெல்லாம் பிறவாநாளே" என்றொரு கூட்டம் குடாநாட்டு வர்த்தகத்தின் மேம்பாட்டுக்கு முட்டுக் கட்டை போடுகிறது. காவலரணுக்குக்கிட்டவோ, எட்டவோ, திட்டமிட்டு நடைபெறும் திருட்டுக்களால் வர்த்தகர்கள் "நாளை எவரதோ" என்று யோசித்து வருத்தக்காரராகிக் கொண்டிருக்கிறார்கள். உடைத்துக் களவாடிய நிறுவனத்தையே "வண்ஸ்மோர்" என்று மீண்டும் உடைக்கிறார்கள். பொலிஸாருக்கு மட்டுமல்ல, அவர்களது மோப்ப நாய்களுக்கும் சேர்த்துத் தண்ணி காட்டுகிறார்கள்.

போத்தல் குடி தண்ணீர் விற்பனை நிறுவனமொன்று பல இலட்சக் கணக்கில் பணத்தைப் பெற்று. இங்கு 15 இற்கு மேற்பட்டவர்களுக்கு தண்ணி காட்டியிருக்கிறது. ஈடோ, பாடோ வைத்து முகவரானால் போதும் என்ற நிலைப்பாடு நம்மவர்களிடம் மாறவேண்டும். நிதிவலுமிக்க ஒரு நிறுவனம் பெரும்பாலும் முகவராண்மைக்கு வங்கி உத்தரவாதம் கோருவதுதான் வழமை. பாதுகாப்பு வழிமுறைகள் பின்பற்றப்படாவிடில் இழப்புகள் தவிர்க்க முடியாதனவாவதுடன், போத்தலுக்கு மூடிக்கு என்று அவிசாவளையில் அவித்துவிடுவார்கள். தண்ணி காட்டுவோரின் அராஜகங்கள் முடக்கப்படாவிடில் வரிசெலுத்துவோரது எண்ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்புக்கு வாய்ப்பில்லாது போகலாம்.

## குடிதண்ணீர் திட்டத்தை விஸ்தரித்து வழங்குக

யாழ்ப்பாணம், நவ.25

பண்டத்தரிப்பில் முன்வைக்கப்படும் கிராமியமட்ட குடிதண்ணீர் திட்டத்தை பனிப்புலம் பிரதேசத்துக்கு விஸ்தரித்து வழங்குமாறு வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் க.சபாநாயகம் கேட்டுள்ளார்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் - கிராமிய மட்ட குடி தண்ணீர் திட்டத்தின் ஊடாக மாதகல் -சாந்தை பிரதேச மக்களுக்கு குழாய் மூலம் குடி தண்ணீர் வழங்கப்படவுள்ளது.

இதற்கான துரித நடவடிக்கை யினை திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் முன்னெடுத்துள்ளார்.

பண்டத்தரிப்பின் ஊடாக பெரிய நீர்த் தாங்கி அமைத்து சாந்தை பிரதேசத்துக்கு குடிதண்ணீர் வழங்கும் போது:

குடிதண்ணீர் இன்றி அல்லற்படும் பனிப்புலம் பிரதேச மக்களுக்கும் குடிதண்ணீர் வழங்கி உதவ முன்வர வேண்டும் என அவர் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

இதேவேளை, பண்டத்தரிப்பில் இனங் காணப்பட்ட கிணறு ஊடாக பல பிரதேசங்களுக்கும் குடிதண்ணீர் வழங்கும் நிலையேற்படலாம் எனத் தெரிய வருகிறது. (ந-50)

### இளைஞர் கழகத்தால் கருத்தரங்கு

ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச கணித பாடக் கருத்தமர்வு சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழகத்தினால் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ந-23)

## கரவெட்டி பிரதேச சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் இன்று

வடமராட்சி, நவ.25

கரவெட்டிப் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு கூட்டத்துக்கான அறிவித்தல் கடிதம் ஒழுங்காக அனுப்பி வைக்கப்படாமையினால் ஏகமனதாக ஒத்திவைக்கப்பட்ட சபைக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெறவுள்ளது.

சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றபோது. "உறுப்பினர்களுக்கு கூட்டம் தொடர்பாக சரியான முறையில் கடிதம் மூலம் அழைப்பு அனுப்பப்படுவதில்லை. தொலைபேசி மூலமாக வாய்மூலமே அறிவிக்கப்படுகின்றது. அது முறையான நடவடிக்கையல்ல ஒழுங்கானதுமல்ல. உறுப்பினர்கள் சபையால் கௌரவமாக நடத்தப்பட வேண்டும் எனவே கூட்டத்தை ஒத்திவைத்து சரியான திகதியை நிர்ணயித்து உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்தால்தான் நாங்கள் கூட்டத்துக்கு சமூகமளிப்போம்" எனக் கூறி ஆளும் தரப்பு உறுப்பினரான கே. பரஞ்சோதி பிரேரணையைக் கொண்டு வர அதே தரப்பு உறுப்பினர்கள் அதனை வரவேற்று ஆமோதித்தனர்.

அதனைத் தொடர்ந்து கூட்டம் நடைபெறாது ஒத்தி வைக்கப்பட்டதுடன் இது தொடர்பான உரிய ஒழுங்கு முறைகள் பேணப்படும் எனத் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து கடந்த புதன் கிழமை நடைபெறவிருந்த சபையின் மாதாந்தக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு சபை உறுப்பினர்களுக்கு உத்தியோக பூர்வமாகக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ந-8)

## விண்ணப்பிக்கலாம்

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ள கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பொறியியல்துறை, தொழில்துறை, வர்த் தகத் துறை, விசேடதுறை ஆகிய தொழில் துறைச் சான்றிதழ் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கற்கை நெறியை முழுநேரக் கற்கை நெறியாக பயிலும் மாணவர்களுக்கு ஒரு தொகைக் கொடுப்பனவும் தொலை தூர மாணவர்களுக்கு பருவகால பற்றுச் சீட்டும் வழங்கப்படும். ஆர்வமுடையவர்கள் எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக தொழில் வழிகாட்டல் மையம், தொழில்நுட்பவியல் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரடியாகத் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும். (ந-14)

**காணி விற்பனைக்கு**

நக்கா லேனில் 3 ஆவது ஒழுங்கை, குறெசெட் வளவில் 20/5ஆம் இலக்கத்தைத் கொண்ட ஒரு பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (40475) (45.8.3)

தொடர்பு: 077 710 8437

## பிள்ளைகளை உள்ளூர் பாடசாலைகளில் கற்பிக்க பெற்றோர் முன் வரவேண்டும்

அச்சுவேலி, நவ.25

பெற்றோர் தமது பிள்ளைகளை உள்ளூர் பாடசாலைகளில் கற்பிப்பதற்கு முன்வரவேண்டும். அதனூடாக பிள்ளைகளை தமது நேரடிக் கண்காணிப்பில் வைத்திருப்பதோடு உள்ளூர் பாடசாலைகளின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்த முடியும். இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அரியகுட்டி பரஞ்சோதி.

புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலய பரிசளிப்பு விழா அதிபர் கு.ரவீச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வியால் உயர்வு பெற்ற யாழ்.மாவட்டத்தின் நிலை அண்மைக் காலத்தில் பின் தள்ளப்பட்டிருப்பதை கண்டுகொள்ள முடிகின்றது. இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பெற்றோரும், ஆசிரியர்களும், சமூகமும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். உள்ளூர் பாடசாலைகளில் நம்பிக்கை வைத்து பிள்ளைகளை சேர்த்துக் கொள்ள வேண்டும். உள்ளூர் ஆசிரியர்களும் தாம் வாழும் சூழலில் விருப்பத்தோடு கற்பிப்பதற்கு முன்வர வேண்டும்.

1957 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை பல்வேறு இடையூறுகள், இன்னல்களைத் தாண்டி வளர்ந்து நிற்கின்றது. இந்தப் பாடசாலையின் பழைய மாணவனான நான் இன்று இந்த விழாவில் கலந்துகொள்வதன் மூலம் எனது பாடசாலைப் பருவத்தையும் இந்தப் பாடசாலை அன்றைய நிலையும் மீள நினைத்து ஒப்பிட்டுப் பார்க்க முடிகின்றது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்றதன் மூலம் மக்கள் மத்தியிலும் - நிர்வாக கட்டமைப்புக்களிலும் அழுத்தங்கள் குறைந்து சுதந்திர நிலை மேலோங்கி வருகின்றது. அதிகாரிகள், ஊழியர்கள் மத்தியில் நிலவிய அச்ச நிலை குறைந்து இன்று நிலையில் கடமைகளை மேற்கொள்வதை அவதானிக்க முடிகின்றது - என்றார். (ந-11)

கிளி/பரந்தன் இந்து ம.வி
தரம் 5 புலமைப்பரீசில் பரீட்சை-2013
மாணவர் கௌரவிப்பு



Congratulation

கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் 22.11.2013 வெள்ளிக்கிழமை வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற 3 மாணவர்களும்,100 புள்ளிகளைப் பெற்ற 14 மாணவர்களும்,70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 13 மாணவர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலைச் சமூகம், பாடசாலை அபிவிருத்திச்சபை

(37590)(6.3.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழைச்சேனை, புதுக்குடியிருப்பு பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ் வரன் கலந்துகொண்டார்.

# குழந்தைகளைத் தத்தெடுக்க 8 ஆயிரம் பேர் விருப்பம்

கொழும்பு.நவ.25

குழந்தைகளை தத்தெடுப்பதற்கு 8 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேல் மாகாணத்துக்கான பட்டியலில் மாத்திரம் 3,000 பேர் உள்ளனர் என்று திணைக்களத்தின் ஆணையாளர் யமுனா பெரேரா கூறினார்.

400 இற்கும் அதிகமான வெளிநாட்டவர்களும் குழந்தைகளை தத்தெடுப்பதற்கு பதிவு செய் துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

குழந்தைகளை தத்தெடுப்பதற்கு தகுதியானவர்களா என்பது தொடர்பில் மாகாண நன்னடத்தை திணைக்களத்தின் ஊடாக ஆராய்ந்ததன் பின்னர் பெற்றோரற்ற குழந்தைகளே அவர்களுக்கு தத்து கொடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

வெளிநாட்டவர்களுக்கு குழந்தைகளை தத்துக் கொடுத்த தன் பின்னர், அவர்கள் தொடர்பில் மேற்பார்வை செய்யப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## ஓட்டோவில் பொருத்திய மானிக்கு தரநிர்ணயம்

கொழும்பு.நவ.25

ஓட்டோக்களில் பொருத்தப்பட்டுள்ள மானிகளுக்கான தரநிர்ணயத்தை நிறுவுவதற்கு அளவீட்டு அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக் களம் நடவடிக்கை எடுத்துள் ளது.

ஓட்டோக்களில் உள்ள மானி கள் நேர்த்தியான முறையில் இயங்குகின் றனவா என்பதனை கண்டறிவதற்கான விசேட உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுஎன்றுதிணைக் களத்தின் பணிப்பாளர் கே. பிரேமசிறி கூறினார்.

ஓட்டோக்களில் மானி பொருத்தப்பட்ட போதிலும், அவற்றுள் அதிகமானவை உரிய தரத் தைக் கொண்டிருக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

இத்தகைய மானிகளை விற் பனை செய்கின்ற நிறுவனங்கள், அவற்றின் விற்பனைக்கு முன்னர் மானிகளின் தரம் குறித்த அங்கீகா ரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

மானி பொருத்தப்பட்ட ஓட்டோக்களுக்கு புதிய தரநிர்ணயத்தை விரைவில் அறிமுகப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச)

## கைதிகளுக்கு 'பிறைற்ரைஸ்'

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாள் மற்றும் பதவியேற்பு தினத்தை முன்னிட்டு கடந்த 20 ஆம் திகதி நாட்டிலுள்ள சிறைச்சாலைகள் அனைத்திலுமுள்ள 23,000 சிறைக் கைதிகளுக்கு அன்றையதினம் மதிய போசனமாக 'பிறைற்ரைஸ்' வழங்கப்பட்டது என்று சிறைச்சாலைகள் தலைமையகத்தின் உயரதி காரியொருவர் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரான சந்திரசிறி கஜதீரவின் உத் தரவுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ச-22)

## மரண அறிவித்தல்

### திருமதி பூமணி பொன்னம்பலம்



தில்லைகட்டி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் விதிவிடமாகவும் கொண்ட பூமணி பொன்னம்பலம் நேற்று (24.11.2013) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் சரவணமுத்து பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் மாலா (ஜேர்மனி), ரஞ்சன் (கனடா), ராசாத்தி (ஜேர்மனி), அனுரா (டிலெக்ஸ்), விஜி (பிரான்ஸ்), ராஜி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீ (ஜேர்மனி), சசி (கனடா), காந்தன் (ஜேர்மனி), வதனா, பாஸ்கரன் (பிரான்ஸ்), ரவீந்திரன் (அதிபர், சுன்னாகம், நாகேஸ்வரி வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் அஜிந்தன், யுவிந்தன், சஜிதன், மிதுஷா,துசாந், டிலக்ஷன்,டியக்ஷியா, பிரிந்திகன், பிரியந்தன், டிவேந்தன், மேகதீபன், மேகதீசன், பனோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மகேஸ்வரியின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2013) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தில்லைகட்டி, சுன்னாகம்.* (40483)(14)

தகவல்: அனுரா (டிலெக்ஸ்)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்திப்பிள்ளை கதிரவேலு



உசன் மிருசவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்திப்பிள்ளை கதிரவேலு நேற்று (24.11.2013) ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும் ஸ்ரீஸ்கந்தராசா, சாந்தநாயகி ஆகியோரின் அன்புத் தாயும் கருணை மலர் கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியும் மோ கனஸ்ரீ, கயிலாஷ், யாழினி, பகீரதி, சதீஸ்குமார், கபிலன், கன்னிகா, கௌசிகன், பிரியா, மகிந்தன், கமலினி, கஸ்தூரி, காஞ்ஜீவன், மாதுரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிபிஷன், சங்கீதனன், லக்ஷிகன், அஸ்மிக்கா, பவிஷ்கன், அனிஷ்கா, கதுரிகா ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.'

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2013) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உசன் ஈச்சங்காடு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர் (077 7555558)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு ad@uthayan.com 0215671111

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



பிறப்பு 20.09.1943

இறப்பு 26.10.2013

திருமதி

### இராசமணி மகாலிங்கம்


அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசமணி மகாலிங்கம் அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசி மூலமும் எம்முடனும் எமது வெளிநாட்டு உறவுகளின் துயரத்திலும் பங்குகொண்டு ஆறுதல் தந்த உள்நாட்டு வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துகொள்வதுடன் இன்று (25.11.2013) திங்கட்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திம பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மீனாட்சி அம்மன் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"

## விண்ணக வாழ்வின் 45 ஆம் நாள் நினைவு



அன்னை மடியில் 08.11.1952

இறைவன் அடியில் 12.10.2013

### யோசேப்பு ஜோசேப் பற்பநாதர்

(இளைப்பாறிய லங்கா சிமெந்து கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)

*உயிரோடு உறவு தந்து பிரியாத*
*பாசம் தந்து பரமனடி சேர்ந்தீரே*
*பிரியா உறவால் எம்முடன் இணைந்திருந்த*
*நினைவுகளை ஏனின்று மறந்தீரோ*
*நீர் உயிர் நீத்த 45 ஆம் நாள்*
*இன்று நிலை குலைந்து உறவு எண்ணி*
*சொந்தங்கள் தவிக்குதிங்கே - உலகதில்*
*நாமுள்ளவரை இறைவனடியில்*
*உம் ஆன்மா சாந்திபெற*
*விழி நீர் சொரிகின்றோம்.*

மனைவி.

*8, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை.*

(40484)(14)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 1982.04.19

இறைவனடி 2010.11.29

### தம்பிப்பிள்ளை சுதாகரன் (அரசன்)



அன்று எம் அருகில் நீ நின்றபொழுது
கண்ணீர் கூட சுகமானது
துடைக்க நீ இருந்தாய்
இன்று சிரிப்பு கூட வேதனையாகின்றது
ஆயிரம் துன்பங்களை எல்லாம்
வெற்றி கண்டீர்
நாம் உங்கள் மீது அன்பு வைத்தது போல்
இறைவனும் அன்பு வைத்து விட்டான் போல்
அதனால் தான் எங்களிடம் இருந்து உம்மை பிரித்து
தாய் மண் திரும்பாமலே
தொலை தூரம் கொண்டு சென்ற தேனோ....

என்றும் உன் நினைவுடன்
சகோதரர்கள்

நிரந்தர முகவரி : பலாலி கிழக்கு, வசாவிளான்
தற்காலிகமுகவரி : மீசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வருடத்தில் இருந்து

# தனியார் மின் நிலைய பங்களிப்பு வேண்டாம்

## இலங்கை மின்சார சபை முடிவு

கொழும்பு, நவ.25

அடுத்த ஆண்டிலிருந்து தேசிய மின் உற்பத்திக்கு தனியார் மின் உற்பத்தி நிலையங்களின் பங்களிப்பை பெறும் சந்தர்ப்பங்களைக் குறைத்துக் கொள்வதற்கு மின்சாரசபை தீர்மானித்துள்ளது.

தற்போது, மின்சாரசபை மின்சாரத்தைக் கொள்வனவு செய்து வரும் 11 தனியார் மின் உற்பத்தி நிலையங்களிடையேயுள்ள மூன்று மின் உற் பத்தி நிலையங்களுடனான ஒப்பந் தங்களில் இருந்தும் விலகியுள்ளது.

குறிப்பிட்ட அந்த மூன்று மின் உற்பத்தி நிலையங்களுடன் மின்சார சபை மேற்கொண்டு வந்திருந்த ஒப்பந்த காலம் முடிவுற்றுள்ளதோடு, மீளவும் அந்த மின் உற்பத்தி நிலையங்களுடன் மின்சாரத்தைக் கொள் வனவு செய்வதற்கான ஒப்பந் தங்களில் கைச்சாத்திடுவதில்லை என்று தீர்மானித்துள்ளது.

எஞ்சியுள்ள தனியார் மின் உற்பத்தி நிலையங்களுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்களில் இருந்தும் எதிர்காலத்தில் மின்சார சபை விலகிக் கொள்வது குறித்து ஆராய்ந்து வருகிறது என்று மின்சார சபையின் தலைவர் டபிள்யூ.பீ.கணேகல தெரிவித்தார். (ச-22)

# மத்தல, கட்டுநாயக்காவில் புதிதாக இரு ஹோட்டல்கள்

## நிர்மாணிக்கிறது 'சைனா ஹாபர்' நிறுவனம்

அம்பாந்தோட்டை மற்றும் கட்டுநாயக்காவில் 500 மில்லியன் டொலர்களுக்கும் மேற்பட்ட முதலீடொன்றின் மூலம் 'கோல்ப்' விளையாட்டுத் திடல், இரண்டு ஹோட்டல்கள் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கு 'சைனா ஹாபர்' பொறியியல் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் மத்தல பிரதேசத்தில் நிர்மாணிக் கப்படும் 250 அறைகளைக் கொண்ட ஹோட்டலில் 'கொல்ப்' விளையாட்டுத்திடல் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இங்கு தீர்வை வரிகள் அற்ற விற்பனை நிலையமொன்றையும் நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கட்டுநாயக்காவில் நிர்மா ணிக்கப்படும் 200 அறைகள் கொண்ட ஹோட்டல் தொகுதியில் 1000 வரையிலான வாகனங்களை நிறுத்தி வைக்கக் கூடிய வாகனத் தரிப்பிடமும் தீர்வை வரிகள் அற்ற விற்பனை நிலையத்தையும் நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (ச-22)

54 பென்ஸ் கார்களையும்

# விநியோகித்த நிறுவனத்துக்கு மீளவும் ஒப்படைப்பு

கொழும்பு, நவ.25

பொதுநலவாய மாநாட்டின் அரச தலைவர்களுக்காக இறக்குமதி செய்யப்பட்டிருந்த 54 பென்ஸ் கார்களை அவற்றை விநியோகித்த நிறுவனத்துக்கு மீளவும் வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத் தரவிட்டுள்ளார் என்று ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க கூறினார்.

இலங்கை வங்கியின் கடன் முறி ஆவணங்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட இந்தக் கார்களை விற்பனை செய்து கடன் முறிகளின் பெறு மதியைச் செலுத்துமாறு நிறுவனத்துக்கு உத்தரவிடப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொண்ட அரச தலைவர்களின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் போக்குவரத் துக்களுக்காக இறக்குமதி செய்யப்பட்டிருந்த "டிபெண்டர்" வகையைச் சேர்ந்த 60 ஜீப் வாகனங்க ளும் முப்படைகளின் தேவை களுக்கு வழங்கப்படவுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

மோட்டார் கார்களும், வான்களும் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை முன்னிட்டு இறக்குமதி செய்யப் பட்டிருந்தன.

அந்த வாகனங்கள் குறித்தும் ஓரிரு நாள்களில் ஜனாதிபதியால் தீர்மானமொன்று மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் கூறினார். (ச-22)



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மாவீரருக்கு

முக்கியமானதாக விளங்குகின்றது.

எனவே, தமிழர்கள் தமது உரிமைக்காகப் போராடி மரணித்த உறவுகளுக்கு அமைதியான முறையில் ஈமக்கடன் நிறைவேற்றி - அஞ்சலி செலுத்த இறுதிவரை கூட்டமைப்பு பாடுபடும். மக்கள் வீடுகளில் கூட மரணித்த தமது உறவுகளுக்கு விளக்கேற்றி அஞ் சலி செலுத்துவார்கள். இது அன்று தொட்டு நிலவிவரும் வழக்கமாகும்.

இந்த நிலையில், மாவீரர் நாளான நவம்பர் 27 ஆம் திகதியை பயங்கர வாதிகளை நினைவுகூரும் நாள் என்றும், அந்த நாளில் அவர்களை எவரும் நினைவுகூர முடியாது என்றும் இராணுவமும், பொலிஸாரும் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் இவ்வாறான தடை உத்தரவுகள் தமிழ் மக்களின் மனக்காயங்களையும், துன்ப துயரங்களையும் மேலும் ஆழப்படுத்தும் என்பதை அரசுக்கு சொல்லி வைக்க விரும்புகின் றோம்.

மாவீரர்களுக்கு பயங்கரவாத முத்திரையா?- செல்வம் அடைக்கலநாதன்

தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடி வீரச் சாவினைத் தழுவிய மாவீரர்களை தமிழர்கள் நினைவு கூருவதை எவராலும் தடுக்க முடியாது. அவ்வாறு தடுத்தால் அது பெரும் மனித உரிமை மீறலாகும். இலங்கையில் 'மாவீரர்' என்ற பதம் அரசுக்கும், சிங்களப் பேரினவாதத்திற்கும் அச்சத்தைத் தரும் ஒரு சொல்லாக உள்ளது.

தாயக மண்ணையும் தமிழ் மக்களையும் நேசித்துப் போராடி உயிர்நீத்த அந்த உத்தம தியாகிகளுக்கு தீவிர வாதிகள் - பயங்கரவாதி கள் என்று முத்திரை குத்துவதை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம்.

இறந்தவர்கள் விடயத்திலும் அடக்கு முறையை இலங்கை அரசு பிரயோகித்து வருகின்றது. எனினும், தமிழர்கள் மரணித்த தமது உறவுகளுக்கு வருடாவருடம் ஏதோ ஒரு வழியில் விளக்கேற்றி - அஞ்சலி செலுத்தி வருகின்றனர். எத்தடை வரினும் மரணித்த தமது உறவுகளுக்கு தமிழர்கள் விளக்கேற்றி அஞ்சலி செலுத்துவார்கள்.

நாடாளுமன்றத்திலும் மாவீரர்களுக்கு அஞ்சலித்ததை மறந்து விட்டார்களா? - பா.அரியநேத்திரன்

மாவீரர்கள் இலங்கையில் தான் பிறந்தவர்கள். அவர்கள் வெளியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்கள் அல்லர். அவர்களும் எம்மைப் போல தமிழ்த் தாயின் வயிற்றில் தான் பிறந்தார்கள். தமிழருக்கான உரிமை சிங்கள அரசால் மறுக்கப்பட்டதனால் தான் அவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடி மரணித்தார்கள். மாவீரர்களின் இந்தத் தியாகத்தினால்தான் அவர்களை நாம் விளக் கேற்றி அஞ்சலி செலுத்துகின்றோம்.

கடந்த 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக நாடாளுமன்ற வளாகத்தில் மாவீரர்களுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதை ஆட்சியில் உள்ளவர்கள் மறக்க மாட்டார்கள். அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த அஞ்சலி நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டதையடுத்து இவ்வாறன அஞ்சலி நிகழ்வுக்கு அரசு தடைவிதிப் பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. ஏனெனில், மாவீரர்கள் உயிருடன் உள்ளவர்கள் அல்லர். அவர்கள் இறந்தவர்கள். இறந்தவர்களை நினைவு கூருவதற்கு மக்களுக்கு உரிமை உண்டு.

தமிழர்கள், இறந்தவர்களை நினைவு கூருவதற்குக்கூட தடை விதித்தால் நாட்டில் இன ஒற்றுமை, நல்லிணக்கம் ஏற்பட வாய்ப்பே இருக்காது என்பதை அரசும், அதன் படைகளும் உணர்ந்து கொள்ள வேண்டும். இதையும் மீறி தடை விதித்தாலும் தமிழர்கள் தமது மனங்களில் - தமது வீடுகளில் மாவீரர் செல்வங்களை நினைவுகூரவே செய்வார்கள்" என்றார். (ங-சி)

### மாவீரர் நாளை

வர்களும் ஒற்றுமையாக வும், அமைதியாகவும் வாழ்ந்து வரு கிறார்கள். இந்நிலையில், நாம் மீண்டும் மீண்டும் ஏன் பழைய அழிவுகளை பற்றி மீட்டுப்பார்க்க வேண்டும். இவற்றையெல்லாம் மறந்து முன்னேறிச் செல்வதே எமது நோக்கமாக இருக்க வேண்டும்.

நாட்டில் நடைபெற்ற போர் இரு தரப்பினரையும் பாதித்தது என்பதே உண்மை. சிங்களவர்களுக்கு வெற்றி, தமிழர்களுக்குத் தோல்வி என்றோ அல்லது இராணு வத்தினருக்கு வெற்றி, தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தோல்வி என்றோ நினைக்கக் கூடாது.

போரில் வெற்றியடைந்ததைத் தலைநகரில் கொண்டாடும் போது ஏன் தமிழர்கள் உயிரிழந்த தங்களின் உறவுகளை நினைவுகூரக் கூடாது? தமிழர்களும் இந்நாட்டின் பிரஜைகளே. மரணித்தவர்களும் எம் நாட்டு மக்களே. அதுமட்டுமல்ல, இதை ஏன் சிங் களவர்கள் அனுஷ்டிக்கக்கூடாது? அவர்களுக்கும் தமிழர்களை நினைவு கூர முழு உரிமையுண்டு. இந்த உரிமைகளில் இனவாதத்தை திணிக்கக் கூடாது. எம்மைப் பொறுத்த வரை தமிழர்களுக்கு மட்டுமன்றி, சிங்களவர்களுக்கும் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு முழு உரிமையுண்டு" என்றார். (ங-சி)

### இராணுவத்தின்

தெரிவிக்கின்றனர்.

மேலும் முல்லைத்தீவு நகருக்கு பிரவேசிக்கும் வாகனங்கள், குறிப்பாக பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியூடாக பிரவேசிக்கும் வாகனங்களை தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அண்மையாக வைத்து பதிவுகளை மேற்கொண்ட பின்னரே தொடர்ந்து பயணிக்கப் படையினர் அனுமதிக்கின்றனர். இதேவேளை விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அண்மையாக உள்ள பகுதிகளிலும் வீதித் தடைகளை புதிதாக அமைத்துள்ள படையினர் அப்பகுதியால் செல்வோரை பதிவு செய்து வருகின்றனர். அத்துடன் இரவு நேரங்களில் மோட்டார் சைக்கிள்களில் ரோந்துப் பணிகளை படையினர் அதிகரித்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் முல்லைத்தீவில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களை சீருடையினர் தொடர்ச்சியாக கண்காணித்து வருகின்றனர் என்றும் அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வுகள், பொதுக் கூட்டங்கள் தொடர்பிலும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என்றும் தெரியவருகின்றது. (ங-5 - 422)

### சர்வதேச

வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. இராணுவச் சிப்பாய்களைப் படம் பிடிப்பதனை அவர்களது தளபதிகள் விரும்பவில்லை. ஆனால் போர் நினைவகங்கள் உட்பட பொது இடங்களைக் காணொலி பதிவு செய்வதற்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. எனினும் ஏ.எவ்.பி. ஊடகவியலாளர்களை சில இடங்களில் படையினர் செய்தி சேகரிக்க விடாமல் தடை போட்டுள்ளனர். இது பாதுகாப்புக் காரணங்களுக்காக இருந்த போதும் குறித்த படையினர் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவுள்ளோம்- என்றார்.

இதேவேளை, பாதுகாப்பு வலயப் பகுதிகளைப் படம் பிடித்த ஏ.எவ்.பி ஊடகவியலாளர்களையே இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளனர். கட்டளைத் தளபதிகளிடமிருந்து கிடைத்த உத்தரவுக்கமையவே படம் பிடிக்க முடியும் என்று களத்தில் நின்ற இராணுவத்தினர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

"நாங்கள் இங்கு எல்லாவற்றை படமாக்க முடியும். ஆனால் ஒளிப்பதிவு செய்வதற்கு எந்த ஊடகவியலாளருக்கும் அனுமதி வழங்க க் கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது" என்று முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளின் படகுகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இடத்தில் பணியாற்றும் இராணுவ அதிகாரி ஒருவர் அவர்களுக்கு தெரிவித்ததாக ஏ.எவ்.பி. தெரிவித்திருக்கிறது.

பொதுநலவாய அமைப்பின் உச்ச மாநாட்டில் இலங்கை அரசு மேற்கொண்டு வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பல்வேறு நாடுகளின் தலைவர்களும் குற்றச்சாட்டுக்கள் முன் வைத்து வரும் நிலையில் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுநலவாய மாநாடு மட்டுமன்றி பிற செய்திகளையும் சேகரிக்க முடியும் என்று மாநாட்டை ஒழுங்கு படுத்தியவர்கள் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள னர். தேவையான விபரங்களையும் எ.எவ்.பி பெற்றிருந்தது. இருப்பினும் தமது செய்தியாளர்கள் இவ்வாறு தடுக்கப்பட்டமை தொடர்பில் அந்த நிறுவனம் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்புக் கருதி தனது ஊடகவியலாளர்கள் இலங்கையை விட்டு வெளியேறும் வரை இந்தத் தடை பற்றிய செய்தியை ஏ.எவ்.பி. இது வரை வெளியிட்டிருக்க வில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங-4)

### யாழில்

மில்லி மீற்றரும், இந்த ஆண்டு முழுவதும் 926.8 மில்லி மீற்றரும் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. ஆனால் 2012 ஆம் ஆண்டு ஆண்டு முழுவதும் 943.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியே பதிவாகியுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சம அளவிலேயே மழை வீழ்ச்சி பதிவாகியுள்ள போதும் இந்த வருடம் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் மிகக் குறைந்தளவு மழை வீழ்ச்சியே கிடைத்துள்ளது.

இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 81.7 மில்லி மீற்றரும், நவம்பர் மாதம் 142.6 மில்லி மீற்றரும் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 395.3 மில்லி மீற்றரும், நவம்பர் மாதம் 80.6 மில்லிமீற்றரும் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது - என்றார். (ங-5)

### இலங்கை

இது தொடர்பில் கொழும்பிலுள்ள இலங்கைக்கான சீனத் தூதரகம், ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள பதிலில் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை தொடர்பான சீனாவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. கடந்த சில வருடங்களாக இலங்கை மனித உரிமை விவகாரங்களில் பெரும் ஊக்குவிப்பை வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் தேசிய நல்லிணக்கத்தையும் மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர்.

சர்வதேச சமூகம் இந்த விடயங்களில் தலையீடு செய்து நிலைமையைக் குழப்பகரமானதாக்கக் கூடாது. மாறாக இலங்கையில் நிலைத்திருக்கக் கூடிய பொருளாதார அபிவிருத்திக்கு, பொருத்தமான புறச் சூழலையே சர்வதேசம் உருவாக்கிக் கொடுக்க வேண்டும் - என்று தெரிவித்துள்ளது. (ங-5)

### இணைத்தலை

என்று, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவிடம் கலந்துரையாடல் ஒன்றில் கோரியிருந்தோம். அவர் ஜனாதிபதியிடம் பேசி தீர்வு காண்பதாக உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்னையும் ஒரு இணைத்தலைவராக நியமித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முதலமைச்சரின் தலைமையில் நடைபெற வேண்டிய ஒன்று. இந்த நிலையில், மஹிந்த சிந்தனை என்ற அரசியல் நோக்கங்களுக்காக இந்த இணைத் தலைமையை ஏற்றுச் செயற்பட முடியாது- என்றார். (ங-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியத்தில் பதக்கம் வென்ற விளையாட்டு உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம், நவ.25

விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டி நாவலப் பிட்டி ஜெயதிலக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிநாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தடகளப் போட்டிகளில் வடமாகாண விளையாட்டு உத்தி யோகத் தர் அணி 2 தங்கப் பதக்கங்கள் உள்ளிட்ட 9 பதக்கங்களை வென்றுள்ளது. இதில் 30 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான குண்டு எறிதல், தட்டு எறிதல் போட்டி யில் ஆர். அகலியா முதலாமி டத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தினை பெற்றுள்ளார்.

பதக்கம் வென்றவர்களின் விவரம் வருமாறு:-



**எஸ். அகல்யா**
2 தங்கம்
(குண்டெறிதல், தட்டெறிதல்)



**அனுராகாந்தன்**
வெண்கலம், வெள்ளி
(800, 200 மீற்றர் ஓட்டம்)




**எஸ்.மனோன்மணி**
வெண்கலம்
(100 மீற்றர் ஓட்டம்)



**யசிதரன்**
வெண்கலம்
(தட்டெறிதல்)



**சதானந்தன்**
வெண்கலம்
(உயரம் பாய்தல்)



**பிலிற்றஸ்**
வெள்ளி, வெண்கலம்
(நீளம் பாய்தல், 200 மீற்றர்)

# மணிவண்ணன் - ஜெயசித்திரா ஞாபகார்த்த பூப்பந்தில் வெற்றியீட்டியோருக்கு விருது





யாழ்ப்பாணம், நவ.25

மணிவண்ணன் - ஜெய சித்திரா சகோதரர்களின் 19 ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக யாழ். மாவட்ட பூப்பந்தாட்ட சங்கம் நடத்திய ஆண், பெண் இரு பாலாருக் கான பூப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் வெற்றி யீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன் தினம் சனிக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரியில் யாழ் மாவட்ட பூப்பந்தாட்ட சங்கத் தின் தலைவர் ஞானப் பொன் ராஜா தலைமையில் இடம் பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட், அவரது பாரியார் நளாயினி ஆனல்ட் ஆகியோர் பிரதம விருந்தினராக கலந்து கொண் டனர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற வர்களுக்கான பரிசில்களை நளாயினி ஆனல்ட் வழங்கி கௌரவித்தார்.

பூப்பந்தாட்டப் போட்டிகளில் வெற் றியீட்டி விருது பெற்றவர்களின் விவரம்:-

**35 வயதிற்கு மேற்பட்ட ஆண் களுக்கான ஒற்றையர் ஆட்டம்**
முதலாமிடம் - எஸ். காண்டீபன்
இரண்டாமிடம் - பி. சுபாஸ்கரன்

**35 வயதுக்கு மேற்பட்ட பெண் களுக்கான ஒற்றையர் ஆட்டம்**
முதலாமிடம் - மேரி.நிர்மல கரிகரன்
இரண்டாமிடம் - சிறி மைதிலி சின்னாப்பு

**45 வயதுக்கு மேற்பட்ட ஆண்க ளுக்கான இரட்டையர் ஆட்டம்**
முதலாமிடம் - வி.டி. சசிக ஹேரா, எ.எம்ஸ் பிறேமவன்ஸ
இரண்டாமிடம் - ஜே.எ.ஜே. ஜெயரட்ண, யூ.டி.ஹேரத்

**திறந்த கலப்பு இரட்டையர் ஆட்டம்**
முதலாமிடம் - ரி.துஷ்யந்தன், நிவேசிவா. இரண்டாமிடம் - எல்.ஆர். றொமிசன், சி.பென்சிலா

**திறந்த பெண்களுக்கான இரட்டையர் ஆட்டம்**
முத லாமிடம் -நிவேசிவா, சி.பென்சிலா.
இரண்டாமிடம் - எச். நட்டஷா, கே.கேசாயினி

**திறந்த ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டம்**
முதலாமிடம் - எல்.ஆர் றொமி சன், துஷந்தன். இரண்டா மிடம் - காண்டீபன், ரம்மிய ராகுலன்.

**பெண்களுக்கான திறந்த ஒற் றையர் ஆட்டம்**
முதலாமிடம்- எச்.நட்டஷா
இரண்டாமிடம் - ஜே.நிவேசிவா

**ஆண்களுக்கான திறந்த ஒற்றை ஆட்டம்**
முதலாமிடம் - எல். ஆர்.றொமி சன். இரண்டாமிடம் - துஷந் தன். (ஙு-23)

# யங்ஸ்ரார் கிரிக்கெட் மின்னொளியில் இன்று

யாழ்ப்பாணம், நவ.25

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின் னொளியில் நடத்தப்படும் 6 பேர் பங்கு பற்றும் 5 பந்துப்பரிமாற் றங்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு வவுனியா வைரவ புளியங் குளம் யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாக வுள்ளது. போட்டிகள் யாவும் இரவு 7 மணி ஆரம்பமாகி நள் ளிரவு வரை நடைபெறவுள்ளன என்று போட்டி ஏற்பாட்டாளர் கள் தெரிவித்துள்ளனர். (ஙு-23)

# யாழ். உதைபந்து லீக் சுற்றுப்போட்டி ஆரம்பம்

யாழ்.உதைபந்தாட்ட லீக தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் கிண்ணத்துக்கான விலகல் முறை யிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் இன்று திங்கட்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று பி.ப.2.30 மணிக்கு இடம்பெறவுள்ள முதலாவது ஆட்டத் தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பி.ப 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் பாஷை யூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ஙு-23)

# அசத்தியது ஆஸி. இங்கிலாந்து சரண்

பிறிஸ்பேர்ன், நவ.25

இங்கிலாந்து அணிக்கும், ஆஸ் திரேலிய அணிக்குமிடையி லான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆஷஷ் தொடரின் முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 381 ஓட்டங்கள் வித்தி யாசத்தில் அபார வெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளது. ஆஸ் திரேலிய அணியின் மிச்செல் ஜோன்சன் பந்து வீச்சில் கலக்க இங்கிலாந்து அணி படுதோல்வியடைந்தது.

ஆஸ்திரேலியாவில் இடம் பெற்று வரும் ஆஷஷ் தொட ரின் முதலாவது ஆட்டம் கடந்த 21 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற் சியில் வெற்றி பெற்ற ஆஸ்தி ரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய் தார். இங்கிலாந்து அணியின் பந்து வீச்சு ஆக்கிரமிப்பில் ஆஸ்திரேலிய அணி ஆரம் பத்தில் ஆட்டம் கண்டது. இருப் பினும் பின்வரிசையில் பிரட் ஹடின், மிச்செல் ஜோன்சன் இருவரது இணைப்பாட்டத்தி னால் சகல இலக்குகளையும் இழந்து 295 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஹடின் 94, ஜோன்சன் 64, வோனர் 49 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தனர். பந்து வீச் சில் இங்கிலாந்து அணி சார் பில் புரோட் 6 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இங்கிலாந்து அணி, ஆஸி.யின் மூர்க்கத் தனமான பந்து வீச்சில் மூக் குடைபட்டது. இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெறுவதற்கே திணறியிருந்தனர். இறுதியில் சகல இலக்குகளையும் இழந்து 136 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. துடுப்பாட் டத்தில் மிச்செல் கார்பெரி 40, புரோட் 32 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஜோன்சன் 4, ஹரிஸ் 3 இலக் குகளைக் கைப்பற்றி னர்.

159 ஓட்டங்கள் முன்னிலை யுடன் இரண்டாவது இன் னிங்ஸை தொடர்ந்த ஆஸ்தி ரேலிய அணிக்கு அணித் தலைவர் கிளார்க் மற்றும் வோனர் ஆகியோர் சிறப்பாக சதங்கள் விளாசி அணியை மேலும் வலுவாக்கினர். வோனர் 124, கிளார்க் 113 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க ஆஸ்திரேலிய அணி 7 இலக்குகளை இழந்து 401 ஓட்டங்களைப் பெற்று ஆட் டத்தை இடைநிறுத்தியது. பந்து வீச்சில் ரெம்லெட் 3 இலக்குகளைக் கைப்பற்றி னார்.

561 ஓட்டங்களை வெற்றியி லக்காகக் கொண்டு துடுப் பெடுத் தாடத் தொடங்கிய இங் கிலாந்து அணியை, மிச்செல் ஜோன்சன் தனது வேகத்தில் புரட்டி எடுத்தார். முதலாவது இன்னிங்ஸைப் போலவே இங்கிலாந்து அணி இரண் டாவது இன்னிங்ஸிலும் சொதப் பியது. இறுதியில் 179 ஓட்டங் களை மாத்திரம் பெற்ற சகல இலக்குகளையும் இழந்து 381 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் குக் 65 ஓட் டங்களைப் பெற்றுக் கொடுத் தார். பந்து வீச்சில் ஜோன்சன் 5 இலக்குகளைக் கைப்பற்றி னார். ஆட்டநாயகனாக ஜோன் சனே தெரிவானார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தா இல்லாத சச்சின்

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற சச்சி னுக்கு, இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.மகத்தான சாதனை கள் புரிந்த சச்சின், ஓய்வு பெற்ற பின்னர் குடும்பத்துடன் ஊர்சுற்றக் கிளம்பி விட்டார். இவருக்கு மிகவும் பிடித்த இடமான முசூரிக்கு சென் றுள்ளார். அங்கு லால்டிப்பா பகுதியில் உள்ள தனக்கு பிடித்த மான தேநீர்க் கடைக்குச் சென்றார்.சச்சின் முசூரிக்கு வரும் போதெல்லாம் தனது நண்பர் சஞ்சய் நரங் என்பவர் வீட்டில் தங்குவது வழக்கம்.

அப்போது நண்பருடன் இந்த தேநீர்க் கடைக்கு அடிக்கடி வந்த சச்சினுக்கு கடையின் உரிமையாளர் பிரத்தியேகமாக தயாரித்து தரும் மசாலா தேநீர் மிகவும் பிடித்துப் போனது.இஞ்சி, தேன், எலுமிச்சைப் பழம் சேர்த்து கடையின் உரிமையாளர் விபின் பிரகாஷ் அளிக்கும் தேநீரை ருசிப்பதற்காக மனைவி அஞ்சலியு டன் சச்சின் இந்த கடைக்கு மீண்டும் பயணம் செய்தார்.

பணிஸ் மற்றும் தேநீரை ருசித்த அவர் சுமார் 1/2 மணி நேரம் அங்கேயே இருந்து ரசிகர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

சச்சினின் வருகையைப் பற்றி மகிழ்ச்சியுடன் கூறும் விபின் பிரகாஷ், அவருக்கு இருக்கும் கோடிக் கணக்கான ரசிகர்களில் நானும் ஒருவன்.எவ்வளவு உயர்ந்த நிலைக்கு போனாலும் அவர் இப்போதும் சராசரி வாடிக்கையாளர் போல் தான் பழகுகிறார் என்று தெரிவித்துள்ளார். (கு)



# ஜேர்மனி, பிரேஸில் அணிகளுக்கு வாய்ப்பு




ஆர்ஜென்ரீனாவின் முன்னணி உதைபந்தாட்ட வீரரான லயனல் மெஸ்ஸி பார்சிலோனா அணிக் காக விளையாடி வருகிறார். சமீபத்தில் நடந்த ஐரோப்பிய உதைபந்தாட்டப் போட்டியில் அதிக கோல்கள் அடித்தமைக்காக மெஸ்ஸிக்குத் தங்கக் காலணி பரிசாக வழங்கப்பட்டது.

இந்நிலையில், பியூனஸ் அய்ர்சில் ஒரு வானொ லிக்கு மெஸ்ஸி பேட்டி அளித்தார். அப்போது, அடுத்த வருடம் பிரேஸிலில் நடக்கும் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் சம்பியன் பட்டத்தை ஜேர்மனி, பிரேஸில், ஸ்பெயின், பிரான்ஸ் அல்லது ஆர்ஜென்ரீனா அணிகள் வெல்ல வாய்ப்புள்ளது எனத் தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் ஏற்பட்ட காயம் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் குணமாகிவிடும் என நம்புகிறேன். அடுத்த ஆண்டு உலகக்கிண் ணத்தை வெல்ல வேண்டும் என விரும்புகி றேன். ஆர் ஜென்ரீனா தேசிய உதைபந்தாட்ட அணியில் எனது ஆட்டம் பற்றி கேள்வி எழுப்பி சில ரசிகர்கள் குறை கூறுவது வேதனை அளிக்கிறது. அவர்கள் என்னை விரும்பவில்லை என்றும் மெஸ்ஸி கூறினார். (கு)

ஆர்ஜென்ரீனா தேசிய உதைபந்தாட்ட அணியில் எனது ஆட்டம் பற்றி கேள்வி எழுப்பி சில ரசிகர்கள் குறைகூறுவது வேதனை அளிக்கிறது.

# என்னை மறந்து விட்டார் சச்சின்

பிரிவு உபசார விருந்து நிகழ்ச்சிக்கு டெண்டுல்கர் தன்னை அழைக்காதது மிகுந்த வேதனை அளிக்கிறது என முன் னாள் வீரர் வினோத் காம்ப்ளி தெரிவித்துள் ளார். கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர், தனது 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெற்று விட் டார்.இதன்பின் தனது நெருங்கிய நட்பு வட்டத் தினருக்கு பிரிவு உப சார விருந்து கொடுத்து அசத்தினார். இந்த விருந்து நிகழ்ச்சிக்கு வினோத் காம்ப்ளிக்கு அழைப்பு விடுக்கப்பட வில்லை. இது குறித்து காம்ப்ளி அளித்த பேட்டி யில், கடந்த 2009ஆம் ஆண்டு நான் அணிக்கு திரும்பச் சச்சின் போதுமான அளவுக்கு உதவி செய்யவில்லை.



எங்கள் இருவருக்கும் இடையிலான உறவு துண்டாகி விட்டது, அதன் பிறகு இருவரும் பேசியது இல்லை. சச்சினின் குரலை நான் கேட்டு நீண்ட நாள்கள் ஆகிறது. இது எனக்கு வேதனையை அளிக்கிறது.

கடந்த 7 வருடங்களாக நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்ததில்லை.சில எஸ்.எம்.எஸ். தகவலை மட்டும் பரிமாறி இருக்கிறோம். என்னவோ நாங்கள் இப்போது எதிரிகளாக ஆகி விட்டது போல் இருக்கிறது. இது வேதனை அளிக்கிறது.

வான்கடே மைதானத்தில் கடைசி ஆட்டத்தை முடித்த பின்னர் எனது நண்பர் சச்சினின் கண்களில் கண்ணீர் வடிவதை பார்த்த போது எனது கண்களில் கண்ணீர் முட்டியது.பிரிவு உபசார உரையில் சச்சின் எனது பெயரை குறிப்பிடுவார் என்று எதிர்பார்த்தேன்.அவர் பேசாதது எனக்கு மிகுந்த வேதனை அளித்தது.

தன்னுடன் விளையாடிய வீரர்கள், நண்பர்கள் மற்றும் அவர்களது குடும்பத் தினருக்கு அளித்த விருந்து நிகழ்ச் சிக்கு என்னையும் அழைப்பார் என்று எதிர்பார்த் தேன். 10 வயதில் இருந்தே இருவரும் எங்களு டைய எல்லா விடயங்களையும் பகிர்ந்து கொண்டு இருக்கிறோம்.

ஆட்டத்தில் இருவ ரும் சேர்ந்து வளருகையில் ஒருவரிடம் இருந்து ஒருவர் ஆட்ட நுணுக்கத்தைக் கற்றோம். நான் எப் பொழுதும் சச்சினை நண்பராகவே நினைக் கிறேன். (கு)


# சச்சின் தங்க நாணயம் விற்பனை


சச்சின் உருவம் பொறித்த தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் சில்லறை விற்பனைக்கு வரவுள்ளன. இந்திய அணியின் ஜாம்பவான் சச்சின். தனது 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இருந்து விடைபெற்றார். மத்திய அரசு தன் பங் குக்கு நாட்டின் உயரிய 'பாரத ரத்னா' விருது அறிவித்து கௌரவித்தது.

இதனிடையே, பெங்களூரைச் சேர்ந்த நகை விற்பனை நிறுவனம் ஒன்று சச்சின் உரு வத்துடன் கூடிய தங்க நாணயங்களை சில்லறை விற்பனைக் காக வெளியிடத்திட்டமிட்டுள்ளது. இதற் காக 3,000 நாணயங்கள் தயாராகி வருகின்றன.

இதுதவிர, இணையத்தளத்தின் மூலம் பதிவு செய்பவர்களுக்கான விற்பனை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது. இதே போல, மும்பையை அடிப்படையாகக் கொண்ட நிறுவனம், 10 கிராம் எடையுள்ள, வெள்ளி நாண யங்கள் வெளியிட்டுள்ளது. இணையத் தளத்தில் 20 கிராம் சச்சின் வெள்ளிக் குற்றி நாணயம் ரூ. 7,500 க்கு கிடைக்கிறது. 200 கிராம் குற்றி நாண யம் ரூ. 48,000 வரை விற்கப்படுகிறது.


இது வரை 800 எண் ணிக்கையில் இணை யத் தளத்தில் விற்பனை ஆகி யுள்ளன. (கு)




20 கிராம் சச்சின் வெள்ளிக் குற்றி நாணயம் ரூ. 7,500 க்கு கிடைக்கிறது. 200 கிராம் குற்றி நாணயம் ரூ. 48,000 வரை விற்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திருப்பியடித்தது தீவுகள் திணறி வீழ்ந்தது இந்தியா

விசாகப்பட்டிணம், நவ.25

இறுதி நிமிடம் வரையிலான பரபரப்பான ஆட்டத்தில், இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வைத்து 2 இலக்குகள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வீழ்த்தியது. முதலாவது ஆட்டத்தில் வெற்றி பெற்றிருந்த இந்திய அணிக்கு தக்க பதிலடி கொடுத்தது. சமியின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்த வெற்றியைப் பெற்றுக்கொண்டது.





முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி பெற்றுக்கொண்ட 288 ஓட்டங்களுக்குப் பதிலளித்த மேற்கிந்தியத்தீவுகள் அணி 49.3 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி மூன்று ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் விளை யாடி வருகின்றது. முதலாவது ஆட் டத்தில் இந்திய அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்த நிலையில், நேற்றைய ஆட்டத்தில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி களமிறங்கியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் டுவைன் பிராவோ முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஹோக்லி, டோனி இணை சிறந்த பங்களிப்பை வழங் கியது. தொடர்ச்சியாக அசத்தி வரும் ரோகித் 12 ஓட்டங்களுடன் பவிலி யன் திரும்பினார். தவான் 35 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஹோக்லி அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து அணியை ஸ்திரப் படுத்தினார். இவருக்கு யுவராஜ் ஓரளவு கை கொடுத்து 28 ஓட்டங்களுடன் அவரும் வெளி யேறினார்.

சிறப்பாக ஆடிய ஹோக்லி 99 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் அணித் தலைவர் டோனி ஆட்டத்தை பொறுப் புணர்ந்து ஆடினார். அஸ்வின், டோனியின் இறுதிக்கட்ட அதிரடித் தாக்குதல்கள் இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கைளை கௌரவ இலக்கை எட்ட வைத்தது. 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இந்திய அணி 7 இலக்குகளை இழந்து 288 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. டோனி ஆட்டமிழக்காமல் 40 பந்துகளில் 51 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் ரவி ராம்போல் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்

கொஞ்சம் கடினமான இலக்கை விரட்டக் களமிறங்கிய தீவுகளுக்கு ஆரம்பம் வாய்க்க வில்லை. சாள்ர்ஸ் 12, சாமுவேல்ஸ் 8 ஓட்டங் களுடனும் பவிலியனுக்கு நடையைக் கட்டினார். கிரன் பவல், டரன் பிராவோ இருவரது இணைப்பாட் டம் மேற்கிந்தியத்தீவு கள் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது. மூன்றாவது இலக்குக்காக இந்த இணை நூறு ஓட்டங்களைப் பகிர்ந்தது.

டரன் பிராவோ 50, கெரன் பவல் 59 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். இறுதிக் கட்டத் தாக்குதல்களை டரன் சமியும், சிமொன் ஸும் இணைந்து முன்னெடுத்தனர். இந்தியப் பந்து வீச்சாளர்களுக்கு தொல்லை கொடுத்த இவர்கள் மேற்கிந்தியத்தீவுகளின் வெற்றியை உறுதி செய்தனர். சமியின் அதிரடிக்கு முன்னால் டோனியின் வியூகங் கள் தவிடு பொடியாகியது. இறுதிக் கட்டத்தில் சிமொன்ஸ் 62, ஹோல்டர் 7, நரைன் ஓட்ட மெதனையும் பெறாமல் வெளியேற மேற்கிந்தியத் தீவுகள் சிறிது ஆட்டம் கண்டது. அத்துடன் இந்தியா எப்படியாவது வெல்லலாம் என்று நப்பாசை வைத்து இறுதியில் சுற்றி வளைப் புத் தாக்குதலை முன்னெடுத்தது. இருந்தும் சமியின் ஆட்டத்தில் அவை தவிடு பொடியாக 49.3 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் தீவுகள் பக்கம் வெற்றி சேர்ந்தது. இறுதிவரை ஆட்ட மிழக்காது ஆடிய சமி 45 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள், 4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 63 ஓட்டங்களைக் குவித்து வெற்றிக்கு வழி சமைத்தார். ஆட்டநாயகனாக அவரே தேர் வானார். (5)

## கையிலுள்ள காசு போதும் மிகுதியைப்பின்னர் பேசலாம்

### 3 நாள்கள் மட்டுமே அரிய வாய்ப்பு விரைந்து வாருங்கள்

மென்பனி தூவும் கனடா தேசத்துத் தெருக்களில் மாலைநேர உலாவர விரும்பும் உங்கள் கனவு நனவாக விரைந்து வாருங்கள் படிக்க உழைக்க 3 பகுதிகளாகக் கட்டணம் செலுத்தலாம்.
(முன்னர் ஆலோசனை பெற்றவர்கள் இம் 3 நாள்களும் இலவசமாக இவ்வாலோசனை பெறாலாம் நிபந்தனைகளிற்கமைவாக)

குறிப்பு:
இதுவரையில் மேற்படி ஆலோசனையில் 6 பேர் வெற்றி பெற 2 பேர் நிராகரிக்கப்பட்டுள்ளனர்.
உரிய திகதியில் வெற்றியளிக்காத காரணத்தால் 7 பேர் இதிலிருந்து பின்வாங்கியுள்ளனர்.

இவ்வடிக்குறிப்பு எமது கௌரவ இயக்குனர் சபைக்கட்டளைப்படி இங்கே பிரசுரமாகின்றது.
திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்
021 2219016 , 021 5689090
www. thisaivisa.com

## மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு.
4½ ரக்ரர் 17,500/=
தொடர்பு: கண்ணா
(40472)(4.6.3)
077 676 6499, 077 759 0792


## புத்தம் புதிய முத்தான வாய்ப்பு இத்தாலி எண்ணி 25 நாள்களில் பறக்கலாம்

படிக்க உழைக்க சட்டரீதியாகச் செல்ல அரிய வாய்ப்பு 2 வருட விசா 28.11.2013 க்கு முன் இணைந்து கொண்டால் மட்டுமே இந்த வாய்ப்பு சாத்தியமாகும்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்
021 2219016 , 021 5689090
www. thisaivisa.com

## மரண அறிவித்தல்

### Lion பா.கானமூர்த்தி (J.P)



பருத்தித்துறை-மாதனையைப் பிறப்பிடமாகவும் இல 152/6, கடற்கரை வீதி, நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட நீர்கொழும்புCITY MEDICAL உரிமையாளரும், KRESTON MNS&Co நீர்கொழும்புக் கிளை முகாமையாளரும் ஆகிய Lion பா.கானமூர்த்தி 22.11.2013 வெள்ளிக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம்- செல்லம்மா தம்பதியரின் மூத்தமகனும், காலஞ்சென்ற வேல்முருகு மற்றும் பங்கஜம் தம்பதியரின் மருமகனும், வசந்தியின் அன்புக் கணவரும், செல்வேந்திரா, பாலேந்திரா, சுரேந்திரா ஆகியோரின்பாசமிகுதந்தையும், ஜெயபாலன் (கனடா), ஸ்ரீதரன் (லண்டன்), காலஞ் சென்ற கோமதி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 27.11.2013 புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் தகனக்கிரியைக்காக அன்னாரின் இல் லத்திலிருந்து நீர்கொழும்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

152/6, கடற்கரை வீதி, நீர்கொழும்பு.

தகவல்:
குடும்பத்தினர்,
(CITY MEDICAL NEGOMBO), நீர்கொழும்பு
(40474)(3.6.4)

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை றொபேட் ரவீந்திரன் (பொண்ட் ரவி)



209, ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை (டொறாண்டோ) வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை றொபேட் ரவீந்திரன் நேற்று (24.11.2013) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை -இராசமணி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஹென்றிக்கப்பல் -யோகம்மா தம்பதியரின் மருமகனும், விஜிதாவின் அன்புக் கணவரும், ஜெறோம், டொறின்ரன் ஆன்றியா ஆகியோரின் அன்புத் தந்தையும், கீதா, குட்டி, டெஸ்ரர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அமில்டனின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 209, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: அ. றொபேட் (மைத்துனர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.11.2013இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.